www.padippakam.com

ஜூலை 2005

ரூ. 5.00

# புதிய ஜனநாயகம்



நுழைவுத் தேர்வு வழக்கு: நீதிபதிகளின் முதலைக் கண்ணீர்



சாயப்பட்டறை கழிவுநீர் விளைவித்த கோரம்

ஏற்றுமதிக் கொள்ளைக்காக திருப்பூர் முதலாளிகளின்

## பயங்கரவாதம்

படிப்பகம்

www.padippakam.com

# உத்தமர்சீலி தாழ்த்தப்பட்டோர் மீது தாக்குதல்:

# முத்தரையர் சாதிவெறியர்கள் - போலீசு கள்ளக் கூட்டு

திருச்சி, சிறீரங்கம் வட்டத்தில் அந்தநல்லூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட கிராமம், உத்தமர்சீலி.

கடந்த 18.5.05 தேதியன்று இரவு 9 மணி அளவில் திருச்சி மெயின்கார்டு கேட்டிலிருந்து, கல்லணைக்குப் போகும் தனியார் பேருந்தில் உத்தமர் சீலி கிராமத்தைச் சேர்ந்த முத்தரையர் ஆதிக்க சாதியைச் சேர்ந்த சிலரும் தாழ்த்தப்பட்ட இளைஞர்கள் இருவரும் வந்தனர். இந்த இளைஞர்கள் அவர்களுடைய 'அரிசன தெரு பஸ் ஸ்டாப்'பில் இறங்கத் தயாரான போது, முத்தரையர் சாதியினர் வேண்டுமென்றே படியில் நின்று கொண்டு வழியை மறித்தனர். அப்போது தாழ்த்தப்பட்ட இளைஞர் கையிலிருந்த 'பிளம்பர்' தொழில் செய்யும் கருவி முத்தரையர் மீது உரசியது. 'பள்ளப்பயலுக்கு என்னடா இவ்வளவு திமிரு' என்று ராஜபிரபு என்ற தழ்த்தப்பட்ட இளைஞரை முத்தரையர் சாதிவெறியர்கள் குரூரமாகத் தாக்கினர். அது மட்டுமின்றி, ஊருக்குள் சென்று 'பள்ளர்கள் தங்களைத் தாக்கிவிட்டதாக'ப் புரளி கிளப்பி, சாதிவெறியர்களைத் திரட்டிக் கொண்டு தாழ்த்தப்பட்டவர்களின் குடியிருப்பு தெருவில் நுழைந்து கண்ணில் கண்டவர்களை எல்லாம் சரமாரியாகத் தாக்கினார்கள். ''பிரச்சினை வேண்டாம். எதுவாக இருந்தாலும் பேசித் தீர்த்துக் கொள்ளலாம்'' என்று கூறிய சுப்பிரமணி என்பவரைக் கட்டையில் அடித்து அரிவாளால் தாக்கினார்கள். தடுக்க வந்த தாழ்த்தப்பட்ட பெண்களையும் கீழ்த்தரமாக ஏசி, பிரபாகரன் என்பவரின் காதைக் கிழித்தனர்.

தாக்குதலுக்கு ஆளான தாழ்த்தப்பட்ட மக்களின் நிர்பந்தத்தால் சம்பவ இடத்திற்கு வந்த போலீசு, மேல்சாதி வெறியர்களின் கிரிமினல் குற்ற ஆதாரங்களை மறைக்கும் முயற்சியில் இறங்கியது. அடிபட்ட தாழ்த்தப்பட்ட மக்களை மருத்துவமனைக்கு அனுப்பி, இரத்தக் காயங்களைப் பதிவு செய்யாமல் - அவர்களுக்கு மருத்துவம் பார்க்காமல், போலீசு நிலையம் செல்லுமாறு கூறிவிட்டு, மேல்சாதியினரிடம் தனியாக 'சமாதானம்' பேசியது.

'சமாதானம்' என்ற பெயரில் போலீசின் கட்டப் பஞ்சாயத்துக்கு உடன்பட மறுத்த தாக்குதலுக்கு ஆளான தாழ்த்தப்பட்ட மக்கள், சாதிவெறியர்கள் மீது கிரிமினல் குற்றவழக்குகள் பதிவு செய்யுமாறு போராடினர். அதன் பிறகு போலீசு, ஒப்புக்கு 8 பேரை மட்டுமே கைது செய்தது. அவர்களின் மீது கடுமையற்ற குற்றப்பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்தது; முதலாளித்துவப் பத்திரிக்கைகளும் மேல்சாதி வெறியை மறைத்து ''கோஷ்டி மோதல்'' என்று திரித்து எழுதின.

இதனால் இன்னமும் கூடுதலாக கொழுப்பெடுத்து திரிகின்றனர், முத்தரையர் சாதிவெறியர்கள். ''எங்களை நம்பித்தான் அவனுங்க (தாழ்த்தப்பட்டவர்கள்) பொழைக்கிறானுங்க, எங்க சாதிக்காரங்க வாழைத் தோட்டத்தில் இலை அறுத்துதான் பொழைக்கிறாங்க. இதுக்கு வேட்டு வைச்சாதான் இவனுங்க அடங்குவானுங்க. திருச்சியில் நடக்கிற எங்க (சாதி) மாநாடு முடிஞ்ச கையோட, அடுத்ததா இந்த பிரச்சினையை என்ன செய்யறதுன்னு முடிவு செய்வோம்'' என்று பகிரங்கமாக அறிவிக்கின்றனர். தாழ்த்தப்பட்டவர்கள் மீதான அடுத்த கட்ட தாக்குதலுக்கு இப்போதே தோள் தட்டுகின்றனர்.

முத்தரையர் சாதி வெறியர்களால் தாக்கப்பட்ட சுப்பிரமணியன்.



ஏற்கெனவே, '95 மற்றும் 99-ஆம் ஆண்டுகளில் தாக்குதல் தொடுத்த முத்தரையர் சாதிவெறியர்களுக்கு எதிராகத், தாழ்த்தப்பட்ட மக்கள் திரண்ட போது, ''இப்படிப்பட்ட சம்பவங்கள் இனிமேல் நடக்காது'' என்று முத்தரையர் சாதியின் 8 பட்டயதாரர்கள் சேர்ந்து எழுதிக் கொடுத்தனர். இதன்மூலம் தாழ்த்தப்பட்டவர்களிடமிருந்து தங்கள் தோலை அப்போது பாதுகாத்துக் கொண்டனர். இப்போது இந்த சாதிய ஓநாய்கள் மீண்டும் தாழ்த்தப்பட்டோர் மீது பாய்கின்றன. காரணம், உயர்சாதி வெறிகொண்ட போலீசும் அதிகார வர்க்கமும் சாதிவெறியர்களுக்குக் கேடயமாக, முழுப் பாதுகாப்பு அளிக்கின்றன.

உத்தமர் சிலி கிராமத்தில் இருக்கும் சி.பி.எம் கட்சியின் நீலமேகம் என்பவர், ''இது சாதிவெறி தாக்குதல் அல்ல. வேலைக்குப் போற பசங்களுக்குள்ள ஏற்பட்ட பிரச்சினை'' என்று தொழிலாளி வர்க்கத்திற்குள் நடக்கும் வீண்தகராறு போல புளுகுகிறார். ''இந்த தாக்குதல் நடந்தபோது நீங்கள் ஏன் தலையிடவில்லை?'' என்ற கேள்விக்கு, ''நான் முத்தரையர் சாதிக்காரன். நான் தலையிட்டால் பிரச்சினை பெரிதாகும்'' என்றார். தான் ஒரு கம்யூனிஸ்டு என்று அடையாளத்தைவிட தன்னுடைய உயர்சாதி அடையாளத்தைத்தான் அவர் மக்களிடம் பதிய வைத்திருக்கிறார்.

அரசு எந்திரம், அதிகார வர்க்கம், போலீசு மற்றும் ஓட்டுச் சீட்டு அரசியல்வாதிகள் - இவர்களின் கள்ளக்கூட்டோடு திரியும் முத்தரையர் சாதிவெறியர்களைப் பகிரங்கமாக தண்டிப்பதன் மூலம்தான் தாழ்த்தப்பட்டோருக்கு நீதி கிடைக்கும். இதற்கு குறுக்கு வழி ஏதும் இல்லை. சமரசமற்ற போராட்டத் தலைமையும் ஜனநாயக சக்திகளின் ஆதரவும் தான் இதற்கு முன்தேவை.

- பு.ஜ. செய்தியாளர், திருச்சி


படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

**தொகுதி: 20**

**இதழ் 9**

**ஜூலை 2005**

*உள்நாடு*
**தனி இதழ்: ரூ. 5.00**
**ஆண்டு சந்தா: ரூ. 60.00**

*வெளிநாடுகள்*
**(வான் அஞ்சலில்)**
**ஆண்டு சந்தா: US$ 10**



*படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்*

**புதிய ஜனநாயகம்,**
**110, இரண்டாம் தளம்,**
**63, என்.எஸ்.கே. சாலை,**
**(அ.பெ.எண்: 2355)**
**கோடம்பாக்கம்,**
**சென்னை - 600 024.**


## நுழைவுத்தேர்வு:

# என்ன செய்கிறார்கள் எதிரிகளும் துரோகிகளும்?

**ச**மூகம் - கல்வி, அரசியல்-பொருளாதாரம் ஆகிய பலவகைகளிலும் ஒடுக்கப்படும் உழைக்கும் மக்கள், தமது வாழ்வுரிமை, வாழ்வாதாரங்களுக்கான போராட்டங்களை நடத்தவேண்டிய களம் தேர்தல்களோ, நாடாளுமன்றம் - சட்டமன்றங்களோ, நீதிமன்றங்களோ அல்ல. அவற்றுக்கு வெளியே எழுச்சிக் களங்களை உருவாக்க வேண்டும். இந்த உண்மையை தொழிற்கல்விக்கான நுழைவுத்தேர்வு ரத்தை செல்லாது என்று தீர்ப்புக் கூறியதன் மூலம் நீதிமன்றம் மீண்டும் உறுதிப்படுத்தியிருக்கிறது. பொதுவில் தனியார்மயம், தாராளமயம், உலகமயமாக்கம் ஆகிய விவகாரங்கள் - தொழிற் தகராறுகளில் மட்டுமல்ல, குறிப்பாக, இட ஒதுக்கீடு, தொழிற்கல்விக்கான மாணவர் சேர்க்கைக்கான பல்வேறு வழக்குகளிலும் ஆளும் வர்க்கங்கள், பன்னாட்டுத் தொழில் கழகங்கள், மேல்சாதி-மேட்டுக்குடி நலன்களைப் பாதுகாக்கும் வகையிலேயே நீதிமன்றத் தீர்ப்புகள் அமைகின்றன.

இடஒதுக்கீடு கொள்கையை எதிர்த்த அதே மேல்சாதி - மேட்டுக்குடியினர், அதே ''தகுதி, தரம், திறமை'' ஆகிய காரணங்களை முன்வைத்து, இப்போது தொழிற்கல்விக்கான நுழைவுத் தேர்வு ரத்தையும் கடுமையாக எதிர்க்கின்றனர். நீதிமன்றமோ, அதற்குச் சட்டபூர்வ நியாயங்கற்பித்துள்ளது. ஒரு மாநிலத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட கல்வித் திட்டங்கள், ஒன்றுக்கு மேற்பட்ட பல்கலைக் கழகங்கள் / கல்லூரிகள் இருந்தால் (அதாவது தமிழ்நாட்டில் ''மாநிலம்'', ''சி.பி.எஸ்.சி.'' மற்றும் ''ஐ.எஸ்.சி'' ஆகிய மூன்று வகை பாடத்திட்டங்களும் தேர்வுகளும் மதிப்பெண் முறைகளும் உள்ளன). ''சமநிலையை ஏற்படுத்த'' பொது நுழைவுத் தேர்வு நடத்தப்பட்டு, தொழிற்கல்விக்கான மாணவர்களின் தரவரிசையை நிர்ணயிக்க வேண்டும்; அதனடிப்படையில் மாணவர் சேர்க்கை நடைபெற வேண்டும். இவை இந்திய மருத்துவக் கல்வி கவுன்சில் மற்றும் அனைத்திந்திய தொழில்நுட்பக் கல்வி கவுன்சில் ஆகியவை உருவாக்கியுள்ள விதிமுறைகளில் அடங்கியவை. இவை அரசியல் சட்டம் 14-வது பிரிவின்படி ''சமத்துவ அடிப்படையிலான'' விதிமுறையாகவும் சட்டமாகவும் 1997-ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டன. இச்சட்டத்தை நியாயப்படுத்தி உச்சநீதி மன்றமும் சில தீர்ப்புகள் வழங்கியுள்ளது. இச்சட்டத்துக்கு விரோதமாக தமிழக அரசு ஒரு உத்திரவு போட்டு, நுழைவுத் தேர்வை ரத்து செய்தது செல்லாது என்று சென்னை உயர்நீதி மன்றம் கூறிவிட்டது.

வெவ்வேறு கல்வி-பாடத் திட்டங்கள், வெவ்வேறு தேர்வு ஆணையங்கள் - தேர்வு முறைகள் - மதிப்பீடுகள் பெற்று வரும் மாணவர்களிடையே தரத்தில் சமநிலை - சமத்துவமான வாய்ப்புகளை ஏற்படுத்தவே பொது நுழைவுத் தேர்வு வந்தது என்பதே உண்மையல்ல; அது ஒரு பித்தலாட்டமாகும். இந்த வேறுபாடுகள் எல்லாமே நகர்ப்புறத்துக்கும் கிராமப்புறத்துக்கும் இடையே நிலவும் வசதி-வாய்ப்புகள், மேல்சாதி-மேட்டுக்குடிக்கும் ஒடுக்கப்பட்ட சாதி - ஏழை, எளிய மக்களுக்கும் இடையே சமூகத்தில் நிலவும் சமநிலையின்மை - அசமத்துவம் ஆகியவற்றுக்கேற்ப ஏற்படுத்தப்பட்டவைதான். கீழே தள்ளிய குதிரை குழியும் பறித்ததைப் போல, இந்நிலையை மேலும் உறுதிப்படுத்துவதுதான் பொது நுழைவுத் தேர்வு முறை. அதாவது, நகர்ப்புற மற்றும் மேல்சாதி - மேட்டுக்குடியினருக்காக ஏற்படுத்தப்பட்டவை தாம் ஆங்கில வழிக் கல்வியும், சி.பி.எஸ்.சி. மற்றும் ஐ.எஸ்.சி. பாடத்திட்டங்களும் ஆகும்; கிராமப்புற மற்றும் ஒடுக்கப்பட்ட சாதி-ஏழை, எளிய உழைக்கும் மக்களுக்காக இருப்பவைதாம் தமிழ் வழிக் கல்வியும் அரசு பாடத் திட்டக் கல்வியும் என்பதில் சந்தேகமில்லை.

சி.பி.எஸ்.சி. மற்றும் ஐ.எஸ்.சி. பள்ளிகளுக்கு நன்கொடை, கல்விக் கட்டணங்கள், சிறப்புப் பயிற்சிகள் உட்பட ஆண்டுக்குப் பல ஆயிரம் ரூபாய் அளவு செலவிடப்படுகிறது. இது தவிர, அதே காலத்தில் பொது நுழைவுத் தேர்வுக்காக இரண்டு ஆண்டுகள் வரை தனிப் பயிற்சியளிக்கும் நிறுவனங்கள், பயிற்சி நூல்கள் ஆகிய வகைகளில் இலட்சக்கணக்கில் செலவிடப்படுகிறது. இவற்றை கிராமப்புற, ஒடுக்கப்பட்ட சாதி-ஏழை, எளிய மக்களின் பிள்ளைகள் கனவிலும் அடையவே முடியாது என்பதை அறிந்தும், நீதிமன்றங்களும் மேல்சாதி-மேட்டுக்குடி அறிவுஜீவிகளும், பொதுவில் அரசியல்வாதிகளும் அப்பாவிப் பெற்றோர்கள் - மாணவர்களின் நலன்கள் பாதிக்கப்படுவதாக ஒப்பாரி வைக்கிறார்கள்.

ஒருபுறம், வாய்ப்பு வசதிகள் நிரம்பி வழியும் வாழ்க்கை - கல்வி - சமூகப் பின்னணி கொண்ட மாணவர்கள்; மறுபுறம், இவையெல்லாம் மறுக்கப்பட்ட பின்னணி

www.padippakam.com

யில் இருந்து வரும் மாணவர்கள் - இப்படி சம வாய்ப்புகள் மறுக்கப்பட்ட சமநிலையற்ற பின்னணி கொண்ட இரு வேறு பிரிவு மாணவர்களுக்கு ஒரே பொதுப் போட்டி, தேர்வு வைத்து அவர்களின் தகுதி, தரம், திறமையைத் தீர்மானிப்பது எந்த விதத்தில் நீதியானதாகும்? இது எப்படி சமநிலையை ஏற்படுத்தக் கூடியது, சமத்துவ அடிப்படையிலானது?



நுழைவுத் தேர்வு ரத்துக்கெதிரான வழக்குப் போட்டு சாதகமான தீர்ப்பும் பெற்ற மேல்சாதி-மேட்டுக்குடி மாணவர்கள்.

ஆகவே, பொதுவில் சமூக - சாதி ரீதியிலான இடஒதுக்கீடு, கிராமப்புற மாணவர்களுக்கான இடஒதுக்கீடு, விதவைப் பெண்கள் - மொழிப் போர் தியாகிகளுக்கான இடஒதுக்கீடு போன்றவற்றுக்கு எதிரான நிலை எடுத்திருக்கும் நீதித்துறை மேற்கண்ட உண்மைகளை அறிந்தே தமது சாதி-வர்க்க நலன்களுக்காகவே நுழைவுத் தேர்வு ரத்துக்கு எதிரான தீர்ப்பு வழங்கியிருக்கிறது.

இவை ஒருபுறம் இருக்க, தொழிற் கல்விக்கான நுழைவுத்தேர்வு என்பதே கேலிக்கூத்தாக உள்ளது. நுழைவுத் தேர்வு வைக்கவேண்டும் என்று சட்டமும் விதிமுறையும் பொதுவில் கூறுகிறதே தவிர, அதற்கான கல்வி வரையறையோ, அதிகார வரையறையோ எதுவும் கிடையாது. ஏற்கெனவே, அண்ணா பல்கலைக்கழகம், அண்ணாமலை மற்றும் நிகர்நிலைப் பல்கலைக் கழகங்கள் நடத்தும் தனித்தனி நுழைவுத் தேர்வுகள்; புற்றீசல்கள் போல பெருகியுள்ள தனியார்-சுயநிதி கல்வி நிறுவனங்களின் சங்கங்கள் தனியாக நடத்தும் நுழைவுத் தேர்வுகள் என்று குறைந்தது பத்துத் தேர்வுகளாவது நடத்தப்படுகின்றன.

இவை தவிர, தனியார்-சுயநிதிக் கல்வி நிறுவனங்களின் நிர்வாக இட ஒதுக்கீடுக்கு எந்த அடிப்படையில் நுழைவுத் தேர்வு நடத்துவது என்கிற குழப்பமும் தீர்க்கப்படவில்லை. எல்லாவற்றுக்கும் மேலாக, தனியார் நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களும், சுயநிதிக் கல்லூரிகளும் +2 இறுதித் தேர்வு முடிந்தவுடன் இலட்சக்கணக்கில் பணத்தைப் பெற்றுக் கொண்டு மதிப்பெண்கள், நுழைவுத் தேர்வுகளையும் பற்றி அக்கறையின்றி மாணவர் சேர்க்கைகளை இரகசியமாக செய்து வருகின்றன.

இவ்வாறு ஒடுக்கப்பட்ட சாதி - கிராமப்புற ஏழை, எளிய மக்களுக்கான வாய்ப்புகள் பலவழிகளிலும் மேல் சாதி - மேட்டுக்குடியினரால் பறித்துக் கொள்ளப்படும் அதேவேளையில், சமூக நீதி, இடஒதுக்கீடு ஆகியவை பற்றி வாய்ச்சவடால் அடிக்கும் ஜெயலலிதா, கருணாநிதி, இராமதாசு, வைகோ போன்றவர்களோ, அவர்களின் முதுகில் குத்தித் துரோகமிழைக்கின்றனர். நுழைவுத் தேர்வை உரிய காலத்திலும் சட்டப்படியும் ரத்து செய்வதற்குப் பதிலாக, ஜெயலலிதா அரசு வெறுமனே ஒரு உத்தரவு போட்டு நாடகமாடுகிறது.

இதுவரை எல்லா வகையிலும் கிராமப்புற ஒடுக்கப்பட்ட சாதி, ஏழை-எளிய மக்களுக்கு எதிரான பிற்போக்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்த ஜெயலலிதா அரசு, தேர்தல்கள் நெருங்கும் போது சில சலுகைகளைக் காட்டி ஏமாற்றும் முயற்சியின் ஒரு பகுதியாக நுழைவுத் தேர்வு ரத்து முடிவை எடுத்துள்ளது. அவரது ''உடன்கட்டைப் புரட்சித் தலைவர்'' எம்.ஜி.ஆர்.தான் இந்த நுழைவுத் தேர்வு முறையையே முதன்முதலில் இங்கு கொண்டு வந்தவர். சுயநிதிக் கல்லூரிகள் என்ற பெயரில் கல்விக் கொள்ளைக்கான கதவுகளைத் திறந்து விட்டவர்.

நுழைவுத் தேர்வு முறைக்கு எதிராக இன்று குதியாட்டம் போடும் இராமதாசு, வைகோ மற்றும் ஜெயலலிதா கட்சிகள் மத்திய அரசில் பங்கேற்றிருந்த சமயத்தில் தான் நுழைவுத்தேர்வு முறை சட்டமாக்கப்பட்டது. நுழைவுத் தேர்வு முறையை புகுத்துவதற்கான முயற்சி 1970-களில் கருணாநிதி ஆட்சிக் காலத்திலேயே தொடங்கி, அப்போதே ஈ.வெ.ரா. பெரியார் அதை எதிர்த்திருக்கிறார்.

தனியார் சுயநிதிக் கல்லூரிகள் - நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களின் பகற்கொள்ளையும், அரசே மேற்கொண்டுள்ள கல்விக் கட்டண அதிகரிப்புகளும் காரணமாக ஒடுக்கப்பட்ட சாதி மற்றும் கிராமப்புற ஏழை, எளிய உழைக்கும் மக்களின் பிள்ளைகள் தவறிப் போய் தொழிற்கல்விக் கல்லூரிகளில் சேர்வதற்கு வாய்ப்புக் கிட்டினாலும் தொடர்ந்து படிப்பதற்கான பொருளாதார வசதி கிடையாது. தகுந்த புரவலர்களைத் தேடி அலைய வேண்டியுள்ளது. இவர்கள் படிப்பைத் தொடர முடியாமல் பாதியிலேயே கைவிடுவதோடு, சில சமயம் தற்கொலைக்குக் கூடத் தள்ளப்படுகிறார்கள்.

இராமதாசு போன்றவர்கள் மட்டுமல்ல கல்விக் கொள்ளையர்களின் தலைவர் ஜே.பி.ஆரும் நுழைவுத் தேர்வு ரத்தை தீவிரமாக ஆதரிப்பது, தனியார் தொழிற்கல்வி நிறுவனங்கள் வரைமுறையின்றி மாணவர் சேர்ப்புக்கு வசதியாக செய்யப்படும் ஒரு கண்துடைப்பு சீர்திருத்தம்தான் என்பதை நிரூபிக்கிறது.

வெவ்வேறு பாடத்திட்டங்களை ஒழித்து ஒரே பொதுப் பாடத்திட்டம், தனியார் சுயநிதிக் கல்லூரிகள் - நிகர்நிலைப் பல்கலைக் கழகங்களை ஒழித்து அரசே கல்வி நிறுவனங்களை நடத்துவது, அவையும் ஒடுக்கப்பட்ட சாதிகள் மற்றும் கிராமப்புற - நகர்ப்புற ஏழை எளிய உழைக்கும் மக்களின் பிள்ளைகள் நுழைவதற்கு தடையின்றி அமைப்பது போன்ற அடிப்படை கோரிக்கைகளுக்காக போராடுவதை விட்டு, சில தற்காலிகத் தீர்வுகளைக் காண விழைவது எந்த வகையிலும் பயனளிக்காது! ●

www.padippakam.com



# நச்சு ஆலைக்கு எதிராக...
# தொடரும் விவசாயிகளின் போராட்டம்

நாகப்பட்டினம் மாவட்டம் வேதாரண்யம் வட்டத்தில் கடற்கரையை ஒட்டியிருக்கும் ஜி.எச்.சி.எல். ஆலையின் நச்சுக் கழிவால், "40 கி.மீ. வட்டச் சுற்றுக்குள் உள்ள பகுதிகள் பாலைவனமாய் மாறிவிடும் அபாயம் ஏற்படும்" என்று அவ்வாலையினால் ஏற்பட்ட கேடுகளை பட்டியலிட்டு எச்சரித்ததோடு உடனடியாக, ஜி.எச்.சி.எல். நச்சு ஆலையின் "மின் இணைப்பைத் துண்டிக்கவும்", "ஆலையின் உற்பத்தியை நிரந்தரமாக நிறுத்தி வைக்கவும்" வேதாரண்யம் ஊராட்சி ஒன்றியம் ஆணை நிறைவேற்றி, அதை அரசின் சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்பி உடனடியாக அமல்படுத்தக் கோரியது.

கிராம பஞ்சாயத்துக்களின் ஊராட்சி ஒன்றியம் நிறைவேற்றிய ஆணையை குப்பைக் கூடையில் வீசியெறிந்தது, அதிகார வர்க்கம். உடனே, ஜி.எச்.சி.எல். ஆலை எந்த பாதிப்பும் இன்றி தொடர்ந்து இயங்க போலீசு மற்றும் அரசு எந்திரங்கள் மூலம் கூடுதல் பாதுகாப்பளித்தது, அதிகார வர்க்கம்.

இந்த நச்சு ஆலையைப் பற்றி சுமார் இரண்டாண்டுகளுக்கு முன்பே புதிய ஜனநாயகம் ஏடு அம்பலப்படுத்தியிருந்தது. "உப்பு ஆலையா? நச்சு ஆலையா?" என்ற தலைப்பில் அதன் அபாயத்தை ஆதாரங்களுடன் விளக்கியிருந்தது.

•••

வேதாரண்யம் கடற்கரையை ஒட்டிய கிராமங்களின் தென்பகுதியில் 30 ஆயிரம் ஏக்கர் அளவுக்கு பரந்து விரிந்துள்ள சதுப்பு நிலப் பகுதியில் அமைந்துள்ளது, ஜி.எச்.சி.எல். ஆலை. அப்பகுதியின் கிராம மக்கள் சிறு அளவிலான உப்பளங்கள் அமைத்து, காலங்காலமாக உப்பு உற்பத்தி செய்து வந்தனர்.

1963-ஆம் ஆண்டு, அப்பகுதியை 'விம்கோ' என்ற உப்பு உற்பத்தி நிறுவனம் அரசிடமிருந்து 40 ஆண்டுகளுக்கு குத்தகை எடுத்தது. முதல் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு குத்தகைக் கட்டணமாக ஏக்கர் 1-க்கு ஒரு ரூபாய் என்று அடிமாட்டு விலைக்கு ஒப்பந்தம் போடப்பட்டது.

1991-ஆம் ஆண்டு விம்கோ நிறுவனம், டி.சி. டபிள்யூ என்ற நிறுவனத்திற்கு தனது குத்தகை உரிமையை விற்றது. குத்தகையைப் பெற்ற டி.சி. டபிள்யூ நிறுவனம் சட்ட விரோதமாக தனது குத்தகையை ஜி.எச்.சி.எல். என்ற டால்மியா தரகு முதலாளித்துவ நிறுவனத்திற்கு உள்குத்தகைக்கு விற்றது. பிறகு, இரண்டு கொள்ளை நிறுவனங்களும் போட்டி போட்டுக் கொண்டு அப்பகுதி சதுப்பு நிலத்தின் இயற்கை வளங்களை முழுவதுமாக சூறையாடின.

உணவு உப்பு தயாரிப்பு ஆலை என்ற பெயரில், சட்ட விரோதமான முறையில் வெடிமருந்து மற்றும் உரம் தயாரிப்பதற்கான இரசாயன மூலப் பொருட்கள் தயாரிக்கும் வேலையில் இறங்கியது, ஜி.எச்.சி.எல். ஆலை.

அபாயகரமான இந்த இரசாயன மூலப் பொருட்கள் ஆலைக்குள், முத்திரை இல்லாத மூட்டைகளில் அடைக்கப்பட்டு வெளியூர்களுக்கு அனுப்பப்படுகின்றன. இந்த இரகசியம், வெளியில் கசியாமல் இருக்க, அவ்விடங்களில் வேலை பார்த்த உள்ளூர் தொழிலாளர்களை அகற்றிவிட்டு வெளிமாநில ஆட்களை அமர்த்தியது, ஆலை நிர்வாகம்.

இப்பகுதியில் இயங்கும் விவசாயிகள் விடுதலை முன்னணி ஜி.எச்.சி.எல். ஆலையை பாதுகாக்கும் அதிகாரவர்க்கம் மற்றும் அரசு எந்திரத்தை எதிர்த்து பிரச்சார இயக்கம் மேற்கொண்டது. காய்ந்த சருகுகளாக சிதறி கிடந்த விவசாயிகளின் வெஞ்சினம் தீயாக எழுந்தது. ஆலைக்கு எதிராக அப்பகுதியிலுள்ள கடினவயல் கிராமத்தினர் ஆர்த்தெழுந்தனர். நூற்றுக்கணக்கில் திரண்டு நச்சு ஆலையின் உள்ளே நுழைந்து ஆலையை இயங்கவிடாமல் தடுத்தனர். போராடிய விவசாயிகள் வன்முறையில் இறங்கியதாக பெண்கள் உள்பட 69 பேர்களை பிணையில் விடமுடியாத பொய் வழக்குகளின் கீழ் கைது செய்து சிறையில் அடைத்தது, போலீசு.

அரசு எந்திரத்தின் அடக்குமுறைக்கும் போலீசின் பொய் வழக்குகளுக்கும் பணிய மறுத்த விவசாயிகள் போர்க் குணத்தோடு மீண்டும் போராட்டங்களில் அணிதிரளுகின்றனர். போராடும் விவசாயிகளுக்கு ஆதரவாக தற்போது, ஐ.என்.டி.யு.சி உப்பு உற்பத்தியாளர் சங்கமும் களத்தில் இறங்கியுள்ளது. விவசாயிகளுக்கு ஆதரவாக, இப்பகுதியின் ஒன்றிய தலைவரான பி.வி. குழந்தைவேல் அவர்களும் போராட்டக் களத்தில் நிற்கின்றார்.

நிலத்தடி நீரை உறிஞ்சி, நச்சுக்கழிவுகளை வெளியேற்றி கேரளத்தின் பிளாச்சிமடா பகுதியையே சுடுகாடாக்கிய கொக்கோ - கோலா நிறுவனத்தின் உரிமத்தை புதுப்பிக்க மறுத்த பிளாச்சிமடா கிராமத்தின் பஞ்சாயத்து தீர்ப்பை ஏற்க முடியாது என்று பகிரங்கமாக அறிவித்து, "கோக்"கிற்கு மீண்டும் உரிமம் வழங்கியது கேரள உயர்நீதி மன்றம். தமிழகத்தில் நீதிமன்றம் அல்ல, போலீசின் குண்டாந்தடியே தீர்ப்பு எழுதுகிறது. எனவேதான், ஜி.எச்.சி.எல். நச்சு ஆலை எந்த பாதிப்பும் இல்லாமல் தொடர்ந்து இயங்குகிறது. ஆலையை இழுத்து மூடக்கோரும் மக்கள் திரள் ஆர்ப்பாட்டங்கள் மட்டுமே இறுதி தீர்ப்பாக அமையும்.

பு.ஜ. செய்தியாளர் உதவியுடன்
**பச்சையப்பன்**


படிப்பகம்

# ஏற்றுமதி கொள்ளைக்காக திருப்பூர் முதலாளிகளின் பயங்கரவாதம்

திருப்பூர் என்றதும், நமக்கெல்லாம் சட்டென்று நினைவுக்கு வருவது, அங்கு நடைபெறும் பனியன் ஏற்றுமதித் தொழில்தான். ஏறத்தாழ இருபது ஆண்டுகளுக்கு முன்பு வெறும் 15 கோடி ரூபாயாக இருந்த திருப்பூர் நகரின் பனியன் ஏற்றுமதி, 2004-இல் 6,000 கோடி ரூபாயாக, பிரம்மாண்ட வளர்ச்சி அடைந்திருக்கிறது. இந்திய அரசிற்கு அந்நியச் செலாவணி ஈட்டித் தருவதாகவும்; திருப்பூரைச் சேர்ந்த 4,500 முதலாளிகளுக்குப் பொன் முட்டை இடும் வாத்தாகவும் பனியன் ஏற்றுமதித் தொழில் அமைந்திருக்கிறது. அகில உலகமுமே அறிந்திருக்கும் திருப்பூர் நகரின் இந்த பிரம்மாண்டமான வளர்ச்சி, ஏறத்தாழ 50,000 விவசாயிகளின் வாழ்க்கையை உருத்தெரியாமல் அழித்து வருவது உங்களுக்குத் தெரியுமா?

திருப்பூரில் இருந்து 20 கி.மீ. தூரத்தில் அமைந்திருக்கும் ஓரத்துப்பாளையம் கிராமத்திற்குச் சென்று பாருங்கள். திருப்பூரின் தொழில் வளர்ச்சி, அந்தக் கிராமத்தைப் புல், பூண்டுகூட முளைக்க இலாயக்கற்ற பாலைவனமாக மாற்றியிருப்பதைத் தெரிந்து கொள்ள முடியும். அங்கிருந்து, நொய்யல் ஆறு கரூர் நகருக்கு அருகே காவிரியில் கலக்கும் நெய்க்குப்பம் வரை, நொய்யல் ஆற்றின் கரையில் அமைந்துள்ள கிராமங்களைச் சென்று பாருங்கள். திருப்பூரின் தொழில் வளர்ச்சி, விவசாயத்திற்கு எதிரியாக மாறிப் போயிருப்பதை நேரடியாகப் பார்க்க முடியும்.

மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகும் நொய்யல் ஆறு, கோவை, ஈரோடு, கரூர் மாவட்டங்களின் வழியாக ஓடி, கரூருக்கு அருகே காவிரியில் கலக்கிறது. பெருந்துறை, காங்கயம், கரூர் பகுதிகளைச் சேர்ந்த 10,875 ஏக்கர் விளைநிலங்களுக்குப் பாசன வசதி அளிக்கும் நோக்கத்தோடு, ஓரத்துப்பாளையத்தில் நொய்யல் ஆற்றின் குறுக்கே அணை கட்டப்பட்டு, 1992-ஆம் ஆண்டு திறக்கப்பட்டது.

வெள்ளைக்காரன் ஆண்ட காலத்திலேயே நொய்யல் ஆற்றின் குறுக்கே பெரிய அணை கட்ட வேண்டும் எனக் கோரிக்கை வைத்த இப்பகுதி விவசாயிகள், இப்பொழுது, 1992-இல் திறக்கப்பட்ட இந்த அணையைக் குண்டு வைத்துத் தகர்த்துவிட வேண்டும் எனக் குமுறுகிறார்கள். ஏனென்றால், இந்த ஓரத்துப்பாளையம் அணை, பாசனத்திற்காக நொய்யல் நதி நீரைத் தேக்கி வைக்கப் பயன்படவில்லை. மாறாக, திருப்பூர் பின்னலாடை தொழிலைச் சேர்ந்த சாயப் பட்டறைகளில் இருந்து நொய்யல் ஆற்றில் விடப்படும் கழிவு நீரைத் தேக்கி வைக்கும் அணையாக மாறிவிட்டது.

•••

திருப்பூர் பனியன் ஏற்றுமதித் தொழில் சூடு பிடிக்கத் தொடங்கிய 1985-86-இல் 99 ஆக இருந்த சாயப் பட்டறைகளின் எண்ணிக்கை, தாராளமயம் நடைமுறைக்கு வந்த 1991-92இல் 551 ஆக உயர்ந்து, 2004-இல் 800-ஐத் தொட்டு விட்டது. சுற்றுச்சூழலுக்குக் கேடு விளைவிக்கக் கூடிய அபாயகரமான தொழிற்சாலைகள் ஆற்றின் கரையில் இருந்து 3 கி.மீ. தள்ளி இருக்க வேண்டும் என்கிறது சட்டம். ஆனால், இந்தச் சட்டத்தை சாயப் பட்டறை அதிபர்கள் மயிரளவுக்குக் கூட மதிக்கவில்லை; அதிகாரிகளும் கண்டு கொள்ளவில்லை. இந்த சாயப் பட்டறைகள் அனைத்தும் நொய்யல் மற்றும் அதன் துணை ஆறுகளின் கரையோரமாகத்தான் அமைந்திருக்கின்றன.

இந்தச் சாயப்பட்டறைகள் அனைத்திலும் ஐரோப்பாவில் தடை செய்யப்பட்டுள்ள புரோசியான் என்ற தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திதான் துணிகளில் சாயம் ஏற்றப்படுகிறது. தினந்தோறும் இந்தச் சாயப் பட்டறைகளில் இருந்து வெளியேறும் 10 கோடி லிட்டர் கழிவு நீர் சுத்தம் செய்யப்படாமல் நொய்யலிலும், அதன் துணை ஆறுகளிலும் தான் திறந்து விடப்படுகிறது.

இதன் விளைவாக, முன்னொரு காலத்தில் காஞ்சி மாநதி என்று அழைக்கப்பட்ட நொய்யல், சிறுவாணிக்கு இணையான நதியாக இருந்த நொய்யல், இன்று கழிவுநீர் குட்டையாக, விஷ ஆறாக மாற்றப்பட்டு விட்டது. 40 அடி உயரம் கொண்ட ஓரத்துப் பாளையம் அணையில், இன்று 39 அடி உயரம் அளவிற்கு திருப்பூர் சாயப்பட்டறை கழிவுநீர்தான் தேங்கி நிற்கிறது.

•••

ஓரத்துப்பாளையம் அணை கட்டப்படுவதற்கு முன்பாக, நொய்யல் ஆற்றுப் பகுதி கடலை, பருத்தி, வாழை, மஞ்சள், கரும்பு, சோளம், நெல் எனப் பலவிதமான பயிர்கள் விளையும் பூமி

சாயப்பட்டறைக் கழிவுகளால் நிரம்பி வழியும் ஓரத்துப்பாளையம் அணை (உள்படம்) அணையைச் சுத்தப்படுத்தக் கோரி விவசாயிகள் நடத்திய உண்ணாவிரதம்.



www.padippakam.com



முன் அட்டையில் காணப்படும் சிறுமி செல்வப் பிரியாவின் முழு உருவம்; ஆறு ஆண்டுகளுக்கு முன் சாயப்பட்டறை கழிவு நீரில் குளித்ததையடுத்து, அச்சிறுமியின் உடலெங்கும் கொப்பளம் கொப்பளமாக வெடித்துச் செல்லரித்துக் கொண்டிருக்கும் கோரம். ஐரோப்பாவிற்குப் பனியன் ஏற்றுமதி செய்து அமெரிக்க டாலராகச் சம்பாதிக்கும் திருப்பூர் முதலாளிகள், இச்சிறுமியை ஆடை கூட உடுத்த முடியாமல் செய்து விட்டார்கள்.

யாக இருந்து வந்தது. ஆனால், இப்போது தென்னை மரத்தைத் தவிர எதுவும் வருவது இல்லை. ''தென்னை மரமும் காய் குறைவாக காய்க்கிறது. எல்லாம் குரும்பையாக உதிர்ந்து விடுகிறது. தேங்காய் தண்ணீர் உப்பாக இருப்பதால், இளநீரைக் குடிக்க முடியாது'' என்கிறார் செம்மண் குழிபாளையத்தைச் சேர்ந்த ஜெகந்நாதன் என்ற விவசாயி.

''அணைக்கட்டுப் பகுதியில் இருந்து வீசும் காற்றும், மண்ணும் இரும்பைக் கூட அரித்துத் தின்றுவிடும் விஷத் தன்மை கொண்டது'' எனக் கூறும் ஜெகந்நாதன், இதற்கு ஆதாரமாகத் தனது மிதிவண்டியைக் காட்டுகிறார். மூன்று மாதத்திற்கு முன்பு மாட்டப்பட்ட சைக்கிள் ரிம்மும், மட்கார்டும் இப்பொழுது செல்லரித்துப் போய் காயலாங்கடைக்குப் போட வேண்டிய நிலையில் இருக்கிறது. இரும்பையே அரித்துத் தின்று விடும் அணையின் விஷக் காற்றுக்கு மனிதத் தோல் எம்மாத்திரம்?

நொய்யல் ஆற்றில் காங்கேயம் அருகே கட்டப்பட்டுள்ள சின்ன முத்தூர் தடுப்பணையின் காவலாளியாகப் பணிபுரிந்து வரும் மணியின் மகள் செல்வப்பிரியா. தற்பொழுது 14 வயதான இந்தச் சிறுமி ஆறு ஆண்டுகளுக்கு முன்பு, தடுப்பணையில் தேங்கி நின்ற சாயப்பட்டறைக் கழிவு நீரில் குளித்துவிட, மறுநாளே அந்தச் சிறுமியின் உடம்பில் சிறிய வேர்க்குரு மாதிரி வந்து, அது நீர்க் கோர்த்து, உடைந்து புண்ணாகி விட்டது. மீண்டும் அதே இடத்தில் வேர்க்குரு மாதிரி புறப்பட்டு புண்ணாகி விடுகிறது. ஜெகந்நாதனின் சைக்கிள் ரிம் பொத்தல் பொத்தலாக இருப்பதைப் போல, அச்சிறுமியின் பச்சை உடம்பு புண்ணால் புரையோடிப் போயிருக்கிறது.

வெறும் 1,500 ரூபாய் சம்பளம் வாங்கும் இந்தத் தொழிலாளி, தனது மகளின் வைத்தியத்திற்காக கடந்த ஆறு வருடங்களில் ஒரு இலட்ச ரூபாய் செலவு செய்து விட்டார். ''ஆடு, மாடு எல்லாவற்றையும் வித்தும் என் புள்ளைக்கு உடம்பு சரியாகவில்லை; 23 ஆயிரம் ரூபாய் கடன் ஏற்பட்டதுதான் மிச்சம், எங்களுக்கு ஏதாவது உதவி செய்யுங்கள்'' எனக் கண் கலங்குகிறார், அவர்.

திருப்பூர் சாயப் பட்டறை கழிவு பாயும் நொய்யல் ஆற்றுப் பகுதியில் வாழும் கர்ப்பிணி பெண்கள், 4 ஆவது மாதத்திற்கு பிறகு அங்கு குடியிருப்பதே இல்லை. ஊரில் கிடைக்கும் கிணற்றுத் தண்ணீரை, குளிப்பதற்குக் கூட கர்ப்பிணிப் பெண்கள் பயன்படுத்துவதில்லை. ''இந்த நச்சுக் கழிவால், காற்று, நீர், நிலம் எல்லாம் மாசுபட்டு போனதால், பெண்களுக்குக் கர்ப்பப்பை புற்று நோய் வந்து விடுகிறது'' என்கிறார், ஜெகந்நாதன்.

திருப்பூரில் உள்ள ஜெய்வாபாய் நகரவை பெண்கள் மேல்நிலைப் பள்ளியைச் சேர்ந்த 12-ஆம் வகுப்பு மாணவிகள், 2004-ஆம் ஆண்டு நடந்த தேசிய குழந்தைகள் அறிவியல் மாநாட்டுக்காக, இந்த நச்சுக் கழிவு ஏற்படுத்தியுள்ள பாதிப்புகள் பற்றி நடத்திய விரிவான ஆய்வில் சாயப் பட்டறை கழிவால், ஒரத்துப்பாளையம் அணையை ஒட்டி வாழும் கிராம மக்களுக்கு, ''தேமல், சொறி, சிரங்கு, மூளைக் காய்ச்சல், சிறுநீரகப் பாதிப்பு, புற்று நோய், கண் எரிச்சல், மஞ்சள் காமாலை, பேச்சு தடுமாறுதல், கருச்சிதைவு'' உள்ளிட்டு பல நோய்கள் வந்திருப்பதைச் சான்றுகளுடன் குறிப்பிட்டுள்ளனர்.

''கறவை வற்றிப் போதல், கன்றுகள் இறந்து பிறப்பது, மலட்டுத் தன்மை, வயிற்றுப் போக்கு, அம்மை நோய், முடி உதிர்தல்'' எனப் பலவகையான நோய்கள் கால்நடைகளைத் தாக்குவதையும் இப்பள்ளி மாணவிகள் நடத்திய ஆய்வு சுட்டிக் காட்டுகிறது.

* * *

நொய்யல் ஆறு மாசுபட்டு விட்டதால், ஒரத்துப்பாளையம் அணை பாசனத்தை நம்பியிருந்த விவசாயிகளுள் 53 சதவீதம் பேர், விவசாயத்திற்கு தலை முழுகிவிட்டு நெசவு, ஆடு - மாடு மேய்த்தல், மீன் பிடித்தல் போன்ற வேறு தொழில்களுக்கு மாறிச் சென்று விட்டனர். ஒரத்துப்பாளையம் அணையில் சாயப் பட்டறை கழிவு பல ஆண்டுகளாகத் தேங்கி நிற்பதால், ஏறத்தாழ 300 கிராமங்களின் நிலத்தடி நீர் மாசுபட்டு போய், இக்கிராம மக்கள் குடி தண்ணீருக்குக் கூட அலைய வேண்டிய நிலையில் தள்ளப்பட்டு விட்டனர்.

நொய்யல் ஆற்றுப் பகுதியில் கிடைக்கும் நிலத்தடி நீர் தொழிற்சாலைகளுக்குக் கூடப் பயன்படுத்த முடியாதபடி கெட்டுப் போய்விட்டது. இதனால் திருப்பூர் சாயப் பட்டறைகள், 30 கி.மீ. சுற்றளவில் அமைந்திருக்கும் கிராமங்களில் இருந்து தண்ணீர் எடுத்து வருகின்றன. சாயப் பட்டறைகளால் நிலத்தடி நீர் ஒட்டச் சுரண்டப்படுவதால், அவினாசி, பல்லடம், பொங்கலூர், சோமனூர் பகுதிகளில் நிலத்தடி நீர் 1200 அடிக்கும் கீழே போய் விட்டது. பல கிராமங்களில் அன்றாடத் தேவைக்குக் கூடத் தண்ணீர் கிடைப்பதில்லை. எனவே, கிராம மக்கள் தண்ணீர் லாரியைச் சிறை பிடிப்பது, சாலை மறியல் செய்வது எனப் போராடி தண்ணீர் பெற வேண்டிய இக்கட்டில் வாழ்கின்றனர்.

சாயப் பட்டறைகளில் தேங்கும் திடக் கழிவுகள், எவ்விதப் பாதுகாப்புமின்றி திறந்த வெளியில் கொட்டப்பட்டுள்ளதால், இக்கழிவில் இருந்து வெளியேறும் நச்சுக் காற்றினால், ஆஸ்துமா, சைனஸ், சளித் தொல்லைகள் போன்ற நுரையீரல் நோய்கள் சுற்று வட்டார மக்களைத் தாக்கி வருகின்றன.

www.padippakam.com


மொத்தமாகச் சுருக்கிச் சொன்னால், நொய்யல் ஆற்றில் விடப்படும் சாயப்பட்டறைக் கழிவால் கரூர், ஈரோடு மாவட்டங்களைச் சேர்ந்த 424 கிராமங்களில் உள்ள 77,000 ஏக்கர் சாகுபடி நிலம் பாழ்பட்டுப் போய்விட்டது; 4,925 விவசாயக் கிணறுகள், பாசனத்திற்குக் கூடப் பயன்படுத்த முடியாதபடி மாசுபட்டுப் போய்விட்டன; 6,150 விவசாய பம்பு செட்டுகள் துருப்பிடித்துப் போய்விட்டன. 72,850 தென்னை மரங்கள் காய்ந்து சருகாகி விட்டன. 16,240 மாடுகளும், 48,725 ஆடுகளும் பல்வேறு நோய்களால் தாக்கப்பட்டுள்ளன. இதனால், ஏறத்தாழ 50,000 கிராம மக்கள் / விவசாயிகள் நடைப்பிணம் போல வாழ்க்கையை நடத்தி வருகின்றனர்.

•••

கடந்த 13 ஆண்டுகளில், ஒரத்துப்பாளையம் அணை ஒரேயொரு முறைதான் பாசனத்திற்காகத் திறந்து விடப்பட்டது. மீதி ஆண்டுகளில், அணையைத் திறந்தால், சாயப்பட்டறைக் கழிவுதான் பாசன வாய்க்காலில் ஓடி வரும். குறிப்பாக, பருவமழைக் காலங்களில், காவிரியில் தண்ணீர் ஓடும் பொழுது, இந்த விஷக் கழிவைத் திறந்துவிட்டு, கரூருக்குக் கீழேயுள்ள காவிரி பாசனப் பகுதிகளையும் நஞ்சாக்கி வருகிறது, அதிகார வர்க்கம்.

1997-ஆம் ஆண்டு, எவ்வித முன்னறிவிப்பும் இன்றி இந்த விஷக் கழிவு திறந்துவிடப்பட்டதால், காவிரி தண்ணீரைக் குடித்த கிராம மக்கள் வாந்தியெடுத்து மயங்கி விழுந்தனர்; ஆடு, மாடுகள் செத்து மடிந்தன; கரூரில் உள்ள அரசு காகிதத் தொழிற்சாலையின் இயந்திரங்கள் பழுதாகி, 10 கோடி ரூபாய் நட்டமேற்பட்டது.

இந்நிலையில் நொய்யல் ஆறு ஆயக்கட்டுதாரர் சங்கம், ''சாயப் பட்டறைக் கழிவை நொய்யல் ஆற்றில் திறந்து விடப்படுவதைத் தடை செய்யக் கோரி'', 1998-ஆம் ஆண்டு சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர். இந்த வழக்கின் தீர்ப்பு விவசாயிகளுக்குச் சாதகமாக இருந்தாலும், சாயப் பட்டறை முதலாளிகள் கழிவு நீரை நொய்யல் ஆற்றில் திறந்து விடுவதை, கடந்த ஏழு ஆண்டுகளில் ஒருநாள் கூட நிறுத்தவேயில்லை. மாசு கட்டுப்பாடு அதிகாரிகள், பொதுப் பணித்துறை அதிகாரிகள் மட்டுமல்ல, மாண்புமிகு நீதிபதிகள் கூட, சாயப் பட்டறை முதலாளிகள் நீதிமன்ற உத்தரவை மீறி நடப்பதைக் கையைக் கட்டிக் கொண்டு வேடிக்கை தான் பார்த்தனர்.



**ஒரத்துப்பாளையம் அணையில் தேங்கியுள்ள கழிவு நீரில் இருந்து வீசும் விஷக்காற்று, சைக்கிளின் (இரும்பு) 'மட்கார்டை'யே அரித்துத்தின்று விட்டது.**

''ஒரத்துப்பாளையம் அணையில் தேங்கியிருக்கும் விஷக் கழிவைச் சுத்தப்படுத்த, சாயப் பட்டறை முதலாளிகள் 12 கோடி ரூபாய் தர வேண்டும்'' என சென்னை உயர்நீதி மன்றம் 14.7.04 அன்று உத்தரவிட்டது. இந்த உத்தரவு போட்டு ஒரு வருடம் முடியப் போகிறது. ஆனாலும் சாயப் பட்டறை முதலாளிகளிடமிருந்து, ஒரு கோடி ரூபாய்க்கு மேல் ஒரு சல்லிக் காசைக் கூட அதிகாரிகளால் வாங்க முடியவில்லை. சாயப்பட்டறை முதலாளிகள் நீதிமன்ற உத்தரவுகளைப் பகிரங்கமாக மீறுகிறார்கள். ஆனால், அவர்கள் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்குக் கூடப் பாயவில்லை.

ஒரத்துப்பாளையம் அணையில் தற்பொழுது 39 அடி உயரத்திற்கு கழிவு நீர் தேங்கி நிற்பதால், அணையே உடைந்து விடும் அபாயத்தில் இருக்கிறது. இதனால் நொய்யல் - ஒரத்துப்பாளையம் பாசன விவசாயிகள் சங்கம், ''கழிவு நீரை உடனே திறந்து விட வேண்டும்; 1998-ஆம் ஆண்டு அளிக்கப்பட்ட தீர்ப்பை நடைமுறைப்படுத்த வேண்டும்'' எனக் கோரி மீண்டும் வழக்கு தொடர்ந்தனர். அதேசமயம், அணைக்குக் கிழக்கே உள்ள விவசாயிகளோ, ''கழிவு நீரைத் திறந்துவிடக் கூடாது'' எனக் கோரி எதிர்மனு தாக்கல் செய்தனர். கழிவு நீரைத் திறக்காமல் தேக்கி வைத்தாலும் ஆபத்து; திறந்து விட்டாலும் ஆபத்து என்ற இக்கட்டில் விவசாயிகள் மாட்டிக் கொண்டு தவிக்கும் இந்த நேரத்தில் கூட, சாயப்பட்டறை முதலாளிகள் கழிவு நீரை நொய்யலில் கொட்டுவதை நிறுத்த மறுக்கின்றனர்.

இவ்வழக்கை விசாரித்த சென்னை உயர்நீதி மன்றம், ஒரத்துப்பாளையம் அணையில் இருந்து ஒரு நாளைக்கு ஒரு வினாடிக்கு 40 கன அடி (அணையில் 60 கோடி கன அடி கழிவு நீர் தேங்கி நிற்கிறது) கழிவு நீரைத் தொடர்ச்சியாக ஐந்து நாட்களுக்குத் திறந்து விட வேண்டும். பிறகு ஏழு நாட்களுக்கு அணையை மூடி விட வேண்டும். வெளியேற்றப்பட்ட கழிவு நீர் ஏழு நாட்களுக்குள் காய்ந்து விடும்; பிறகு மீண்டும் அணையை ஐந்து நாட்களுக்குத் திறந்து விட வேண்டும்'' என உத்தரவிட்டது. இப்படி அணையைத் திறந்தால், கரூருக்குக் கீழேயுள்ள காவிரி பாசன விவசாயிகளுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது எனத் தங்களது தீர்ப்பின் சாதுர்யத்தையும் நீதிபதிகள் பாராட்டிக் கொண்டனர்.

ஆனால், அணையில் இருந்து திறந்துவிடப் பட்ட கழிவு நீரோ, நீதிபதிகளின் ''உத்தரவையும் மீறி'', 29.5.05 அன்று மதியமே கரூருக்கு அருகே காவிரியில் கலந்து விட்டது. இதனால் நொய்யல், காவிரி ஆற்றில் பொதுமக்கள் குடிநீர் அருந்தவோ, கால்நடைகளுக்குத் தண்ணீர் கொடுக்கவோ பயன்படுத்த வேண்டாம் என்றும்; ஆற்றில் மீன் பிடித்துச் சாப்பிட வேண்டாம் என்றும் மாவட்ட நிர்வாகம் தண்டோரா போட்டு பொதுமக்களை எச்சரித்துள்ளது. மேலும், காவிரியாற்றில் இருந்து குடிநீர் இறைப்பதும்; பாசனத்திற்கு வாய்க்காலில் தண்ணீர் திறந்து விடுவதும் நிறுத்தப்பட்டு விட்டது. பொதுமக்களை, அவர்களின் ஊர்களில் இருந்து அப்புறப்படுத்தி, துரத்தியடிக்காததுதான் பாக்கி!

திருப்பூர் பகுதியில் தற்போது இயங்கிவரும் 729 சாயப்பட்டறைகளுள், 19 சாயப்பட்டறைகளில்தான் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள சாயப்பட்டறைகளில் சுத்திகரிப்பு நிலையங்களை அமைக்க இன்னும் ஆறு மாத காலம் அவகாசம் வேண்டும் என முதலாளிகள் நீதிமன்றத்திடம் முறையிட்டுள்ளனர்.

சுத்திகரிப்பு நிலையங்களை அமைக்கச் சொல்லி, சென்னை உயர் நீதி மன்றம் 1998-ஆம் ஆண்டு போட்ட உத்தரவை, சாயப்பட்டறை அதிபர்கள் கடந்த ஏழு ஆண்டுகளாகக் கண்டு கொள்ளவேயில்லை. அப்படிப்பட்ட முதலாளிகள், அடுத்த ஆறு மாதங்களில் சுத்திகரிப்பு நிலையங்களைக் கட்டிவிடுவார்கள் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை.

இப்படிப்பட்ட நிலையில், சுத்திகரிப்பு நிலையம் கட்டி முடிக்கப்படும்

**தொடர்ச்சி 11-ஆம் பக்கம்**



படிப்பகம்

www.padippakam.com

# பார்ப்பன சேவையுடன் பிழைப்புவாதம்

# தலித்திய சீரழிவின் புதிய பரிமாணங்கள்

ஆடுகள் ஒன்றுசேர்ந்து ஓநாய்களுக்கு விழா நடத்தி கூட்டணி கட்டியதுண்டா? தாழ்த்தப்பட்டோர் ஒன்று திரண்டு பார்ப்பனர்களுக்கு விழா நடத்தியதுண்டா? அதிசயம்; ஆனால் உண்மை. உ.பி. மாநில வரலாற்றிலேயே இதுவரை கண்டிராத புதுமை. 'சரித்திரம்' படைத்துக் கொண்டிருக்கிறார், பகுஜன் சமாஜ் கட்சித் தலைவியான செல்வி மாயாவதி!

'ஒடுக்கப்பட்ட' சாதியினர்'ரான பார்ப்பனர்களைப் பாதுகாக்கவும் முன்னேற்றவும் மாநிலமெங்கும் 22 வட்டார மாநாடுகளை நடத்திய மாயாவதி, கடந்த ஜூலை 9-ஆம் நாளன்று லக்னோ நகரில் மிகப் பெரிய பார்ப்பன மாநில மாநாட்டை நடத்தியுள்ளார். அம்பேத்கரின் புகழ்பாடி ''ஜெய்பீம்'' என்று முழங்கி வந்த தாழ்த்தப்பட்டோர், இம்மாநாட்டுப் பேரணியில் ''ஜெய் பரசுராம்'' என்று முழங்கினர். இம்மாநாட்டில் பார்ப்பனர்கள், பரசுராமனின் நினைவாக வெள்ளிக் கோடாரியை மாயாவதிக்குப் பரிசளித்து கௌரவித்தனர்.

இந்தப் பரசுராமன் என்ற பார்ப்பனர், சத்தியர்களைக் கோடரியால் தாக்கி அழித்து பார்ப்பன சாதியினரைக் காத்தார் என்பது புராணக் கதை. 21 இனக் குழுக்களைச் சேர்ந்த சத்திரியர்களை அழித்து, பார்ப்பன ஆதிக்கத்தை நிலைநாட்டியவன்தான் பரசுராமன் எனக் கூறப்படுகிறது. ஏடறிந்த வரலாற்றில் புஷ்யமித்திர சுங்கன் என்ற மன்னன் பார்ப்பன ஆதிக்கத்தின் சின்னமாகக் கருதப்படுவதைப் போல, புராண காலத்தின் பார்ப்பன ஆதிக்கத்தின் சின்னமாக கருதப்படுபவன்தான் பரசுராமன். புராண காலத்தில், பரசுராமன் கோடாரியை ஏந்தி சத்திரியர்களை அழித்ததைப் போலவே, தற்காலத்தில் தலித் சகோதரி மாயாவதி சத்திரிய ஆதிக்கத்தை அழித்து, முழுமையான பார்ப்பன ஆதிக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகவே, பார்ப்பனர்கள் இந்தத் தலித் குடிகெடுக்கும் கோடாரிக் கொம்பிற்கு (மாயாவதிக்கு) வெள்ளிக் கோடாரியை நினைவுப் பரிசாக அளித்துள்ளனர்.

வேத மந்திரங்கள் முழங்க பார்ப்பனர்கள் இம்மாநாட்டில் தனக்களித்த வரவேற்பைக் கண்டு பூரித்துப் போன மாயாவதி, ''எங்களது தேர்தல் சின்னமாகிய யானை, பார்ப்பனர்களின் முழுமுதற் கடவுளான கணேஷ்-இன் அவதாரம். எங்கள் கட்சியை பார்ப்பனர்களுக்கும் மேல்சாதியினருக்கும் எதிரான கட்சி என்று சிலர் பொய்ப் பிரச்சாரம் செய்து வருகின்றனர். எமது நடைமுறையே இந்த அவதூறுகளை வீழ்த்தி விடும். இனிமேலும் பார்ப்பனர்கள் இதர அரசியல் கட்சிகளை நம்பி ஏமாற மாட்டார்கள். பார்ப்பனர் - தலித் கூட்டணியானது உ.பி. மாநிலத்தில் புதிய மாற்றங்களையும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு நல்வாழ்வையும் கொண்டு வரும்'' என்று இம்மாநாட்டில் முழங்கினார்.

''வடக்கே ஒரு விடிவெள்ளி'', ''தாழ்த்தப்பட்ட மக்களின் புரட்சித் தலைவி'' என்றெல்லாம் ஏற்றிப் போற்றப்படும் மாயாவதி, கடந்த சில ஆண்டுகளுக்கு முன்புவரை, ''திலக், தராஜூ, தல்வார் ஆகியவற்றைச் செருப்பால் அடிப்போம்'' என்று மேடைகளில் முழங்கி வந்தவர். **திலக்** - நெற்றியில் பொட்டு வைக்கும் பார்ப்பனரையும், **தராஜூ** - பனியா எனும் வணிக சாதியினரையும், **தல்வார்** - தலைப்பாகை அணியும் ராஜபுத்திர சாதியினரையும் செருப்பால் (தாழ்த்தப்பட்டோரில் ஒரு பிரிவினரது தொழில்) அடிப்போம் என்று முழங்கி வந்தவர்தான், பகுஜன் சமாஜ் கட்சித் தலைவியான மாயாவதி. ஆதிக்கசாதி இந்துக்களுக்கு எதிராக, குறிப்பாக பாரதிய ஜனதா கட்சிக்கு எதிராக எப்போதும் மேடைகளில் பேசி வந்தவர்; அம்பேத்கரையும், பெரியாரையும் தமது வழிகாட்டிகள் என்று போற்றியவர்.

இந்தக் கொள்கையும் லட்சியமும் வீர வசனங்களும் ஓட்டுப் பொறுக்கி அரசியல் களத்தில் காலிப் பெருங்காயடப்பாவாகி விட்டது. எந்தக் கட்சியை எதிர்த்து அரசியல் நடத்தி வந்தாரோ அந்தக் கட்சியுடன், 1997-ஆம் ஆண்டில் எந்தக் கட்சி தனது முதுகில் குத்தி ஆட்சியைக் கவிழ்த்ததோ அந்தக் கட்சியுடன் - அதே பாரதிய ஜனதா கட்சியுடன் 2002 சட்டமன்றத் தேர்தலுக்குப் பிறகு புதிய கூட்டணி கட்டிக் கொண்டு உ.பி. முதல்வராகி, அரசியல் விபச்சாரத்திலும் பிழைப்புவாதத்திலும் தனி முத்திரை பதித்தார், மாயாவதி.

''தலித் பிரச்சினையை தலித் மக்

**பகுஜன் சமாஜ் கட்சி நடத்தி வரும் பார்ப்பன மேளாவில், பார்ப்பனர்களின் முழு முதற் கடவுளான விநாயகரைத் தூக்கி வைத்துக் கொண்டாடும் மாயாவதி.**



www.padippakam.com

களால் மட்டுமே உணர முடியும்; தலித்துகளுக்கு தலித்துகள்தான் தலைமை தாங்க வேண்டும்; தலித்துகளே, பிற கட்சிகளில் சேராதீர்கள்; பிற ஆதிக்க சாதியினரை எமது கட்சியில் சேர்க்கவே மாட்டோம்'' - என்றெல்லாம் கொள்கைச் சவடால் அடித்து வந்த ''பகுஜன்'' சமாஜ் கட்சி இன்று பார்ப்பனர்கள் முக்கிய பொறுப்புகளில் அங்கம் வகிக்கும் ''சர்வஜன்'' கட்சியாகிவிட்டது. மாயாவதி கூட தமது கட்சி ''சர்வஜன்'' கட்சிதான் என்று பெருமையுடன் குறிப்பிடுகிறார்.

ஆதிக்க சாதியினரையும் அவர்களது கட்சிகளையும் ''மனுவாதிகள்'' என்று சாடிவந்த பகுஜன் சமாஜ் கட்சி, இப்போது அதே மனுவாதிகளை தமது கட்சியின் முக்கிய பிரமுகர்களாக பொறுப்புகளில் அமர்த்தியுள்ளது. பார்ப்பன எதிர்ப்பு - ஆதிக்க சாதி எதிர்ப்பு என்றெல்லாம் சவடால் அடித்து வந்த அக்கட்சி இன்று அவர்களின் நம்பகமான கூட்டாளியாகி விட்டது.

கடந்த 2002 உ.பி. மாநில சட்டமன்றத் தேர்தலின்போது பார்ப்பனர்களுடன் சங்கமித்த மாயாவதி, தமது கட்சியின் சார்பில் 38 பார்ப்பனர்களை வேட்பாளர்களாக நிறுத்தினார். இவர்களில் 5 பேர் வெற்றி பெற்றனர். 2004 நாடாளுமன்றத் தேர்தலின் போது 7 பார்ப்பனர்களை வேட்பாளர்களாக நிறுத்தினார். இவர்களில் பதக் என்ற ஒரு பார்ப்பனர் மட்டும் வெற்றி பெற்றார். பின்னர், நாடாளுமன்ற மேலவை உறுப்பினராக சதிஷ் மிஸ்ரா என்ற பார்ப்பனரை பகுஜன் சமாஜ் கட்சி சார்பில் அமர்த்தினார். இவை யாவும் போதாதென்று இப்போது பார்ப்பன மாநாடுகளை நடத்தி, பாரதிய ஜனதா கட்சியே மிரண்டு போகுமளவுக்கு தனது பார்ப்பன சேவையில் புதிய வரலாறு படைத்துக் கொண்டிருக்கிறார்.

''தலித் பிரச்சினையை தலித்துகளால் மட்டுமே உணர முடியும்; தலித்துகளுக்கு தலித்துகள்தான் தலைமை தாங்க வேண்டும்'' என்றெல்லாம் சவடால் அடித்து வந்த மாயாவதி, தனது கட்சியின் பொதுச் செயலாளராக சுதிர் சந்திர மிஸ்ரா என்ற பார்ப்பனரையே நியமித்துள்ளார். இதுதவிர, ஒவ்வொரு மாவட்டத்திலும் 25 பேர் கொண்ட ''சகோதரத்துவ மேம்பாட்டுக் கமிட்டி''களை பகுஜன் சமாஜ் கட்சி நிறுவியுள்ளது. இக்கமிட்டிகளின் தலைவர், துணைத்தலைவர் பொறுப்புகளில் பார்ப்பனர்கள் இருக்க, தாழ்த்தப்பட்டோர் செயலாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். எந்தவொரு கட்சியும் பார்ப்பனர்களுக்கு இப்படி அரசியல்



**விருட்க்ஷா ஆசனத்தைச் செய்து காட்டும் திருமாவளவன்: ஈஷா யோக மையத்தில் அடங்கிப் போன சேரிப்புயல்?**

மேடையை அமைத்துக் கொடுத்ததில்லை என்று பார்ப்பனர்களே புகழும் அளவுக்கு மாயாவதியின் பார்ப்பனச் சேவை நாலு கால் பாய்ச்சலில் முன்னேறுகிறது.

சாதி அரசியல் கொடி கட்டிப் பறக்கும் உ.பி. மாநிலத்தில், வெறும் தலித் - முசுலீம் கூட்டணியை வைத்துக் கொண்டு சாதிய ஓட்டு வங்கிகளைத் தகர்த்து பதவியைக் கைப்பற்ற முடியாது என்பதைப் புரிந்து கொண்டதாகவும், எனவேதான் தலித் - முசுலீம் - பார்ப்பனர் மற்றும் பிற சாதியினருடன் புதிய கூட்டணி அமைத்துள்ளதாகவும் தனது பிழைப்புவாதத்துக்கு சித்தாந்த விளக்கமளிக்கிறார், மாயாவதி. இது வெளியே தெரிந்த உண்மை. தமது சாதிய ஆதிக்கத்துக்கும் அதிகாரத்துக்கும் பகுஜன் சமாஜ் கட்சியால் எந்த இடையூறும் ஏற்படாது என்ற உத்திரவாதமும் நம்பிக்கையும் கிடைத்ததால்தான் பார்ப்பனர்களும் மற்றும் பிற ஆதிக்க சாதியினரும் பகுஜன் சமாஜ் கட்சியை ஆதரிக்கின்றனர். இது வெளியே தெரியாத உண்மை.

பகுஜன் சமாஜ் கட்சியின் பொறுப்புகளில் உள்ள பார்ப்பனர்களும் ஆதிக்க சாதியினரும் தாங்கள் தீண்டாமையை எதிர்ப்பதாகவோ, தமது சாதியினர் தாழ்த்தப்பட்டோர் மீது ஏவிவரும் அடக்குமுறை - சுரண்டலை எதிர்ப்பதாகவோ வாயளவில் கூட வாக்குறுதி அளிக்கவில்லை. ஆனாலும், இப்பார்ப்பன - ஆதிக்க சாதியினரின் நலன்களைப் பாதுகாக்கப் போவதாகச் சூளுரைத்து மாநாடுகளை நடத்துகிறார், மாயாவதி. உ.பி.யில் பார்ப்பனர்கள் 'சிறுபான்மையினராக' உள்ளதால், சத்திரிய சாதியினரின் ஆதிக்கத்தால் பாதுகாப்பற்ற உணர்வில் பரிதவிக்கிறார்களாம்; காங்கிரசும் பாரதிய ஜனதாவும் அவர்களை வஞ்சித்து விட்டதாம்; எனவேதான், ஒடுக்கப்பட்டு புறக்கணிக்கப்பட்டு வரும் சாதியினரான பார்ப்பனர்களையும் அரவணைத்துக் கொண்டு சமூக நீதி காக்கப் போராடுகிறாராம் மாயாவதி. இத்தகைய பார்ப்பன சேவையுடன் கூடிய பிழைப்புவாதத்தையே அவர் ''தலித்தியம்'' என்கிறார்.

தலித்தியம் என்ற பெயரிலான இப்பிழைப்புவாத சித்தாந்தமும் அரசியலும் மாயாவதியுடன் நின்றுவிடவில்லை. தமிழகத்தில் மாயாவதியின் அன்புச் சகோதரரும் 'தலித்திய பேரறிஞருமான' பிரம்ம ஸ்ரீ ரவிக்குமார் அவர்களும்கூட, காஞ்சி மட பார்ப்பன பயங்கரவாதி ஜெயேந்திரன் கைது செய்யப்பட்ட போது ''காலச்சுவடு'' இதழில், பார்ப்பனர்கள் சிறுபான்மையினராகி விட்டதாக அங்கலாய்த்து வரலாற்றை 'மறுவாசிப்பு' செய்தார். தலித்தியத்தின் பெயரால் ஜெயேந்திரனோடு, வை.பாலசுந்தரம், விஸ்வநாதன்கக்கன், 'தடா' பெரியசாமி, புரட்சி பாரதம் பூவை.மூர்த்தி - ஜெகன் மூர்த்தி வகையறாக்கள் கூட்டணி கட்டிக் கொண்டனர். சாதி இந்து வெறியர்களான ராமதாசு, சேதுராமன், கண்ணப்பன், நடராசன் (சசிகலா) ஆகியோரோடு திருமாவளவன் தமிழ்ப் பாதுகாப்புக் கூட்டணி கட்டிக் கொண்டுள்ளார். இச்சாதி வெறியர்களால் கொல்லப்பட்ட தலித் மக்களின் பிணங்களின் மீதேறி நின்று அவர், ''சாதிக்காக இனி ரத்தம் சிந்த நாங்கள் தயாராக இல்லை'' என்று முழங்குகிறார். இதற்காக அவருக்கு 'தமிழ்ப் பாதுகாப்பு இயக்கத்'தின் தலைமைப் பதவி கிடைத்திருக்கிறது.

இதற்கு முன்பு பாசிச எம்.ஜி.ஆரை ''புரட்சித் தலைவர்'' என்று திருமா துதி பாடினார். மூப்பனாரை எனது வழி காட்டி, தலைவர் என்று புகழ் பாடி அவரோடு கூட்டணி கட்டினார். பார்ப்பன பயங்கரவாத காஞ்சி மட சங்கராச்சாரியைச் சந்திப்பதில் என்ன தவறு என்று எதிர்வாதம் புரிந்தார். நந்தனை எரித்த தில்லை நடராசர் கோயில் தீட்சிதர்கள் அளித்த முதல் மரியாதையை சட்டையைக் கழற்றி விட்டு பவ்யமாக ஏற்றுக் கொண்டார். ஓட்டுக்கும் கூட்டுக்கும் இப்படி பிழைப்புவாதத்தில் புரள்வதை கம்யூனிசப் புரட்சியாளர்கள் அம்பலப்படுத்திய போது, அவரது எடுபிடிகளும் தலித்திய பிழைப்புவாதிகளும் சேற்றை வாரியிறைத்து தமது பிழைப்புவாத சித்தாந்தத்தை நியாயப் படுத்தினர்.


படிப்பகம

www.padippakam.com

இப்போது திருமாவளவன் இன்னும் ஒரு படி முன்னேறி 'கார்ப்பரேட்' சாமியாரான ஈஷா யோக மையத்தின் அதிபரான வாசுதேவை ''சத்குரு'' என்று போற்றுகிறார். ''சாமியார்கள், மக்களிடையே மதக் கருத்துக்களைத் திணிப்பவர்கள், நடைமுறைக்கு ஒவ்வாத கருத்துக்களைக் கூறுவோர் என்ற நிலைதான் இருந்து வருகிறது. ஆனால் சத்குரு ஜகி வாசுதேவைப் பொருத்த வரை, காவி உடை அணிந்த பெரியார் அல்லது மார்க்ஸ் என்றே கூறலாம்'' என்று கொஞ்சமும் கூச்சமின்றி ஒரு சாமியாரை பெரியாருடனும் மார்க்சுடனும் ஒப்பிட்டு துதிபாடுகிறார்.

இந்த சத்குரு ஜகி வாசுதேவனின் பின்னணி என்ன தெரியுமா? இவர், கவுண்டர் சாதியில் பிறந்த சாமியார். தனது சாதியைச் சேர்ந்த வெறியர்கள், கோவை மாவட்டத்தில் வாழும் அருந்ததியர்களை நர வேட்டையாடி வருவதை எதிர்த்து இதுநாள்வரை தனது சுண்டுவிரலைக் கூட அசைக்காதவர். இப்படி கமுக்கமாக கவுண்டர் சாதி வெறியர்களுக்குத் துணை போகும் இந்தச் சாமியார் ஆரம்பித்துள்ள கிராமப் புத்துணர்வு இயக்கத்துடன் இணைந்து கிராம மேம்பாட்டுப் பணிகளைச் சிறுத்தைகளும் செய்யப் போவதாக திருமாவளவன் அறிவித்துள்ளார். ஐயோ பாவம், சிறுத்தைகள்!

''இந்தியா அன்பு நிறைந்த நாடாக மாற வேண்டும். இதற்கு அரசியல் தலைவர்கள், வணிக அதிபர்களிடையே மாற்றம் ஏற்பட வேண்டியுள்ளது. அந்த மாற்றம் ஏற்பட்டால் சாதி, சமய பூசல்கள் வராது'' என்று உபதேசம் செய்கிறார் திருமா. சாதிய அடக்குமுறையை ஒழிக்கவும் மத வெறியை முறியடிக்கவும் என்னே ஒரு அற்புதமான தீர்வு! ஈஷா யோக மையத்தில் தொடர்ந்து பயிற்சி பெறப் போவதாகவும் திருமா அறிவித்துள்ளார். எட்டு நாட்கள் பயிற்சி பெற்றவுடனேயே இப்படி உபதேசம் செய்யும் திருமா, தொடர்ந்து பயிற்சி பெற்றால் சுவாமி திருமாவளவனந்தாவாக மாறி இன்னும் பல உபன்னியாசங்களைச் செய்வார் என்று எதிர்பார்க்கலாம். அதற்கு முன் ஈஷா யோக மையத்துக்கு ஒரு நல்ல தமிழ்ப் பெயர் சூட்டிவிட்டால் அவருக்குப் பெருமையாக இருக்கும்.

தலித் விடுதலை என்றும் இந்தத்துவ எதிர்ப்பு என்றும் ஆவேசக் குரலெழுப்பி வந்த தலித்தியவாதிகள் இன்று பார்ப்பன-ஆதிக்க சாதிகளுக்குச் சோரம் போகும் தமது பிழைப்புவாதத்தில் நாலுகால் பாய்ச்சலில் முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள். புரட்சிகர அரசியல் - சித்தாந்தம் எதுவுமின்றிச் சீரழியும் இத்தகைய பிழைப்புவாத இயக்கங்களை நிறுவனமயமாக்கிக் கொண்டு ஆளும் வர்க்கங்களும் ஆதிக்க சாதிகளும் தான் இறுதியில் ஆதாயமடைகின்றன.

''வடக்கே ஒரு பெண் புலி; தெற்கே ஒரு இளஞ்சிறுத்தை!'' என்று மாயாவதியையும் திருமாவையும் தலித்திய பிழைப்புவாதிகள் போற்றிப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். நாமும் பாராட்டத்தான் வேண்டும் - தலித்தியம் என்றால் பார்ப்பன-ஆதிக்கசாதி சேவையுடன் கலந்த பிழைப்புவாதம் என மீண்டும் நிரூபித்துக் காட்டியதற்காக.

● பாலன்

---

8-ஆம் பக்கத் தொடர்ச்சி

காலம்வரை, சாயப்பட்டறைகளை இழுத்து மூடுங்கள் என உத்தரவிட்டிருக்க வேண்டும்; இல்லையென்றால், சாயக் கழிவுகளை நொய்யல் ஆற்றில் விடக்கூடாது என்றாவது உத்தரவிட்டிருக்க வேண்டும். இந்த இரண்டு உத்தரவுகளில் ஒன்றைக் கூடப் போடாத நீதிமன்றம், சாயக் கழிவுகளை நொய்யல் ஆற்றில் கொட்டுவதற்கு முதலாளிகளுக்கு சட்டப்பூர்வமான அனுமதி வழங்கியிருக்கிறது.

''அணையில் இருந்து கழிவு நீரை முழுவதுமாக அகற்றும் வரையில், சாய ஆலைகள் வாரத்தில் ஐந்து நாட்கள் மட்டும் செயல்படும் என்று மூத்த வழக்கறிஞர் கூறியுள்ளார். அந்தக் கோரிக்கை ஏற்க''ப்படுவதாகக் கூறிவிட்டது, நீதிமன்றம்.

சாயப்பட்டறை இயங்கும் நாட்களில், அதன் கழிவுகளை நொய்யல் ஆற்றில் கொட்டலாம் என்பதுதான் இந்த உத்தரவின் பொருள். நொய்யல் ஆற்றுப் பாசன விவசாயிகள் எந்த நோக்கத்திற்காக இந்த வழக்கைத் தொடுத்தார்களோ, அந்த நோக்கத்தையே இந்த உத்தரவின் மூலம் தோற்கடித்து விட்டார்கள், நீதிபதிகள்.

●●●

குண்டு வைத்து மனிதர்களைக் கொல்லுவது பயங்கரவாதம் என்றால், நீர், நிலம், காற்றை நஞ்சாக்கி பல்லாயிரக்கணக்கான விவசாயிகளையும், கால்நடைகளையும் சாயப்பட்டறை அதிபர்கள் கொஞ்சம் கொஞ்சமாகக் கொன்று வருகிறார்களே, இதை என்னவென்று சொல்லுவது? இந்த பயங்கரவாதத்தைத் தொழில் வளர்ச்சி என்ற பெயரில் நியாயப்படுத்தி விட முடியுமா?

குடிக்கும் நீரில் சிறு தூசு தும்பு இருந்தாலே அதைக் குடிக்காமல் ஒதுக்கி வைத்து விடுகிறோம். ஆனால், திருப்பூர் சாயப் பட்டறை அதிபர்களோ, காவிரி ஆற்றையே நஞ்சாக்கி விட்டுத்தான் ஓய்வார்கள் போலிருக்கிறது. அந்நியச் செலாவணி கிடைக்கிறது என்பதற்காக, இந்தச் சமூக விரோதச் செயலைக் கையைக் கட்டிக் கொண்டு வேடிக்கை பார்க்க முடியுமா?

சாயப்பட்டறைக் கழிவுகளால் நஞ்சாகிப் போன நிலத்தடி நீரைத் தூய்மைப்படுத்த 20,30 வருடங்களுக்கு மேலாகும் என்கிறார்கள். எங்கோ இருக்கும் அமெரிக்கனும், ஐரோப்பியனும் கலர் கலராக சட்டை / பனியன் மாட்டிக் கொள்ள, நாம் வாழும் பூமியை, குடிக்கும் நீரை நஞ்சாக்க அனுமதிப்பது அறிவுடைமையாகுமா?

சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்காதவரை சாயப் பட்டறைகள் இயங்க அனுமதிக்கக் கூடாது; விவசாயிகள் கோருகிறபடி சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரை மறுசுழற்சி என்ற அடிப்படையில் சாயப்பட்டறைகளே பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அதை நொய்யல் ஆற்றில் விடக் கூடாது. சாயக் கழிவுகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்குவதற்கும், ஒரத்துப்பாளையம் அணையைச் சுத்தம் செய்வதற்கும் சாயப் பட்டறை அதிபர்கள் மீது அபராதம் விதிக்க வேண்டும்.

ஒரத்துப்பாளையம் விவசாயிகள் நடத்தி வரும் போராட்டத்திற்கு ஆதரவாகத் தமிழகமெங்கும் இந்தக் கோரிக்கைகள் எழுப்பப்பட வேண்டும். ஏனென்றால், அவர்களின் போராட்டம், காவிரிப் பாசன விவசாயத்தை, தமிழகத்தின் சுற்றுச் சூழலைக் காப்பதற்கான போராட்டம்! அந்நியச் செலாவணி வருவாய், தொழில் வளர்ச்சி என்ற பெயரில் சுற்றுப்புறச் சூழலை மாசுபடுத்தும் தொழிற்சாலைகளை இந்தியா போன்ற ஏழை நாடுகளின் தலையில் கட்டும் ஏகாதிபத்திய சதிக்கு எதிரான போராட்டம்!

● கருப்பன்

**கட்டுரையாக்க உதவி:**
*பு.ஜ. செய்தியாளர்கள், திருச்சி* மற்றும் தேசிய குழந்தைகள் அறிவியல் மாநாடு - 2004-க்காக, திருப்பூர் ஜெய்வாபாய் நகரவை பெண்கள் மேல்நிலைப் பள்ளி +2 மாணவிகள் தயாரித்துள்ள *''நொய்யலாற்றில் ஒரு விஷ அணை''* என்ற ஆய்வுக் கட்டுரை.


படிப்பகம்

www.padippakam.com

## உலக வங்கி - சர்வதேச நாணய நிதியம்

# பன்னாட்டு தண்ணீர் நிறுவனங்களின் தரகர்கள்

தாகத்துக்குத் தண்ணீர் கேட்டால், மோர் கொடுத்து உபசரிக்கும் பண்பாட்டைக் கொண்டது நமது தமிழகம். ஆனால், இப்பொழுதோ, தாகத்துக்குத் தண்ணீர் கேட்கும் முன்பாக, பாக்கெட் தண்ணீர் வாங்கும் அளவிற்கு சட்டைப் பையில் காசு இருக்கிறதா எனப் பார்த்துக் கொள்ள வேண்டிய பண்பாடு நம் மீது திணிக்கப்படுகிறது.

1985-ஆம் ஆண்டு வாக்கில் குடிநீர் கிடைக்காமல் பாதிக்கப்பட்ட கிராமங்களின் எண்ணிக்கை 750 ஆக இருந்ததாகவும், 1995-இல் இந்த எண்ணிக்கை 65,000 கிராமங்களாக அதிகரித்து விட்டதாகவும் அரசாங்கமே ஒப்புக் கொண்டுள்ளது. கிராமத்து உழைக்கும் மக்கள் குடிநீர் கிடைக்காமல் தவித்துக் கொண்டிருக்கும் இதே காலகட்டத்தில்தான், இந்தியாவெங்கும் தண்ணீர் வியாபாரம் சூடு பிடித்து நடக்கத் தொடங்கியது.

குடிநீர் பிரச்சினைக்கு வறட்சி, மழையின்மை, நிலத்தடி நீர் வறண்டு போவது எனப் பல காரணங்கள் சொல்லப்படுகின்றன. ஆனாலும், இந்தக் காரணங்களால் தண்ணீர் வியாபாரம் சிறிதளவுகூடப் பாதிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. இந்தியாவில் நடந்து வரும் தண்ணீர் வியாபாரத்தின் ஓராண்டு மதிப்பு மட்டும் 10,000 கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது.

நிலத்தடி நீரை உறிஞ்சி பாக்கெட்டுகளில், கேன்களில் தண்ணீரை அடைத்து விற்பது என்ற வரம்போடு இந்த தண்ணீர் வியாபாரம் நின்றுவிடவில்லை. சமூகத்தின் சொத்தாகப் பாவிக்கப்படும் ஆறுகள், ஏரிகளைத் தனியாருக்கு குத்தகைக்கு விடுவது; விவசாயத்திற்குத் தேவையான நீர்ப்பாசனத்தைத் தனியார்மயமாக்குவது; அரசாங்கம் வழங்கி வரும் குடிநீர் சேவையைத் தனியார் நிறுவனங்களிடம் ஒப்படைப்பது எனத் தண்ணீர் வியாபாரம் ''வளர்ச்சி'' அடைந்து வருகிறது.

இந்த அபாயகரமான வளர்ச்சிப் போக்கை, இந்தியா உள்ளிட்ட ஏழை நாடுகள் அனைத்திலும் விரைவுபடுத்துவதற்காகவே, ''காட்ஸ்'' என்ற பெயரில் பொது ஒப்பந்தம் ஒன்றை (சேவைகளில் வர்த்தகம் குறித்த பொது ஒப்பந்தம் - General Agreement on Trade in Services) உருவாக்குவது குறித்து உலக வர்த்தகக் கழகத்தில் பேச்சுவார்த்தை நடந்து வருகிறது.

உலகம் நாற்புறமும் நீரால் சூழப்பட்டிருந்தாலும், பூமி பந்தில் கிடைக்கும் மொத்த நீரில், 2.5% நீரைத்தான் மனிதன் குடிப்பதற்கும், தனது பிற தேவைகளுக்கும் பயன்படுத்திக் கொள்ள முடியும். இந்த 2.5 சதவீத நன்னீரிலும், 68.9 சதவீத நீர், பனியாக உறைந்து கிடக்கிறது. இந்த உறைபனி போக, எஞ்சியுள்ள நன்னீர் ஆதாரங்களை ''காட்ஸ்'' ஒப்பந்தத்தின் மூலம் கைப்பற்றுவதுதான் ஏகாதிபத்திய நிறுவனங்களின் நோக்கம். ஏனென்றால், எதிர்வரும் 2025-ஆம் ஆண்டில், உலக மக்களின் தண்ணீர் தேவை, தற்பொழுது இருப்பதைவிட, 56 சதவீதம் அதிகரிக்கும் என்று கூறப்படுகிறது. மேலும், ஏகாதிபத்திய நிறுவனங்கள் பெட்ரோல் வியாபாரத்தில் சம்பாதிக்கும் இலாபத்தில், 40 சதவீத இலாபத்தை, மிகவும் எளிதாக தண்ணீர் வியாபாரத்தின் மூலம் சம்பாதித்து விட முடியும் என்றும் கூறப்படுகிறது.

ஏகாதிபத்திய நிறுவனங்களின் இந்த இலாப நோக்கம் ஒருபுறமிருக்க, நன்னீர் ஆதாரங்களைக் கைப்பற்றுவதன் மூலம், ஏழை நாடுகளின் மீது தொடுக்கப்படும் மறுகாலனியாதிக்க தாக்குதலை, அந்நிறுவனங்களால் இன்னும் மிகக் கொடூரமாக நடத்த முடியும் என்பதையும் நாம் இணைத்துப் பார்க்க வேண்டும். காட்ஸ் ஒப்பந்தத்தின் மூலம் தண்ணீர் என்பது மறுகாலனியாதிக்கத்தின் புதிய ஆயுதமாக ஏகாதிபத்தியங்களுக்குப் பயன்படும்.

### அடித்தளம் போட்ட உலக வங்கி

அரசாங்கமும், பன்னாட்டு நிறுவனங்களும் கூட்டுச் சேர்ந்து கொண்டு, ஆறுகளையும், குடிநீர் வழங்குவதையும் தனியார்மயமாக்குவது இன்று வெளிப்படையாகவே தெரிகிறது. ''காட்ஸ்'' ஒப்பந்தத்தின் மூலம் உலகு தழுவிய அளவில் நடைமுறைக்கு வரவுள்ள இந்தத் திருப்பணிக்கு அடித்தளம் போட்டுக் கொடுத்ததே உலக வங்கியும், சர்வதேச நாணயநிதியமும் தான். இந்த இரு நிறுவனங்களும், கடந்த இருபது ஆண்டுகளாக, மிகவும் கமுக்கமாகப் பல்வேறு நாடுகளில் தண்ணீரைத் தனியார்மயப்படுத்த முயன்ற விவரங்கள் தற்பொழுது அம்பலமாகியுள்ளன.

வளரும் நாடுகளில் காணப்படும் ஏழ்மையை ஒழிப்பதற்காகக் கடன் கொடுக்கும் வள்ளல்களாகத் தங்களைக் காட்டிக் கொள்ளும் இந்த நிறுவனங்கள், தண்ணீர் வியாபாரத்தில் கொடிகட்டிப் பறக்கும் 10 பன்னாட்டு நிறுவனங்களின் தரகனாகவே செயல்பட்டு வந்துள்ளன; கடன் வாங்கும் ஏழை நாடுகளின் நீர் ஆதாரங்களைப் பன்னாட்டு நிறுவனங்கள் கைப்பற்றிக் கொள்வதற்காகவே ஐந்துவிதமான பொறிகளை உருவாக்கி, நடைமுறைப்படுத்தி வருகின்றன.

### 1. கடன் மற்றும் அங்கீகார முத்திரை

ஏழை நாடுகளின் குடிநீர் திட்டங்களுக்கும், கழிவு நீர் சுத்தப்படுத்தும் திட்டங்களுக்கும் உலக வங்கிக் கடன் கொடுக்கும் பொழுது, அத்திட்டங்களில் தனியாரும் பங்கு பெற அனுமதிக்க வேண்டும் என நிபந்தனை விதிப்பதன் மூலமே இந்தச் சேவைகளை உலக வங்கி தனியார்மயப்படுத்தி விடுகிறது.

குடிநீர் திட்டங்களுக்குச் செலவிடப்படும் மூலதனத்தை முழுமையாகத் திரும்ப எடுக்க வேண்டும் எனக் கோரும் உலக வங்கி, அதற்கு, ''தண்ணீரைச் சந்தை விலைக்கு விற்க வேண்டும்'' என்றும் ''சந்தை விலையைக் கொடுத்துத் தண்ணீரை விலைக்கு வாங்கும் அளவிற்கு, நுகர்வோரின் வருவாயை அதிகரிக்க வேண்டும்'' என்றும் நிபந்தனைகளை விதிக்கிறது.

தற்பொழுது 530 கோடி அமெரிக்க டாலர் மதிப்பு கொண்ட 86 குடிநீர் வழங்குதல் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு திட்டங்கள் உலக வங்கியின் மேற்பார்வையின் கீழ் பல்வேறு நாடுகளில் நடைபெற்று வருகின்றன. உலக வங்கி ஏழை நாடுகளுக்கு வழங்கும் ஏழ்மை குறைப்பு ஆதாரக் கடன் திட்டங்களில், மூன்றில் இரண்டு கடன்களில் தண்ணீர் தனியார்மயம் நிபந்தனையாக விதிக்கப்படுகிறது. உலக வங்கி மூலம் குடிநீர் அல்லாத திட்டங்களுக்கு வழங்கப்படும் கடன்களில், தண்ணீர் தனியார்ம


படிப்பகம்

www.padippakam.com



ஏழு அடி ஆழமுள்ள குழிக்குள் இறங்கித் தண்ணீர் எடுக்கும் குஜராத் மாநிலம் - ராஜ்கோட் மாவட்டத்தைச் சேர்ந்த சிறுமிகள்: குடிநீர் வழங்கும் சேவையைத் தனியாருக்கு வழங்கினால் இந்த அவல நிலை ஒழிந்துவிடுமா?

யம் ஒரு நிபந்தனையாகவோ அல்லது கொள்கை அறிவுரையாகவோ ஏழை நாடுகளின் மீது திணிக்கப்படுகிறது.

''தண்ணீரை இலவசமாகப் பொது மக்களுக்கு வழங்கக் கூடாது; குடிநீர் வழங்குவது சேவை அல்ல; அதை வியாபாரமாகப் பார்க்க வேண்டும்'' என்ற மனோநிலையை ஏழை நாடுகளில் ஏற்படுத்துவதன் மூலம், பன்னாட்டு தண்ணீர் வியாபார நிறுவனங்கள் ஏழை நாடுகளில் மூலதனம் போடுவதற்கு ஏற்ற சூழலை, உலகவங்கி உருவாக்கிக் கொடுக்கிறது. மேலும், பன்னாட்டு நிறுவனங்கள் ஏழை நாடுகளில் நுழைவதற்கு முன்பாகவே, அந்நாட்டு அரசாங்கத்தையே தண்ணீர் கட்டணத்தை உயர்த்தச் செய்வதன் மூலம், பன்னாட்டு நிறுவனங்களின் தண்ணீர் கட்டண கொள்ளையை நியாயப்படுத்தி விட முயலுகிறது.

சர்வதேச நாணய நிதியம் 2000-ஆம் ஆண்டில் வழங்கிய 40 கடன்களில், 12 கடன்கள் தண்ணீரைத் தனியார்மயமாக்க வேண்டும் அல்லது தண்ணீர் திட்டத்திற்குச் செலவாகும் மூலதனத்திற்கு ஏற்ப தண்ணீர்க் கட்டணத்தை உயர்த்த வேண்டும் என்ற நிபந்தனைகளோடுதான் வழங்கப்பட்டன. சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் வாங்கும் ஏழை நாடுகள், அந்நிறுவனத்திடமிருந்து ஒப்புதல் முத்திரையொன்றைப் (Seal of approval) பெற வேண்டும். அந்நிறுவனம் கடன் கொடுக்கும் பொழுது விதிக்கும் நிபந்தனைகளை நிறைவேற்றுவதைப் பொருத்துதான், இந்த ஒப்புதல் முத்திரையை அந்நிறுவனம் ஏழை நாடுகளுக்கு வழங்கும். இந்த ஒப்புதல் முத்திரையைப் பெற முடியாத ஏழை நாடுகள், பிற ஏகாதிபத்திய நிறுவனங்களிடமிருந்தோ, ஏகாதிபத்திய நாடுகளிடமிருந்தோ எவ்விதக் கடனோ, உதவியோ, மூலதனமோ, தொழில்நுட்ப உதவியோ பெற முடியாது. இந்த அதிகாரத்தைக் காட்டியே தண்ணீரைத் தனியார்மயமாக்கும் திட்டத்திற்கு ஏழை நாடுகளைச் சம்மதிக்க வைத்துவிடுகிறது, சர்வதேச நாணய நிதியம்.

### 2. சர்வதேச நிதிக் கழகம் மற்றும் பல தரப்பு முதலீட்டு காப்புறுதி குழுமம்

ஏழை நாடுகளின் மின்சாரம், தொலைபேசி, குடிநீர் வழங்குதல் போன்ற அடிக்கட்டுமானத் துறைகளில் மூலதனம் போட விரும்பும் பன்னாட்டு நிறுவனங்களுக்குக் கடன் கொடுப்பதற்காகவே உருவாக்கப்பட்டுள்ள அமைப்புதான் சர்வதேச நிதிக் கழகம்.

ஏழை நாடுகளின் குடிநீர் வழங்கும் திட்டங்களில் பன்னாட்டு நிறுவனங்கள் போடும் மூலதனத்திற்கு ஏற்படும் அரசியல் ரீதியான இடர்ப்பாடுகளுக்கு எதிராகக் காப்புறுதி அளிப்பதுதான் பல்தரப்பு முதலீட்டு காப்புறுதி குழுமத்தின் நோக்கம்.

நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்த இண்டர்நேஷனல் வாட்டர் சர்வீசஸ் - பி.வி என்ற நிறுவனம், ஈக்வடார் நாட்டின் குடிநீர் திட்டமொன்றில் 1.8 கோடி அமெரிக்க டாலர்களை முதலீடு செய்திருக்கிறது. உள்நாட்டுக் கலகம், போர், ஒப்பந்தத்தை மீறுதல் போன்ற அரசியல் காரணங்களால் இம்மூலதனம் பறிமுதல் செய்யப்படுவதில் இருந்து முதன்முதலாக பல்தரப்பு முதலீட்டு காப்புறுதி கழகத்தால் காப்பீடு செய்யப்பட்டுள்ளது.

ஏழை நாடுகளின் மின்சாரம், தொலைபேசித் துறைகளில் பன்னாட்டு நிறுவனங்கள் மூலதனம் போடுவதைப் போலவே, தண்ணீர் வியாபாரத்திலும் முதலீடு செய்வதை ஊக்குவிப்பதற்காகவே, இந்த இரண்டு நிறுவனங்களையும் தனது துணை அமைப்புகளாக உலகவங்கி இயக்கி வருகிறது. மேலும், ஏழை நாடுகளின் குடிநீர் திட்டங்களில் பன்னாட்டு நிறுவனங்கள் மூலதனம் போடுவதற்கு வசதியாக, அத்திட்டங்களை இலாபம் தரும் திட்டம், இலாபம் தராத திட்டம் என இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்றும் கோருகிறது.

### 3. சட்டம், கண்காணிப்பு மற்றும் துறை சார்ந்த சீர்திருத்தங்கள்

பன்னாட்டு தண்ணீர் வியாபார நிறுவனங்கள் ஏழை நாடுகளில் எவ்விதக் கட்டுப்பாடுமின்றி எளிதாக மூலதனம் போடுவதற்கும், தங்களுக்குக் கிடைக்கும் இலாபத்தை எவ்விதக் கட்டுப்பாடுமின்றி சுதந்திரமாக எடுத்துச் செல்லுவதற்கும் வசதியாக சுங்கவரிகளை நீக்குவது தொடங்கி சந்தையின் ஏற்ற இறக்கங்களுக்கு ஏற்ப ஏழை நாடுகளின் பணத்தின் மதிப்பைத் தீர்மானிப்பது உள்ளிட்டு பல சீர்திருத்தங்களை உலக வங்கி கோருகிறது. ''ஒருங்கிணைந்த சட்டகம்'' என உலக வங்கி - சர்வதேச நாணய நிதியம் - உலக வர்த்தகக் கழகம் என்ற மூலாயுதத்தால் அழைக்கப்படும் இச்சீர்திருத்தங்களின் கீழ், 1. நீர் ஆதாரங்களின் மீதான உரிமை மற்றும் நீர் ஆதாரங்களைக் குத்தகைக்கு விடுவது தொடர்பாக வரையறுத்தல்; 2. பொது மக்களுக்குக் குடிநீர் வழங்கும் அரசுத்துறை நிறுவனங்களையும் தனியார் தண்ணீர் வியாபார நிறுவனங்களையும் சமமாக நடத்துவது தொடர்பாக சட்டம் மற்றும் கண்காணிப்பு முறைகளில் சீர்திருத்தங்களைக் கொண்டு வருதல்; 3. தண்ணீர் வழங்குதலைக் கண்காணிக்க அரசின் தலையீடின்றி சுதந்திரமாகச் செயல்படக்கூடிய கமிட்டியை அமைத்தல்; 4. முதலீட்டிற்கு ஏற்றபடியும்; விலைவாசி உயர்வுக்கு ஏற்றபடியும் கட்டண விகிதங்களை மாற்றியமைத்தல்; 5. கிராமங்க


படிப்பகம்

www.padippakam.com

ளுக்குக் குடிநீர் மற்றும் பாசன வசதிகள் செய்து கொடுப்பதை அரசின், பஞ்சாயத்துக்களின் பொறுப்பில் இருந்து கழட்டி விடுவதோடு, அச்சேவைகளை வியாபார நோக்கில் தனியாரிடம் ஒப்படைத்தல்; 6. குடிநீர் வழங்கல் சேவையை இலாபம் தருவது, இலாபம் தராதது எனப் பிரித்தல் என்ற ஆறு நிபந்தனைகள் ஏழை நாடுகளின் மீது விதிக்கப்படுகின்றன.

**4. அறிவு வங்கி (Knowledge Bank)**

ஏழை நாடுகள் பற்றிப் பல தகவல்களைத் திரட்டி வைத்துக் கொண்டு, அந்நாடுகளுக்கு ஆலோசனை வழங்குவது என்ற பெயரில், அந்நாடுகளின் எல்லா துறைகளிலும் சந்தை பொருளாதாரத்தைப் புகுத்திவிடும் அறிவு வங்கியாகவும் உலக வங்கி செயல்படுகிறது. பொது மக்களுக்குக் குடிநீர் வழங்குவதை அரசின் பொறுப்பாகக் கருதும் ஏழை நாடுகளின் அரசாங்கங்களுக்கு, ''இலவசக் குடிநீர் என்பது அபாயகரமானது'' எனப் ''புரிய'' வைப்பதுதான் இந்த அறிவு வங்கியின் முக்கிய நோக்கம். குடிநீர்க் கட்டணங்களை உயர்த்தக் கோரி ஏழை நாடுகளை நிர்பந்திப்பது மூலம், குடிநீர் வழங்குவதை வியாபாரமாக்குவது; குடிநீர் திட்டங்களில் போடப்படும் மூலதனத்தை முழுமையாகத் திருப்பி எடுக்கும் வகையில் கட்டண விகிதங்களை மாற்றியமைப்பதன் மூலம் குடிநீர் வழங்குவதைத் தனியார்மயமாக்குவது என்ற அடிப்படையில் உலக வங்கி ஏழை நாடுகளை மூளைச் சலவை செய்கிறது. இந்த வேலையை மிகத் திறம்படச் செய்வதற்காக, ஒரு கூட்டணியை, வலைப் பின்னலையே உலக வங்கி உருவாக்கி வைத்திருக்கிறது.

**5. கூட்டணி வலைப் பின்னல்:**

ஏழை நாட்டு மக்களையும், அரசுகளையும் தண்ணீரை ஒரு பண்டமாக, வியாபாரப் பொருளாக கருத்து ரீதியாக ஏற்றுக் கொள்ளச் செய்வதற்காக, உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், உலக வர்த்தகக் கழகம், பன்னாட்டு தண்ணீர் வியாபார நிறுவனங்கள், ஐ.நா. மன்றத்தைச் சேர்ந்த அமைப்புகள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் ஆகியவை இணைந்து பல்வேறு சர்வதேச அமைப்புகளை நடத்தி வருகின்றன. இந்த அமைப்புகளுள், ''உலக நீர் கவுன்சிலும்'', ''உலக நீர் கூட்டணியும்'' முக்கியமானவை. கருத்தரங்குகள், மாநாடுகள், செயல் விளக்கக் கூட்டங்கள், சிறு வெளியீடுகள் எனப் பல வடிவங்களில் தண்ணீரைத் தனியார்மயமாக்க வேண்டும் எனப் பிரச்சாரம் செய்யும் இந்த அமைப்புகள், இதன் மூலம் ஏழ்மையையும், குடிநீர் பற்றாக்குறையையும் ஒழிக்க முடியும் எனப் பொது மக்களை மூளைச் சலவை செய்கின்றன. பன்னாட்டு தனியார் நிறுவனங்களின் தொழில்நுட்பத்தையும், மேலாண்மை திறமைகளையும் குடிநீர் வழங்குதலில் பயன்படுத்தும் பொழுது, ஏழை மக்கள் கூடப் பலன் அடைய முடியும் என்ற தேன் தடவிய அண்டப் புளுகை, இந்த கூட்டணி அமைப்புகள் அவிழ்த்து விடுகின்றன.

**நாஃப்டா (NAFTA) வின் கள்ளக் குழந்தை ''காட்ஸ்''**

அமெரிக்கா தனது தலைமையில் கனடா, மெக்சிகோ ஆகிய நாடுகளை இணைத்துக் கொண்டு வட அமெரிக்க சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் (நாஃப்டா - North American Free Trade Agreement) என்ற பெயரில் பிராந்திய பொருளாதார வளையம் ஒன்றை உருவாக்கியிருக்கிறது. தண்ணீரைத் தனியார்மயமாக்க நாஃப்டாவில் என்னென்ன விதிகள் உருவாக்கப்பட்டதோ, அதே விதிகளை அடிப்படையாகக் கொண்டுதான் உலக வர்த்தகக் கழகமும் தண்ணீர் வர்த்தகம் குறித்த விதிகளை உருவாக்கியிருக்கிறது.

உலக வர்த்தகக் கழகம் தண்ணீரை இயற்கையின் கொடையாகவோ, சமூகச் சொத்தாகவோ பார்ப்பதில்லை. மாறாக, உ.வ.க. தண்ணீரை வியாபாரப் பண்டமாகப் பார்க்கிறது. உ.வ.க. உருவானதற்கு அடிப்படையாக இருந்த 'காட்' விதிகள், ''கடல் நீரைத் தவிர, பிற இயற்கையான தண்ணீர் அனைத்தும் வியாபாரப் பண்டம் தான்'' எனக் குறிப்பிடுகிறது. உ.வ.க., தண்ணீரை அடிப்படையான மனித உரிமையாகப் பார்ப்பதில்லை; ''நீர் என்பது மனிதனின் தேவைகளுள் ஒன்று என்றும்; மற்ற தேவைகளைப் போலவே, அதனையும் வியாபாரத்தின் மூலம் பூர்த்தி செய்துகொள்ள முடியும்'' என்றும் கூறுகிறது.

உலக வர்த்தகக் கழக விதிகளின்படி தண்ணீர் ஏற்றுமதி - இறக்குமதி வர்த்தகத்தின் மீது எந்தவொரு நாடும் தடையோ, கட்டுப்பாடுகளையோ விதிக்கக் கூடாது.

உ.வ.க.வில் உறுப்பினராக உள்ள ஒரு நாடு, சுற்றுப்புறச் சூழல் மாசுபடுவதைக் காரணமாகக் காட்டி தண்ணீர் ஏற்றுமதியைத் தடை செய்தால், அந்நடவடிக்கை வர்த்தகக் காப்பு நடவடிக்கையாகக் கருதப்பட்டு, உ.வ.க.வில் அந்நாட்டின் மீது வழக்குத் தொடர முடியும். தண்ணீர் வர்த்தகம், நீர் ஆதாரங்களையே மாசுபடுத்துவதாக, அழிப்பதாக இருந்தாலும்கூட, தனியார் நிறுவனங்கள் தண்ணீர் எடுப்பதை எந்தவொரு நாடும் தடை செய்யக் கூடாது என உ.வ.க. கட்டுப்பாடுகளை விதிக்கிறது. மேலும், சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்டுள்ள எந்தவொரு சர்வதேச ஒப்பந்தத்தையும் காட்டி, தண்ணீர் வியாபாரத்தைத் தடை செய்யக்கூடாது என உ.வ.க.வில் விதிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

''நாஃப்டா'' விதிகளின்படி உள்நாட்டு நிறுவனங்களுக்கும், அந்நிய நிறுவனங்களுக்கும் இடையே எவ்விதப் பாகுபாடோ, பாரபட்சமோ காட்டக் கூடாது; அவ்வாறு இருந்தால், அந்நிய நிறுவனங்கள் வழக்கு தொடர்ந்து நட்டஈடு கோரலாம்.

தண்ணீர் ஏற்றுமதியில் ஈடுபட்டுள்ள அந்நிய நிறுவனங்களின் மீது வர்த்தகத் தடையோ / கட்டுப்பாடுகளோ விதிக்கக் கூடாது. அவ்வாறு தடை விதித்தால் எதிர்கால இலாபம் கருதி வழக்குத் தொடர்ந்து நட்டஈடு கோரலாம்.

இந்த விதிகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ள ''காட்ஸ்'', தண்ணீர் வியாபாரத்தில் ஈடுபடும் அந்நிய நிறுவனங்களை உ.வ.க. உறுப்பு நாடுகள் தேசிய நிறுவனங்களைப் போல நடத்த வேண்டும் என்கிறது. மேலும், உள்நாட்டு நிறுவனங்களுக்குத் தரப்படும் சலுகை, மானியம் அனைத்தும் அந்நிய நிறுவனங்களுக்குத் தரப்பட வேண்டும் என்பதோடு, குடிமகன்களுக்கு உள்ள உரிமைகள் அனைத்தும் பன்னாட்டு நிறுவனங்களுக்குத் தரப்பட வேண்டும் எனக் கோருகிறது.

உ.வ.க. உறுப்பு நாடுகள், தண்ணீர் வியாபாரத்தின் மீது கட்டுப்பாடுகள் விதிக்க முயன்றாலோ; தர நிர்ணயம் செய்ய முயன்றாலோ, அந்தக் கட்டுப்பாடுகள் குறைந்தபட்ச சுமைகளைக் கொண்டிருக்க வேண்டும்; சர்வதேச அளவுகளின்படி, குறைந்தபட்ச கட்டுப்பாடுகள்தான் விதிக்க வேண்டும் என்கிறது ''காட்ஸ்''.

அதாவது, ஒரு நாடு, தனது தேவைக்கு ஏற்றபடி சட்டம் கொண்டு வர முடியாது; பன்னாட்டு நிறுவனங்களின் வர்த்தகத்தைப் பாதிக்காதவாறு தான் சட்டம், கட்டுப்பாடுகள், தர நிர்ணயம் இருக்க வேண்டும். மேலும், சட்டம் / கட்டுப்பாடுகள் கொண்டுவர எண்ணும் நாடுகள், இக்கட்டுப்பாடுகள்


படிப்பகம்



**பொலிவியா நாட்டில் உள்ள கொச்சபம்பா நகரின் குடிநீர் சேவை ''பெக்டெல்''லுக்கு வழங்கப்பட்டதை எதிர்த்து நடந்த கலகம்.**

குறைந்தபட்ச சுமையைத்தான் கொண்டிருக்கும்; பன்னாட்டு நிறுவனங்களுக்கு இக்கட்டுப்பாடுகளால் எவ்விதப் பாதிப்பும் ஏற்படாது என உலக வர்த்தகக் கழகத்தின் முன் நிரூபிக்க வேண்டும்.

இதற்கும் மேலாக, உ.வ.க. உறுப்பு நாடுகள் இயற்றும் சட்டங்கள் / கட்டுப்பாடுகளை ரத்து செய்யும் ''வீட்டோ'' அதிகாரம் ''காட்ஸ்'' ஒப்பந்தத்தில் சேர்க்கப்பட வேண்டும் எனக் கோரி, இந்தியா உள்ளிட்ட ஏழை நாடுகளுக்கு மூன்று ஆண்டுகளுக்கு முன்பே ஒரு இரகசிய அறிக்கை, உ.வ.க.வால் அனுப்பப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

உ.வ.க.வில் உறுப்பினராக உள்ள ஏழை நாடுகள், உலக வர்த்தகக் கழகத்தின் கட்டளைகளை மீறிச் செயல்பட முடியாத பொறியில் சிக்கிக் கொண்டுள்ளன. ஏனென்றால், உ.வ.க., வெறும் சர்வதேச வர்த்தக அமைப்பாக உருவாக்கப்படவில்லை. சட்டம் இயற்றவும் அதை மீறும் ஏழை நாடுகளைத் தண்டிக்கும் அதிகாரமும் கொண்ட ''உலக அரசாக'' உருவாக்கப்பட்டுள்ளது.

**தண்ணீர் தனியார்மயம்: மறுகாலனியாதிக்கத்தின் கோர வடிவம்**

அனைவருக்கும் பாதுகாப்பான குடிநீர் வழங்க வேண்டும் என்பதை உள்நாட்டு அரசாங்கம் முதல் ஐ.நா. மன்றம் முடிய, ஆளும் கும்பல் அனைவரும் ஒரு கொள்கையாகவே அறிவித்திருக்கிறார்கள். ஆனால், குடிநீர் வழங்கும் சேவையை வியாபார நோக்கில் தனியார்மயமாக்கினால், தற்பொழுது கிடைக்கும் 'சுகாதாரமற்ற' குடிநீர் கூடக் கிடைக்காமல் போய்விடும். ஏற்கெனவே குடிநீர் விநியோகம் தனியார்மயமாக்கப்பட்ட சில நாடுகளின் அனுபவங்களைப் பார்த்தே, இந்த உண்மையை நாம் புரிந்து கொள்ள முடியும்.

தென் ஆப்பிரிக்க நாட்டில், வெள்ளை நிறவெறி ஆட்சியை வீழ்த்திவிட்டுப் பதவிக்கு வந்த ஆப்பிரிக்க தேசிய காங்கிரசு கட்சி, 1997-ஆம் ஆண்டு தண்ணீரைத் தனியார்மயமாக்கும் சட்டத்தைக் கொண்டு வந்தது. அந்நாட்டின் குடிநீர் விநியோகம் பிரான்சு நாட்டைச் சேர்ந்த பன்னாட்டு நிறுவனங்களான விவாண்டி மற்றும் சூயலிடம் ஒப்படைக்கப்பட்டது.

இதன்பின், செல்ஃபோன்களில் பயன்படுத்தப்படும் 'ஃப்ரீபெய்ட்' அட்டையைப் போல, தண்ணீரைப் பெற முன்பணம் கட்டும் ''ப்ரீ-பெய்ட்'' கார்டு அறிமுகப்படுத்தப்பட்டது. அந்நாடு முழுவதும் ஏறத்தாழ 1 கோடி குடிநீர் இணைப்புகள் துண்டிக்கப்பட்டதால் ஏழை, நடுத்தர மக்களுக்குப் பாதுகாப்பான குடிநீர் கிடைப்பதே குதிரைக் கொம்பானது. இதன்விளைவாக, தண்ணீர் தனியார்மயமான ஆறே மாதத்தில் அந்நாட்டில் காலரா நோய் பரவியது.

பொது மக்களுக்குக் குடிநீர் வழங்குவதைத் தடுத்து நிறுத்திவிட்ட தண்ணீர் நிறுவனங்கள், ''ஒரு மாதத்தில் ஐந்து முறை குளித்தால் போதும்; ஒரு நாளைக்கு இரண்டு முறை மட்டும் கக்கூஸுக்கு தண்ணீர் ஊற்றுங்கள்'' எனத் தண்ணீர் சிக்கனம் பற்றிப் பொதுமக்களுக்குப் போதித்தது.

தென் அமெரிக்க கண்டத்திலுள்ள பொலிவியா நாட்டைச் சேர்ந்த கொச்சபம்பா நகருக்கு குடிநீர் வழங்குவதை பெக்டெல் என்ற அமெரிக்க நிறுவனத்திடம் ஒப்படைத்தது, அந்நாட்டு அரசு. 1999-ஆம் ஆண்டு இதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டவுடனேயே, கொச்சபம்பா நகர மக்கள் தன்னுடைய அனுமதியின்றி மழைநீரைக் கூடச் சேகரிக்கக் கூடாது எனக் கட்டளையிட்டது, பெக்டெல். இதன் விளைவாக, மாத மொன்றுக்கு வெறும் 4,500 ரூபாய் சம்பாதிக்கும் குடும்பம், குடிதண்ணீருக்காக மாதாமாதம் 900 ரூபாய் செலவழிக்க வேண்டிய அவல நிலை ஏற்பட்டது. இந்தக் கொள்ளைக்கு எதிராகவும் தண்ணீர் உரிமையைப் பாதுகாக்கவும் அந்நகர மக்கள் பெக்டெல்லை எதிர்த்துப் போராடத் தொடங்கினர். பெக்டெல்லைப் பாதுகாக்க அந்நகரில் இராணுவச் சட்டம் அமல்படுத்தப்பட்டது. எனினும், பெக்டெலுக்கு எதிராக பொலிவியா எங்கும் நடந்த போராட்டங்களின் விளைவாக, பெக்டெலுக்கு வழங்கப்பட்ட வியாபார உரிமை ரத்து செய்யப்பட்டது.

ஆப்பிரிக்கக் கண்டத்தைச் சேர்ந்த 9 நாடுகளில் 1998-ஆம் ஆண்டு குடிநீர் வழங்கும் சேவை தனியார்மயமாக்கப்பட்டது. தண்ணீர் கட்டண உயர்வால், அந்நாடுகளைச் சேர்ந்த உழைக்கும் மக்கள் குளங்களிலும், குட்டைகளிலும் தேங்கிக் கிடக்கும் நீரைக் குடிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். இதையடுத்து இந்நாடுகளில் பரவிய காலரா நோய்க்கு, 300-க்கும் மேற்பட்டோர் பலியாகினர்; 25,000 பேர் பாதிக்கப்பட்டனர்.

ஆசிய கண்டத்தைச் சேர்ந்த பிலிப்பைன்சு நாட்டிலும் தண்ணீர் தனியார்மயமான பிறகு, தண்ணீர் கட்டணம் 4 முதல் 10 மடங்கு வரை உயர்ந்தது. பொதுமக்களுக்குப் பாதுகாப்பான குடிநீர் கிடைக்காததால் காலரா நோய் பரவியது.

எனவே, தண்ணீர் தனியார்மயம் என்பது மறுகாலனியாதிக்கத்தின் கோர வடிவம். உணவு இல்லாமல் கூட பல நாட்கள் வாழ்ந்துவிட முடியும்; ஆனால், தண்ணீர் இல்லாமல், மனிதன் ஓரிரு நாட்கள் கூட வாழ முடியாது. எனவே, நாம் உயிர் வாழ வேண்டும் என்றாலே, இத்தனியார்மயத்தை எதிர்த்துப் போராடியே தீர வேண்டும்!

• ரஹீம்

www.padippakam.com

# திருப்பூரைக் கைப்பற்றிய தண்ணீர் கொள்ளையர்கள்

ஏகாதிபத்திய நிறுவனங்கள் எள் என்றால் எண்ணெயாக நிற்கும் அடிமை புத்தி கொண்டவர்கள் இந்திய ஆட்சியாளர்கள் என்பதற்கு இன்னொரு சான்று - தண்ணீர் தனியார்மயம். உலக வர்த்தகக் கழகத்தில் ''காட்ஸ்'' ஒப்பந்தம் கையெழுத்தாவதற்கு முன்பே, அதன் விதிகளை இந்தியாவில் நடைமுறைப்படுத்தவும் தொடங்கிவிட்டார்கள். கேரள உயர்நீதிமன்றம் கொக்கோ - கோலா நிறுவனத்திற்கு ஆதரவாக அளித்த தீர்ப்பு இதை உறுதி செய்கிறது.

''உள்நாட்டு குடிமகன்களுக்கு உள்ள உரிமைகள் அனைத்தும் அந்நிய நிறுவனங்களுக்கு வழங்கப்பட வேண்டும்'' என்பது ''காட்ஸ்''-இன் விதி. கேரளாவிலுள்ள பிளாச்சிமடா கிராமத்து மக்கள் கொக்கோ - கோலாவிற்கு எதிராக நடத்திய வழக்கை விசாரித்த கேரள உயர்நீதி மன்றம், ''சட்டபூர்வமான பொருளில் நிலவும் கொக்கோ - கோலா என்ற நபருக்கு **(Legal Person)** இத்தகைய கட்டுப்பாடு (நிலத்தடி நீரைப் பயன்படுத்துவது தொடர்பாக) விதிக்கப்படுமானால், மற்றெல்லா குடிமகன்களுக்கும் இதே போன்று கட்டுப்பாடு விதிக்க வேண்டியிருக்கும்'' எனக் கூறி, காட்ஸ்-இன் விதியினையே தீர்ப்பாகக் கூறிவிட்டது.

இது மட்டுமின்றி, தண்ணீர் தனியார்மயம் குறித்து உலக வங்கி தரும் ஆலோசனைகளையே, தேசிய நீர் கொள்கை - 2002 என்ற பெயரில் இந்திய அரசு தயாரித்து வெளியிட்டுள்ளது. மேலும், இந்தியா முழுவதும் குறிப்பிட்ட 30 நகரங்களின் குடிநீர் வழங்கும் சேவையினைப் பன்னாட்டு நிறுவனங்களின் கைகளில் ஒப்படைக்கத் திட்டங்கள் தயாராக உள்ளன. இந்த 30 நகரங்களில் திருப்பூர் முன்னணியில் உள்ளது.

திருப்பூர் நகராட்சி எல்லைக்குள் அமைந்திருக்கும் குடியிருப்புகள், பின்னலாடைத் தொழிற்சாலைகள், சாயப் பட்டறைகள் மற்றும் பவானி ஆற்றில் இருந்து திருப்பூருக்குத் தண்ணீர் எடுத்து வரப்படும் வழியில் அமைந்துள்ள 23 கிராமங்களுக்கும் குடிநீர் வழங்கும் பொறுப்பை தமிழக அரசு, இந்தியத் தரகு முதலாளித்துவ நிறுவனமான ''மஹிந்திரா அண்ட் மஹிந்திரா'', அமெரிக்காவைச் சேர்ந்த பெக்டெல், மற்றும் யுனைடெட் வாட்டர் யுடிலிடீஸ் ஆகிய தனியார் நிறுவனங்களிடம் முப்பது வருடக் குத்தகைக்கு விட்டிருக்கிறது.

அதேசமயம், இந்த இந்திய - அந்நிய நிறுவனங்களின் கூட்டணிதான் திருப்பூர் நகர மக்களுக்குக் குடிநீர் வழங்கப் போகும் எஜமானர்கள் என்பது வெளிப்படையாகத் தெரியாமல் இருப்பதற்காக, திருப்பூர் பின்னலாடை முதலாளிகள் சங்கத்துடன் இணைந்து ''புது திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகம்'' என்ற அமைப்பை தமிழக அரசு உருவாக்கி, இந்த கழகம் தான் திருப்பூர் நகராட்சி மூலம் குடிநீர் வழங்கப் போவதாகக் காட்டி வருகிறது.

இந்தத் திட்டம் நடைமுறைக்கு வந்த பிறகு, திருப்பூர் நகர மக்களுக்கு தினந்தோறும்கூட குடிநீர் வழங்க முடியும் எனப் பீற்றிக் கொள்கிறது திருப்பூர் நகராட்சி. தண்ணீர் எத்தனை நாளைக்கு ஒருமுறை வரும் என்பதைவிட, தண்ணீர் கட்டணம் எவ்வளவு இருக்கும் என்பதுதான் பிரச்சினை.

திருப்பூர் நகராட்சி, அந்நகரில் உள்ள கடைகள் மற்றும் வணிக நிறுவனங்களுக்கு தற்பொழுது 1000 லிட்டர் நீரை ஏழு ரூபாய்க்கு விற்று வருகிறது. இப்புதிய குடிநீர் திட்டம் நடைமுறைக்கு வந்த பிறகு, பின்னலாடை தொழில் உள்ளிட்ட வணிக நிறுவனங்களுக்கு வழங்கப்படும் தண்ணீரின் விலை 1,000 லிட்டருக்கு 45 ரூபாய்க்கு மேல் உயர்ந்து விடும். இதை வைத்துப் பார்த்தால், தற்பொழுது வீடுகளுக்கு வழங்கப்படும் தண்ணீருக்கு நான்கு ரூபாயாக இருக்கும் கட்டணம், விண்ணை முட்டிக் கொண்டுதான் நிற்கும்.

இக்குடிநீர் திட்டத்திற்காக, தனியார் முதலாளிகளுடன் செய்து கொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தத்தின்படி, தண்ணீர் கட்டணத்தை திருப்பூர் நகராட்சி நிர்ணயிக்க முடியாது. தண்ணீர் கட்டணத்தைப் பொது மக்களிடமிருந்து வசூலித்துக் கொடுக்கும் ''ஏஜெண்டு'' வேலையைத்தான் பார்க்க முடியும். அரசின் தலையீடு இன்றி தண்ணீர் கட்டணத்தை நிர்ணயிக்க, முதலாளிகளின் எடுபிடிகளைக் கொண்ட தனியொரு கமிட்டி அமைக்கப்படும்; தண்ணீர் கட்டணம், ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மாதத்தில் விலைவாசி உயர்வுக்கும், பண வீக்கத்துக்கும் தகுந்தவாறு மாற்றி அமைக்கப்படும். இந்தத் திட்டத்தில் பங்குதாரர்களாகப் புகுந்துள்ள அந்நிய நிறுவனங்கள் தங்களின் இலாபத்தை அமெரிக்க டாலர்களாக அள்ளிச் செல்ல வேண்டும் என்பதற்காகத்தான் விலைவாசி உயர்வு, பண வீக்கம் என்றெல்லாம் விதிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

திருப்பூர் நகரில் வாழும் தொழிலாளர்கள், தங்களின் உணவுக்காக ஒவ்வொரு மாதமும் எவ்வளவு செலவழிக்கிறார்களோ, அதே அளவிற்கு தண்ணீருக்கும் செலவழிக்க வேண்டும் என்ற அபாயத்தில் தள்ளப்பட்டுள்ளனர். இதில் இருந்து யாரும் தப்பித்துவிட முடியாது. ஏனென்றால், திருப்பூர் நகரில் உள்ள பொதுக் குழாய்களையும், லாரி மூலம் தண்ணீர் வழங்கப்படுவதையும் இனி நிறுத்திவிடப் போவதாக திருப்பூர் நகராட்சி அறிவித்து விட்டது. பின்னலாடைத்

**திருப்பூர் நகருக்குக் குடிநீர் வழங்குவதைப் பன்னாட்டு நிறுவனங்களிடம் குத்தகைக்கு விட்டதை விழா எடுத்துத் தொடங்கி வைக்கும் ஜெயா.**





படிப்பகம்


www.padippakam.com

தொழிலால் நிலத்தடி நீரே மாசுபட்டுப் போய்விட்ட திருப்பூர் நகரில் வாழும் மக்கள், தனியார் முதலாளிகள் தரும் தண்ணீரை வாங்குவதைத் தவிர வேறு வழியில்லாத இக்கட்டில் தள்ளப்பட்டுள்ளனர். இதற்கு வழியில்லாத கூலித் தொழிலாளர் குடும்பங்கள், திருப்பூர் நகரை விட்டு வெளியேற வேண்டியிருக்கும்; இல்லையென்றால், குடிக்கவே லாயக்கற்ற தண்ணீரைத் தேடிப் பிடித்துதான் பயன்படுத்த வேண்டியிருக்கும்.

இந்தத் திட்டம் அமலுக்கு வருவதற்கு முன்பாகவே, வீடுகளுக்கு வழங்கப்படும் குடிநீர் கட்டணத்தை ரூ. 4/-லிருந்து ரூ. 7/- ஆகவும்; கடை மற்றும் வணிக நிறுவனங்களுக்கு வழங்கப்படும் தண்ணீர் கட்டணத்தை ரூ. 7/-லிருந்து ரூ. 14/- ஆகவும் உயர்த்தப் போவதாக அறிவித்திருக்கிறது, திருப்பூர் நகராட்சி. திருப்பூர் குடிநீர் திட்டத்திற்கு 125 கோடி ரூபாய் கடன் கொடுத்துள்ள உலக வங்கியின் நிபந்தனைக்குப் பணிந்துதான் இக்கட்டண உயர்வு அறிவிக்கப்பட்டுள்ளது. குடிநீர் வழங்குவது தனியார் கைக்குப் போன பிறகு திடீரென கட்டண உயர்வை அறிவிப்பதைவிட, இப்பொழுது தொடங்கியே மெல்ல மெல்ல தண்ணீர் கட்டணத்தை அதிகப்படுத்துவதன் மூலம், சுமையை எதிர்க்காமல் தாங்குவதற்கு மக்களைப் பழக்கப்படுத்தப் பார்க்கிறது, தமிழக அரசு.

இக்குடிநீர் திட்ட ஒப்பந்த விதி எண் 29.1-ன் படி, இந்த ஒப்பந்தம் குறித்த நிதி விசயங்கள், வியாபார விசயங்கள் பற்றி எவருக்கும் தெரிவிக்கவோ, வெளியிடவோ உரிமையில்லை என்றும்; ஒப்பந்த விதி எண் 29.4-இன்படி, இந்தத் திட்டத்தில் சம்பந்தப்பட்ட குத்தகைதாரர்கள் பற்றிய - அதாவது, தனியார் முதலாளிகள் பற்றிய ரகசிய விபரங்களை வெளியிடக் கூடாது என்றும் நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன. மேலும், இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் ஏதாவது பிரச்சினை ஏற்பட்டு, மாற்று வழி பற்றி தமிழக அரசு ஆலோசித்தால், குத்தகைதாரர்களான தனியார் முதலாளிகளின் வியாபாரத்திற்குப் பாதகம் ஏற்படாத வகையில் மாற்றுத் திட்டம் இருக்க வேண்டும் என்றும் நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

அரசின் பொறுப்பில் இருக்கும் குடிநீர் வழங்கும் சேவையை வியாபாரமயமாக்கும், தனியார்மயமாக்கும் இந்தத் திட்டம் திருப்பூர் நகரில் வெற்றி பெற்றால், இதே போன்ற திட்டத்தை



தெற்கு தில்லி பகுதிக்கு வழங்கும் குடிநீரை சுத்திகரிப்பதற்கான குத்தகை தனியாரிடம் விடப்பட்ட பின் நடக்கும் கட்டுமானப் பணிகள்.

சிவகாசியில் நடைமுறைப்படுத்தப் போவதாக அறிவித்திருக்கிறது, தமிழக அரசு.

பவானி ஆற்றில் இருந்து நீர் எடுக்கும் குத்தகையை கோயம்புத்தூர் அன்னபூர்ணா ஓட்டல் முதலாளிக்கும்; தாமிரபரணி ஆற்றில் இருந்து தண்ணீர் எடுக்கும் குத்தகையை கொக்கோ - கோலாவிற்கும் கொடுத்திருக்கும் தமிழக அரசு, தமிழகமெங்கும் நகர்ப்புற குடிநீர் வழங்கும் சேவையைத் தனியார்மயமாக்கும் நோக்கத்தோடு, தமிழ்நாடு தண்ணீர் முதலீட்டு நிறுவனத்தைத் தொடங்கியிருக்கிறது.

இத்தண்ணீர் தனியார்மயம் நகர்ப்புறத்தோடு மட்டும் நின்றுவிடப் போவதில்லை. விவசாயத்திற்கு வழங்கப்படும் பாசன வசதிகளையும் தனியார்மயமாக்கும் நோக்கத்தோடு செயல்படுத்தப்படுகிறது.

ஆந்திராவிலும், ஒரிசாவிலும் பாசன வசதிகளை கிராம மக்களிடம் ஒப்படைப்பது என்ற சதித்திட்டத்தோடு அறிமுகப்படுத்தப்பட்ட ''பாணி பஞ்சாயத்துகள்'', இன்று கிராமப்புற ஆதிக்கச் சக்திகளின் பிடிக்குள் போய் தனியார்மயமாகிவிட்டது.

மகாராஷ்டிர அரசு, உலக வங்கியின் கட்டளைப்படி, பாசன வசதியை வியாபாரமயமாக்கும் திட்டத்தோடு, ஒரு ஏக்கருக்கு ஒரு ஆண்டுக்கான பாசனக் கட்டணம் ரூ. 8,000/- என நிர்ணயித்து, விவசாயிகளின் மீது இன்னுமொரு சுமையை ஏற்றிவிட்டது.

விளைபொருட்களுக்கு உரிய விலை கிடைக்காமல் தற்கொலைக்குத் தள்ளப்படும் விவசாயிகளை, இந்தப் பாசனக் கட்டண உயர்வு நிலத்தில் இருந்து அப்புறப்படுத்தி விடும். இப்படி தரிசாகப் போடப்படும் விளைநிலங்களை, தரிசு நில மேம்பாடு என்ற பெயரில் தனியார் முதலாளிகள் சுருட்டிக் கொள்ள வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரும்.

எனவே, பாசன வசதியைத் தனியார்மயப்படுத்துவது என்பது நமது விளைநிலங்களைப் பன்னாட்டு நிறுவனங்களும், அவர்களின் ஏஜெண்டுகளான இந்தியத் தரகு முதலாளிகளும் கொல்லைப்புற வழியாக கைப்பற்றிக் கொள்ளுவதற்கான ஏற்பாடுதான். இந்திய மக்களை உணவுக்கும், குடிநீருக்கும் ஏகாதிபத்திய நிறுவனங்களிடம் கையேந்த வைக்கும் மறுகாலனியாதிக்கச் சதிதான் தண்ணீர் தனியார்மயம்.

இந்தச் சதித் திட்டத்திற்குச் சாவு மணி அடிக்காமல் நமக்கு வாழ்க்கை யில்லை. உ.பி.யில் உள்ள தெர்ரி அணைக்கட்டுப் பாசனப் பகுதியைச் சேர்ந்த விவசாயிகள், கங்கையில் இருந்து தண்ணீர் எடுக்கும் குத்தகையைப் பெற்றுள்ள பிரான்சு நாட்டைச் சேர்ந்த பன்னாட்டு தண்ணீர் நிறுவனமான சூயஸை எதிர்த்து, ''சூயஸே வெளியேறு'' என்ற முழக்கத்தை முன் வைத்துப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் போராட்ட நெருப்பு திருப்பூரிலும், திருநெல்வேலியிலும் பற்றிப் பரவட்டும்; தண்ணீரைக் கொள்ளையடிக்கும் பன்னாட்டு நிறுவனங்களையும், உள்ளூர் முதலாளிகளையும் சுட்டுப் பொசுக்கட்டும்!

• அழகு


படிப்பகம்

www.padippakam.com

## பொலிவியா:

# பஞ்சைப் பராரிகளின் பேரெழுச்சி ஏகாதிபத்திய வாயிலில் இடிமுழக்கம்

**பொ**லிவியாவில் அண்மையில் நடந்த மக்கள் பேரெழுச்சியும் அதைத் தொடர்ந்து அந்நாட்டின் அதிபர் அமெரிக்காவுக்குத் தப்பியோடியிருப்பதும் தென்னமெரிக்கக் கண்டத்தையே உலுக்குகிறது. அக்கண்டத்து நாடுகளின் பலதரப்பட்ட மக்கள் விரோத ஆட்சியாளர்கள் பொலிவிய பாணியில் இங்கேயும் மக்கள் போராட்டங்கள் வெடித்துவிடுமோ என்று பீதியில் நடுநடுங்குகிறார்கள். ஏனென்றால், கடந்த ஈராண்டுகளில் இரண்டு முறை பொலிவிய நாட்டின் அதிபர்கள், மக்கள் போராட்டங்களால் பதவியிலிருந்து விரட்டியடிக்கப்பட்டுள்ளனர். மேலும், பொலிவியாவில் நடக்கும் போராட்டங்கள், அந்நாட்டிற்கே உரித்தான உள்நாட்டு விவகாரமல்ல; தென்னமெரிக்கக் கண்டம் முழுவதும் பற்றிப், படர்ந்து வரும் புரட்சிகர மக்கள் திரள் போராட்டங்களின் ஓர் அங்கம்.

தென்னமெரிக்காவின் மேற்கு பகுதியில் பெரு, சிலி ஆகிய நாடுகளை அடுத்துள்ள ஏழை நாடுதான் பொலிவியா. ஐந்தாண்டுகளுக்கு முன்பு அந்நாட்டின் ஆட்சியாளர்கள் தண்ணீரைத் தனியார்மயமாக்கியதை எதிர்த்து, கொச்சபம்பா எனும் நகரில் உழைக்கும் மக்கள் ஆயுதமேந்திப் போராடி பெக்டெல் எனும் அமெரிக்க தண்ணீர் கம்பெனியை விரட்டியடித்து, இப்போராட்டத்தால் உலகெங்கும் பிரபலமடைந்த நாடுதான் பொலிவியா. தண்ணீரைத் தனியார்மயமாக்கும் கொள்கைக்கு எதிராக மட்டுமின்றி, இயற்கை வளமும் தாது வளமும் எரிவாயு வளமும் நிறைந்த அந்நாட்டை ஏகாதிபத்தியங்களின் மறுகாலனியாக்கும் கொள்கைக்கு எதிராகவும் அந்நாட்டு மக்கள் தொடர்ந்து போராடி வருகிறார்கள். தாங்கள் தேர்ந்தெடுத்த அதிபர்கள், வாக்குறுதியை மீறிச் செயல்பட்டால், அடுத்த தேர்தல்வரைக் காத்திருப்போம் என்று அவர்கள் அமைதியாக இருப்பதில்லை. நாட்டையும் மக்களையும் அடிமைப்படுத்தும் கொள்கையை எந்த அதிபர் பின்பற்றத் தொடங்கினாலும், உடனே பொலிவிய மக்கள் கிளர்ந்தெழுந்து போராடி, துரோக ஆட்சியாளர்களைத் தூக்கியெறிகிறார்கள்.

பொலிவியா - தென்னமெரிக்கக் கண்டத்தில் வளமான இயற்கை மூல வளங்களைக் கொண்ட நாடு. இக்கண்டத்தில் வெனிசுலாவுக்கு அடுத்து இயற்கை எரிவாயு வளத்தைக் கொண்டுள்ள நாடு. இதுதவிர நிலக்கரி செம்பு, வெள்ளி, மங்கனீசு, தகரம் முதலான கனிம வளங்களைக் கொண்டுள்ள நாடு. இருப்பினும் பொலிவியாவின் 70%-க்கும் மேலான மக்கள் வறுமையிலும் அரைப்பட்டினியிலும் பரிதவிக்கின்றனர். கிராமப்புறங்களில் மின்சாரம், குடிநீர், சுகாதாரம் - மருத்துவம் போன்ற எந்தவொரு அடிப்படை வசதியுமின்றி மக்கள் ஊழல்கின்றனர். பொலிவிய விவசாயிகளுக்கு கோகோ பயிர் சாகுபடி பாரம்பரியத் தொழில். கோகோவிலிருந்து கொகைன் என்ற போதை மருந்து தயாரிக்கப்படுவதாலும், அமெரிக்காவில் அதன் புழக்கம் பெருகி விட்டதாலும் அமெரிக்காவின் கட்டளைப்படி பொலிவியாவில் கோகோ பயிர் சாகுபடிக்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளதால், விவசாயிகள் வாழ்விழந்து நிற்கிறார்கள். ஏகாதிபத்திய வல்லரசுகளால் மறுகாலனியாக்கப்பட்டு தனியார்மயமும் தாராளமயமும் பொலிவியாவில் தீவிரமாக்கப்பட்டதன் விளைவாக, நகர்ப்புறங்களில் தொழிலாளர்கள் வேலையிழந்து வாழ்விழந்து பரிதவிக்கிறார்கள்.

இருப்பினும், தனியார்மயம் - தாராளமயம் எனும் நாட்டை அடிமைப்படுத்தும் நாசகாரக் கொள்கைகளுக்கு எதிராக இந்நாட்டு பஞ்சைப் பராரிகள் தொடர்ந்து விடாப்பிடியாகப் போராடி வருகிறார்கள். உலக வங்கியின் கட்டளைப்படி பொலிவிய சர்வாதிகார ஆட்சியாளர்கள் நாட்டின் மூன்றாவது பெரிய நகரமான கொச்சபம்பா-வின் குடிநீர் வழங்கலை 1999-இல் பெக்டெல் என்ற அமெரிக்கக் கம்பெனிக்கு கையளித்ததை எதிர்த்தும், ஒப்பந்தத்தை ரத்து செய்யக் கோரியும் பொலிவிய மக்கள் நடத்திய போராட்டம் வீரம் செறிந்தது. தண்ணீரைத் தனியார்மயமாக்கி தமது வாழ்வுரிமையைப் பறிக்கும் ஆட்சியாளர்களை எதிர்த்து 2000-வது ஆண்டில் பெரும்படையாகத் திரண்டெழுந்த விவசாயிகள் அரசு அலுவலகங்களை முற்றுகையிட்டு முடக்கியதோடு, மாணவர்-இளைஞர்களோடு இணைந்து தேசிய நெடுஞ்சாலைகளில் தடையரண்களை எழுப்பி போக்குவரத்தை முற்றாகத் துண்டித்து பல வாரங்கள் தொடர்ந்து போராடினர். ஆட்சியாளர்கள் இராணுவத்தை ஏவி அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டபோதிலும் மக்களின் போராட்ட உறுதியைக் குலைக்க முடியவில்லை. தண்ணீரை ஏகபோகமாக்கிக் கொண்டு கொள்ளையடித்து வந்த அமெரிக்க பெக்டெல் நிறுவனத்துடனான ஒப்பந்தத்தை ரத்து செய்து, அந்நிறுவனத்தை நாட்டை விட்டே வெளியேற்றும் வரை அம்மக்களின் போராட்டம் ஓயவில்லை.

தண்ணீர் தனியார்மயமாக்கலுக்கு எதி

**"எரிவாயு வளத்தை நாட்டுடைமையாக்கு! துரோக அதிபரே பதவி விலகு!" - பொலிவிய மக்களின் பேரெழுச்சி.**





படிப்பகம்

www.padippakam.com

ரான இப்போராட்டத்தில் பொலிவிய மக்கள் பெற்ற இம்முதற்கட்ட வெற்றி யானது, தென்னமெரிக்கக் கண்டம் முழுவதும் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்ட உணர்வுக்குப் புது ரத்தம் பாய்ச்சியது. பொலிவியாவைப் போலவே, ஈக்வடார், சிலி, பிரேசில், அர்ஜெண்டினா முதலான நாடுகளில் தண்ணீரைத் தனியார்மயமாக்கும் ஆட்சியாளர்களுக்கு எதிராகப் போராட்டங்கள் வெடித்துப் பரவின.

பொலிவிய மக்களின் போராட்டம் நாட்டைச் சூறையாடிய பெக்டேல் நிறுவனத்தை விரட்டியடிப்பதோடு நின்றுவிடவில்லை. நாட்டின் மூலவளங்களைக் கொள்ளையடித்து வரும் அனைத்து அன்னிய ஏகாதிபத்திய நிறுவனங்களுக்கு எதிரான போராட்டமாக அது விரிவடைந்தது. ''19-ஆம் நூற்றாண்டில் வெள்ளி மற்றும் குவானாவை அவர்கள் கொள்ளையடித்தார்கள். 20-ஆம் நூற்றாண்டில் நிலக்கரியையும் தகரத்தையும் சூறையாடினார்கள். இப்போது எமது இயற்கை எரிவாயு வளத்தையும் உறிஞ்சிக் கொழுக்கிறார்கள். இனியும் நாங்கள் இதை அனுமதிக்க மாட்டோம்'' என்று பொலிவிய மக்கள் குமுறுகிறார்கள்.

பொலிவியாவின் இயற்கை எரிவாயு பல்லாயிரம் கோடி டாலர் மதிப்புடையது. இந்த எரிவாயுவை உறிஞ்சி எடுத்து சிலி நாட்டின் வழியே அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யும் திட்டத்தை அப்போதைய பொலிவிய அதிபரான கான்சலோ லோசடா அறிவித்தார். ''கோனி'' என்று செல்லமாக அழைக்கப்பட்ட இந்த அதிபர், இதன் மூலம் பொலிவியா கொழுத்த ஆதாயமடைந்து சொர்க்கபுரியாக மாறிவிடும் என்று நம்பச் சொன்னார். ஆனால், அவரது எரிவாயு ஏற்றுமதி திட்டத்தால் பொலிவியாவுக்கு மொத்த மதிப்பில் 18% அளவுக்குத்தான் வருவாய் கிடைத்தது. அதையும் அதிகாரவர்க்க - இராணுவக் கும்பல்களும் மேட்டுக்குடியினரும் விழுங்கியது போக, பஞ்சைப் பராரிகளான பொலிவிய மக்களுக்கு எதுவும் கிடைக்கவில்லை. இதுவும் போதாதென்று அரசுத்துறை கட்டுப்பாட்டிலிருந்த எரிவாயு வளத்தை பிரிட்டிஷ்கேஸ், எக்சான்-மொபில், ஸ்பெயின் நாட்டின் ரெப்சோல் ஆகிய பன்னாட்டு எண்ணெய்-எரிவாயு ஏகபோக நிறுவனங்களிடம் அதிபர் கோனி 2003-இல் தாரை வார்த்தார்.

நாட்டை மீண்டும் காலனியாக்கும் இத்தனியார்மயக் கொள்ளையை எதிர்த்தும் அமெரிக்கக் கைக்கூலி அதிபர் கோனியைப் பதவி விலகக் கோரியும் பொலிவிய மக்கள் ஆர்த்தெழுந்தார்கள். 2003-ஆம் ஆண்டின் செப்டம்பர் - அக்டோபர் மாதங்களில் தொழிலாளர்களும் விவசாயிகளும் மாணவர்களும் இளைஞர்களும் ஓரணியில் திரண்டு, எரிவாயு வளத்தை நாட்டுடமையாக்கக் கோரி நாடு தழுவிய போராட்டத்தில் குதித்தனர். இது ''எரிவாயு யுத்தம்'' என்றழைக்கப்படுகிறது. அதிபர் கோனி இராணுவத்தை ஏவி போராடிய மக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தி 70-க்கும் மேற்பட்டோரைக் கொன்றொழித்தார். இருப்பினும் பொலிவிய மக்களின் போராட்டப் பெருநெருப்பை இராணுவ அடக்குமுறையால் தணிக்க முடியவில்லை. அடக்குமுறையை எதிர்த்து அக்.14-ஆம் தேதியன்று தலைநகர் லாபாசை 50,000-க்கும் மேற்பட்ட விவசாயிகளும் பழங்குடியின மக்களும் முற்றுகையிட்டு, கொலைகார அதிபரை உடனடி பதவி விலகக் கோரி போராடினர். அதிபர் மாளிகையை மக்கள் முற்றுகையிட்டதால் பீதியடைந்த அதிபர் அடுத்த ஒரே வாரத்திற்குள் பதவி விலகி தனி விமானத்தில் அமெரிக்காவுக்குத் தப்பியோடினார்.




**அன்னிய எரிவாயு அகழ்வு நிறுவனங்களைக் கைப்பற்றி உற்பத்தியை முடக்கிய பொலிவிய மக்களின் ''இரண்டாவது எரிவாயு யுத்தம்.''**

வேறு வழியின்றி துணை அதிபரான கார்லோஸ் மேசா அதிபராகப் பொறுப்பேற்றார். மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றப் பாடுபடப் போவதாகச் சவடால் அடித்த இவர் நரித்தனத்தில் நரசிம்மராவின் உடன்பிறவா சகோதரர். எரிவாயு வளத்தை நாட்டுடமையாக்க முன்வராத அதிபர் மேசா, எரிவாயுவை ஏற்றுமதி செய்வதா, வேண்டாமா என்று நாட்டு மக்களிடம் கருத்து கணிப்பு தேர்தல் நடத்த உத்தரவிட்டார். எரிவாயு ஏற்றுமதி மூலம் கிடைக்கும் வருவாயைக் கொண்டு வறுமை ஒழிப்பு - சமூக நலத் திட்டங்களை நிறைவேற்றப் போவதாகப் பசப்பினார். கருத்துக் கணிப்பு தேர்தலில் வாக்களிக்காவிட்டால் சிறைத்தண்டனை விதிக்கப்படும் என்று எச்சரித்தார்.

இம்மோசடியை அம்பலப்படுத்திப் போராடாமல் ஓட்டுக் கட்சிகள் சந்தர்ப்பவாதமாக நடந்து கொண்டதால், ஜூலை 2004-இல் நடந்த கருத்துக் கணிப்புத் தேர்தலில் ஆகப் பெரும்பான்மையான மக்கள் எரிவாயு ஏற்றுமதியை ஆதரித்து வாக்களித்தனர். இருப்பினும், ஏற்றுமதி செய்யப்படும் எரிவாயு மீது எவ்வளவு வரி விதிப்பது, எவ்வளவு லாபம் கோருவது என்பதில் ஓட்டுக் கட்சிகளிடையே ஒத்த கருத்து இல்லாததாலும் எரிவாயு திட்டங்களில் முதலீடு செய்துள்ள பன்னாட்டு நிதி நிறுவனங்களின் நிர்பந்தத்தாலும் நாடாளுமன்றம் எந்த முடிவும் எடுக்காமல் இழுத்தடித்தது. இந்த இழுபறி நிலையைச் சாதகமாக்கிக் கொண்டு பன்னாட்டு எரிவாயுக் கம்பெனிகள் தமது கொள்ளையைத் தொடர்ந்தன.

எரிவாயு வளத்தை நாட்டுடமையாக்காமல் கண்ணாமூச்சி ஆடும் ஆட்சியாளர்களின் சூழ்ச்சிகளைப் புரிந்து கொண்ட பொலிவிய மக்கள் கடந்த மார்ச் மாதத்திலிருந்து போராட்டங்களில் இறங்கினர். எரிவாயு வயல்களை நாட்டுடமையாக்கக் கோரி பேரணிகள், ஆர்ப்பாட்டங்கள், சாலை மறியல்கள் என ''இரண்டாவது எரிவாயு யுத்தம்'' தொடங்கியது. விவசாயிகளும் தொழிலாளர்களும் நடுத்தர வர்க்கத்தினரும் ஒன்றிணைந்து சாலைகளில் தடுப்பரண்களை நிறுவி முற்றுகையிட்டதோடு, ஒருசில ஏகாதிபத்திய எரிவாயு கம்பெனிகளையும் கைப்பற்றி உற்பத்தியை முடக்கினர். இதனால், பொலிவியாவுக்குக் கடன் கொடுத்துள்ள ஏகாதிபத்திய நிதி நிறுவனங்கள், பொலிவியாவின் வர்த்தகத்தை முடக்கி தண்டிக்கப் போவதாக எச்சரித்ததோடு, உலக வர்த்தகக் கழகத்தில் வழக்குத் தொடரப் போவதாக அச்சுறுத்தின.

பீதியடைந்த அதிபர், ஏகாதிபத்திய நிறுவனங்களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது என்று ஒருபுறம் அறிவித்து விட்டு, மறுபுறம் மக்கள் போராட்டங்க

www.padippakam.com

ளைச் சாந்தப்படுத்த அன்னிய எரிவாயு நிறுவனங்கள் மீது சற்றே கூடுதலாக வரிவிதிக்கும் புதிய சட்டத்தை மே 17-ஆம் நாளன்று பிறப்பித்தார். ''நாங்கள் பல நூற்றாண்டுகளாகச் சூறையாடப்பட்டோம்; வஞ்சிக்கப்பட்டோம். மீண்டும் நாங்கள் சூறையாடப்பட அனுமதிக்க மாட்டோம். எரிவாயு வளத்தை நாட்டுடமையாக்காத எந்தச் சட்டத்தையும் நாங்கள் ஏற்க மாட்டோம்'' என்று இறுதி எச்சரிக்கை விடுத்த பொலிவிய மக்கள் இம்மோசடி சட்டத்தை எதிர்த்தும், துரோக அதிபரை பதவி விலகக் கோரியும் நாடாளுமன்றத்தை முற்றுகையிட்டனர். மே 20-ஆம் நாளன்று எல் அல்டோ நகரிலிருந்து தலைநகர் லாபாசை நோக்கி ஒரு லட்சம் பேர் பேரணியாகத் திரண்டு எரிவாயு வளத்தை நாட்டுடமையாக்கக் கோரி போராட்டத்தைத் தொடர்ந்தனர். தொழிலாளர்களும் அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் வேலை நிறுத்தத்தில் இறங்கினர். மே 24-ஆம் நாளன்று சுரங்கத் தொழிலாளர்களும் பழங்குடியின விவசாயிகளும் அணிதிரண்டு கொச்சபம்பா நகரிலிருந்து தலைநகர் லாபாஸ் வரை 190 கி.மீ. தூரத்துக்கு நீண்ட பேரணி நடத்தி தலைநகரை முற்றுகையிட்டனர். அதைத் தொடர்ந்து நாடு முழுவதும் சாலை மறியல்களும், அரசு அலுவலங்கள் முற்றுகையிடப்படுவதும் பற்றிப் படர்ந்தன.

மக்களின் பேரெழுச்சியைச் சாந்தப்படுத்த, புதியதொரு தேசிய அரசியல் நிர்ணய சபையை விரைவில் நிறுவப் போவதாகவும் அது வகுத்தளிக்கும் சட்டங்களின்படி இனி நாட்டை நிர்வகிக்கலாம் என்றும் அதிபர் மேசா பசப்பிப் பார்த்தார். எரிவாயு வளத்தை நாட்டுடமையாக்காமல் எந்த சமரசத்தையும் ஏற்க முடியாது என்று பொலிவிய மக்கள் தமது உறுதியான போராட்டங்களின் மூலம் பதிலடி கொடுத்தனர். மக்களின் போராட்டப் புயலை எதிர்கொள்ள முடியாமல் அதிபர் மேசா கடந்த ஜூன் 6-ஆம் நாளன்று பதவி விலகி ஹெலிகாப்டரில் தப்பியோடினார்.

புயலடித்து ஓய்ந்தது போல் மக்களின் ஆத்திரம் சற்றே தணிந்திருக்கிறது. உச்சநீதி மன்ற தலைமை நீதிபதி, இடைக்கால அதிபராகப் பொறுப்பேற்று விரைவில் தேர்தல் நடத்தப் போவதாக அறிவித்துள்ளார். அடுத்தது என்ன என்ற பீதி ஓட்டுக் கட்சிகளையும் ஏகாதிபத்தியவாதிகளையும் பிடித்தாட்டிக் கொண்டிருக்கிறது.

பொலிவியா மட்டுமல்ல, தென்னமெரிக்காவிலுள்ள ஈக்வடார் நாட்டின் அதிபரான லூசியோ கூடியர்ஸ், கடந்த ஏப்ரல் 20-ஆம் நாளன்று மக்களின் போராட்டங்களைக் கண்டு அஞ்சி பதவி விலகி ஓடியுள்ளார். அவரது மாளிகையை முற்றுகையிட்டு போராடிய பஞ்சைப் பராரிகள் தன்னை அடித்தே கொன்று விடுவார்கள் என்று பீதியில் உளறிய அவர், அம்மாளிகையின் மேல்தளத்தில் தயாராக இருந்த ஹெலிகாப்டரில் தப்பியோடியுள்ளார்.

ஈக்வடாரில் இப்படி நடப்பது முதன்முறையல்ல. இதற்கு முந்தைய இரு அதிபர்களும் இப்படித்தான் மக்கள் எழுச்சியைக் கண்டு அஞ்சி தப்பியோடியுள்ளனர். இதில் வேடிக்கை என்னவென்றால், இவர்கள் அனைவருமே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்தான். ஆனால், அவர்கள் பின்பற்றிய தனியார்மயம் - தாராளமயம் எனும் கேடுகெட்ட கொள்கையே மக்களைச் சீற்றங்கொள்ள செய்து அவர்களை விரட்டியடித்துள்ளது. இதேபோல, அர்ஜெண்டினாவின் அதிபரான டி லா ருவா, அவரது மாளிகையை முற்றுகையிட்ட மக்களின் பேரெழுச்சியைக் கண்டு அஞ்சி டிசம்பர் 2001-இல் பதவி விலகி ஹெலிகாப்டரில் தப்பியோடினார். இன்னும் பெரு, ஹெய்தி முதலான தென்னமெரிக்க நாடுகளிலும் அதிபர்கள் பதவி விலகி தப்பியோடியுள்ளனர்.

முன்பெல்லாம், இராணுவ ஆட்சிக் கவிழ்ப்பு எப்போது நடக்குமோ என்று அஞ்சிக் கொண்டிருந்த தென்னமெரிக்க நாடுகளின் அதிபர்கள், இப்போது மக்கள் பேரெழுச்சி எப்போது வெடிக்குமோ என்று அஞ்சி நடுங்குகிறார்கள். துப்பாக்கிகளையும் பீரங்கிகளையும் கண்டு அஞ்சிய மக்கள் விரோத ஆட்சியாளர்கள், இப்போது பஞ்சைப் பராரிகள் காலிப் பானைகளுடன் தெருக்களில் ஒலியெழுப்பிக் கொண்டு ஊர்வலமாக வருவதைக் கண்டு அஞ்சுகிறார்கள். தமது மாளிகையில் எப்போதும் தயாராக ஹெலிகாப்டரை வைத்துக் கொள்கிறார்கள்.



**பொலிவிய மக்களின் ''எரிவாயு யுத்தம்'': எரிவாயு வளத்தை நாட்டுடமையாக்கக் கோரி தலைநகர் லாபாசில் 2003-ஆம் ஆண்டில் நடந்த போராட்டம்.**

பொலிவியா மட்டுமின்றி, தென்னமெரிக்கக் கண்டம் முழுவதும் அமெரிக்க எதிர்ப்பும், ஏகாதிபத்திய எதிர்ப்பும் மக்கள் போராட்டங்களில் கனன்று கொண்டிருக்கிறது. அமெரிக்கக் கைக்கூலி ஆளும் வர்க்கம் பிளவுபட்டு தத்தளிக்கிறது. தொழிலாளர்களும் விவசாயிகளும் இளைஞர்களும் நடுத்தர வர்க்கத்தினரும் ஓரணியாகத் திரண்டு போராட்டக் களத்தில் நிற்கின்றனர்.

பொலிவியாவை மட்டுமல்ல; ஏகாதிபத்திய தளையிலிருந்து நாட்டை விடுவிக்கும் புரட்சிக்குக் குறைவான எத்தகையதொரு ஆட்சி மாற்றமும் தென்னமெரிக்க நாடுகளின் மக்களைச் சாந்தப்படுத்த முடியாது. பொலிவியாவும் தென்னமெரிக்க நாடுகளும் புரட்சிகர கம்யூனிஸ்டு கட்சியொன்றின் தலைமைக்காகக் காத்துக் கொண்டிருக்கின்றன.

●மனோகரன்


படிப்பகம்

www.padippakam.com

இராஜஸ்தான்:

# குடிக்கத் தண்ணீர் கேட்டால் ஒடுக்கி உயிரைப் பறிக்கிறார்கள்

## பா.ஜ.க. அரசின் கொலை வெறியாட்டம்

தவிச்ச வாய்க்கு தண்ணீர் கேட்டுப் போராடிய விவசாயிகள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தி, ஒரு கர்ப்பிணிப் பெண் உள்ளிட்டு 5 பேரைக் கொன்று வெறியாட்டம் போட்டுள்ளது, பா.ஜ.க.வின் இராஜஸ்தான் மாநில அரசு. பா.ஜ.க.வின் 18 மாத கால ஆட்சியில், இது இரண்டாவது முறையாக விவசாயிகள் மீது நடத்தப்பட்டுள்ள துப்பாக்கிச் சூடு. ஏற்கெனவே, கடந்த ஆண்டு அக்டோபரில் இதேபோல தண்ணீருக்காகப் போராடிய விவசாயிகள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தி, 5 பேரைக் கொன்றொழித்தது, கொலைகார பா.ஜ.க. அரசு.

இராஜஸ்தானின் பில்வாரா, டோங்க், சிறீகங்கா நகர் முதலான மாவட்டங்கள் புளோரைடு பாதிக்கப்பட்ட பகுதிகளாகும். இதனால் நிலத்தடி நீரை மனிதர்கள் மட்டுமல்ல; ஆடு-மாடுகள் கூடக் குடிக்க முடியாது. வறண்டு கிடக்கும் இப்பகுதிகளில் புளோரைடு நஞ்சேறிய நிலத்தடி நீர்கூடக் கிடைப்பது அரிது. இந்திரா காந்தி கால்வாய் திட்டம் மூலம் பிலாஸ்பூர் அணையிலிருந்து பனார் கால்வாய் வழியே கிடைக்கும் நீரைத்தான் இப்பகுதிவாழ் மக்கள் குடிநீருக்கும் விவசாயத்துக்கும் நம்பியுள்ளனர். ஆனால், அணையில் போதிய அளவுக்குத் தண்ணீர் இல்லையென்று பனார் கால்வாய்க்குப் பல ஆண்டுகளாகத் தண்ணீர் திறந்து விடப்படவில்லை.



துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த விவசாயியை நாயைப் போலத் 'தூக்கி'ச் செல்லும் போலீசாரின் வக்கிரம்.

விவசாயம் செய்ய முடியாமல் போனதோடு, குடிக்கக்கூடத் தண்ணீரில்லாமல் பரிதவிக்கும் டோங்க் மாவட்ட விவசாயிகள், ஆட்சியாளர்களிடம் பலமுறை மனு கொடுத்து மன்றாடினர். ஆனாலும், பல ஆண்டுகளாக அவர்களுக்குச் சொட்டுத் தண்ணீர் கூடக் கிடைக்கவில்லை. குமுறிக் கொண்டிருந்த விவசாயிகள், ஜெய்ப்பூர் - டோங்க் நெடுஞ்சாலையில், சோகெலா எனும் சந்தை நகரில் கடந்த ஜூன் 19-ஆம் நாளன்று சாலை மறியல் போராட்டத்தில் இறங்கினர். போராடிய விவசாயிகள் மீது காட்டுமிராண்டித்தனமான தாக்குதல் நடத்திய போலீசு, துப்பாக்கிச் சூடு நடத்தி 5 பேரைக் கொன்று, 20 பேரைப் படுகாயப்படுத்தி வெறியாட்டம் போட்டுள்ளது.

பில்வாரா, டோங்க், சிறீகங்கா நகர் மாவட்ட விவசாயிகளுக்கு விவசாயத்துக்கும் குடிநீருக்கும் பிலாஸ்பூர் அணையிலிருந்து தண்ணீர் தருவதாக வாக்களித்து ஓட்டுப் பொறுக்கிய இந்துவெறியர்கள், பதவியைப் பிடித்ததும் தமது வாக்குறுதியைப் பார்ப்பன தர்மப்படி கைகழுவி விட்டனர். ஏற்கெனவே கடந்த அக்டோபரில் சிறீகங்காநகர் மாவட்ட விவசாயிகள் குடிநீர் கேட்டுப் போராடிய போது போலீசை ஏவி துப்பாக்கிச் சூடு நடத்தி வெறியாட்டம் போட்டனர். விவசாயிகளின் உயிர் குடிக்கும் இரத்தக் காட்டேரியான முதல்வர் வசுந்தரா ராஜி சிந்தியாவைத்தான், இந்துவெறி பாசிசப் பரிவாரங்கள் ராஜமாதா என்றும், இராஜஸ்தானின் ராஜவம்சத்து பெண்சிங்கம் என்றும் வெட்கமின்றித் துதிபாடுகின்றன.

பிலாஸ்பூர் அணை மூலம் கடந்த இருபதாண்டுகளாகப் பாசன நீரும் குடிநீரும் பெற்று வந்த இம்மக்கள், கடந்த ஐந்தாண்டுகளாக நீரின்றிப் பரிதவிக்கிறார்கள். பிலாஸ்பூர் அணையிலிருந்தும் ஆற்றுப் படுகை பகுதிகளிலிருந்தும் ஆழ்குழாய்கள் மூலம் வரைமுறையின்றி நிலத்தடிநீர் உறிஞ்சப்படுவதால், அணையில் நீர்மட்டம் குறைந்துவிட்டது; மேலும், ஆழ்குழாய் மூலம் உறிஞ்சப்படும் தண்ணீர் ஜெய்ப்பூர், அஜ்மீர் முதலான பெரு நகரங்களுக்கே பெரிதும் கொண்டு செல்லப்படுகிறது. அங்கும் கூட வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளுக்கான ஐந்து நட்சத்திர விடுதிகள், நீச்சல் குளம், வாட்டர் போலோ எனும் நீர்ப்பந்து விளையாட்டுக் குளம் போன்றவற்றுக்கே பெரிதும் செலவிடப்படுகின்றன. ஆனால், விவசாயிகளோ குடிக்கக் கூடத் தண்ணீர் இல்லாமல் தத்தளிக்கிறார்கள். சுற்றுலாத்துறை மூலம் அன்னியச் செலாவணியை ஈட்டுவதற்காக எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் விவசாயிகளையே வதைக்கின்றன.

டோங்க் மாவட்டத்தில் போராடிய விவசாயிகள் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட செய்தியறிந்து காங்கிரசு தலைவி சோனியா ஓடோடி வந்து, கொல்லப்பட்டோர் குடும்பத்தாருக்கு நிவாரணத் தொகையளித்து முதலைக் கண்ணீர் வடித்துள்ளார். இதற்கு முன்பு காங்கிரசு ஆட்சியின்போது, இதே போல விவசாயிகள் தண்ணீருக்காகப் போராடிய போது மிருகத்தனமாக ஒடுக்கப்பட்டனர். அப்போது இந்துவெறியர்கள் ஓடோடி வந்து ஒப்பாரி வைத்தனர். இப்போது பா.ஜ.க. ஆட்சிக்கு வந்துவிட்டது. எனவே, சுழற்சி முறையில் எதிர்க்கட்சியான காங்கிரசின் தலைவியும் விவசாயிகளுக்காக ஒப்பாரி வைக்கிறார்.

இராஜஸ்தான் விவசாயிகளோ குடிக்கக் கூட தண்ணீரின்றித் தத்தளிக்கிறார்கள். அவர்களது விவசாயமும் எதிர்கால வாழ்வும் கேள்விக்குறியாகி விட்டது. தாங்கள் குளித்த ஒரு குடம் தண்ணீரை நாணல் கயிற்று வலையில் வடிகட்டி அக்கழிவுநீரை மறுசுழற்சி செய்து, மீண்டும் குளிக்கவும் துணி துவைக்கவும் பயன்படுத்துகிறார்கள். தண்ணீரின்றித் தத்தளிக்கும் ராஜஸ்தான் மக்களுக்காக நீர்ப்பாசன வசதிக்கான பட்ஜெட் ஒதுக்கீட்டை அதிகரிக்க முன்வராத ஓட்டுக் கட்சி அரசுகள், போலீசுத்துறையை விரிவுபடுத்தி நவீனப்படுத்த ஆண்டுதோறும் கோடிகோடியாய் வாரியிறைக்கின்றன.

ஓட்டுக் கட்சிகளின் துரோகத்தை ராஜஸ்தான் விவசாயிகள் இனியும் நம்பி ஏமாறத் தயாராக இல்லை. ஓட்டுக் கட்சிகளைப் புறக்கணித்துவிட்டு, தன்னெழுச்சியாகத் திரண்டு தண்ணீருக்காகப் போராடத் தொடங்கி விட்டார்கள். அவர்களின் நியாயமான போராட்டத்தை ஆதரித்து முன்னெடுத்துச் செல்ல வேண்டியது நாடெங்குமுள்ள விவசாயிகளின் கடமை; நம் கடமை.

● சூரியன்



படிப்பகம்

## டால்மியா சிமெண்ட் ஆலையில் தொழிலாளர்கள் பலி

# விபத்தாகத் திரிக்கப்பட்ட படுகொலைகள்

திருச்சி அருகே அமைந்துள்ள தரகு முதலாளித்துவ நிறுவனமான டால்மியாபுரம் சிமெண்ட் ஆலையில் 16 ஒப்பந்த தொழிலாளர்கள் பணியின் போது பலியானார்கள். மேலும், அதே இடத்தில் 18 கூலித் தொழிலாளர்கள் படுகாயம் அடைந்தனர். 28.5.05 அன்று மதியம் 12.50 மணிக்கு இக்குரூரம் கண்ணிமைக்கும் நேரத்தில் நடந்து முடிந்தது.

சுமார் 100 ஏக்கர் பரப்பளவில் பரந்து விரிந்து இருக்கும் டால்மியாபுரம் சிமெண்ட் ஆலையில், 10 ஏக்கர் பரப்பளவில் புதிதாக ஒரு 'பிளாண்ட்' சட்ட விரோதமான முறையில் அவசர அவசரமாக உருவாக்கப்பட்டது. அதில், 500 மீட்டர் உயரமுள்ள கலனுக்கு கச்சாப் பொருட்களை கொண்டு செல்லும் அரை கி.மீ. நீளமும் 120 அடி உயரமும் கொண்ட கான்கிரீட் சாய்வுப் பாலம் இரண்டாகப் பிளந்தது. அப்போது, அப்பாலத்தின் மேல் கைப்பிடிச் சுவர் கட்டிக் கொண்டிருந்த தொழிலாளர்கள் பாலத்தோடு கீழே விழுந்து நசுங்கி பலியானார்கள். நிழலுக்காக அப்பாலத்தின் அடியில் அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்த தொழிலாளர்களும் உடல் நசுங்கி அதே இடத்தில் இறந்தார்கள்.

ஆலை விரிவாக்கம் முறைகேடாக, அரசின் அனுமதியின்றி நடந்து வந்ததால், 'கான்கிரீட்' இறுகுவதற்குக் கூட பொறுத்திராமல், அவசரமாக அதன் மேலேயே கைப்பிடிச் சுவர் எழுப்பியதால், பாரம் தாங்காமல் சாரம் சரிந்து பாலம் இரண்டாகப் பிளந்தது. தொழிலாளர்கள் குரூரமாகப் பலியானார்கள்.

கடந்த 10 ஆண்டுகளில் ஆலையினுள் நடந்த பல பயங்கர படுகொலைகளை மூடி மறைத்த டால்மியா நிர்வாகம், இந்தப் படுகொலைகளையும் மூடி மறைக்கவே எத்தணித்தது.

ஆனால், இக்கோர படுகொலை சம்பவத்தின் போது அங்கு வேலை பார்த்த புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி என்ற புரட்சிகர அமைப்பின் தஞ்சை பகுதி தோழர் துரைராஜ் பத்திரிகைகளுக்கு உடனே தகவல் கொடுத்தார். அதன் பிறகும் தொலைபேசியில் விசாரித்தவர்களிடம் ''அப்படி எதுவும் நடக்கவில்லை'' என்று புளுகியது, ஆலை நிர்வாகம். மீண்டும் மீண்டும் பலமுனைகளிலிருந்தும் பத்திரிகைகளுக்குப் பலர் தொடர்பு கொண்டனர். அதன் பிறகு தான் ஒவ்வொரு பத்திரிகையாளராக ஆலைக்கு வந்தனர். அதன்பிறகுதான் செய்தியின் முழு பரிமாணமும் வெளி உலகுக்குத் தெரிய வந்தது.

இக்கோரக் கொலையைக் கண்ட சக தொழிலாளர்கள் கொதிப்படைந்து, கட்டுமான ஒப்பந்த நிறுவனமான 'பி அண்ட் சி' நிர்வாகத்தின் இயந்திரங்களை அடித்து நொறுக்கினார்கள். உடனே ஆலையின் 'பாதுகாப்பு'க்கென டால்மியா நிர்வாகம் ரிசர்வ் போலீசை வரவழைத்தது. ஆலைக்குள் இருந்த தொழிலாளர்கள் அனைவரையும் வெளியேற்றியது.

அப்படியும் கலைய மறுத்த தொழிலாளர்கள் ஆத்திரம் அடைந்து கைக்கு கிடைத்த கற்களை எடுத்து ஆலை வாயிலில் வீசினர். ஆலையின் பின்வாயிலை உதைத்து திறந்து உள்ளே சென்று கொலையுண்ட, படுகாயம் அடைந்த சக தொழிலாளிகளை மீட்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

இக்கோரச் சம்பவத்தைக் கேள்விப்பட்டு பாதிக்கப்பட்ட தொழிலாளிகளின் குடும்பத்தினர் கண்ணீர் மல்க, தங்கள் குழந்தைகளுடன் ஆலையினுள் குவிந்தனர். 'யார் யார் இறந்தனர்? காயம் அடைந்தவர்கள் எங்கேயிருக்கிறார்கள்?' என்று அவர்கள் பரிதவித்த போது, விபரங்களைக் கூடச் சொல்ல மறுத்தது, ஆலை நிர்வாகம்.

தரகு முதலாளித்துவ நிறுவனமான டால்மியா சிமெண்ட் ஆலையின் நிர்வாக இயக்குநர் கேஸ்பர் பெனிலானி என்ற கொலைக் குற்றவாளி, தொழிலாளிகளின் பிணங்களுக்கு நடுவே பத்திரிகைகளுக்கு திமிரோடு பேட்டி கொடுத்தார். ''இது ஒரு விபத்து, இதற்காக யாரையும் குறை சொல்ல முடியாது. வேலைகளை கான்ட்ராக்ட் விட்டுள்ளோம். விபத்துக்கும் நிர்வாகத்துக்கும் எந்தத் தொடர்புமில்லை. இருந்தாலும் உயிரிழந்தோருக்கு ஒரு லட்சமும், காயம் அடைந்தோருக்கு ஐம்பதாயிரமும் நிர்வாகத்தின் சார்பாக வழங்கப் போகிறோம்'' என்றார்.

''சட்டவிரோதமான'' முறையில் ஆலை விரிவாக்கம், ''விதிகளுக்கு புறம்பான'' முறையில் கட்டுமானப் பணி, 16 தொழிலாளர்கள் ஆலையினுள் பணியின் போது படுகொலை, 18 தொழிலாளர்கள் படுகாயத்தால் நிரந்தர ஊனம்; இவ்வளவு கிரிமினல் குற்றங்களுக்குப் பிறகும் எவ்வளவு தடித்தனமான திமிர் பேட்டி! இவன், தொழில் ரீதியிலான கிரிமினலா? இல்லை, நிர்வாக இயக்குநரா?

எதிர்பாராமல் நடக்கும் சாலை விபத்தில் கூட யாராவது காயமடைந்து விட்டால் வண்டி ஓட்டுநர், அடிக்கு பயந்து இறங்கி ஓடுகிறாரே!

**டால்மியா சிமெண்ட் ஆலையில் சட்ட விரோதமாகக் கட்டப்பட்டு வந்த ''பிளாண்ட்''இன் சாய்வுப் பாலம் இடிந்து விழுந்ததால் பலியான தொழிலாளர்கள்: மலிவாகிப் போனதோ மனித உயிர்கள்?**



இவன் மட்டும் எப்படி இத்தனை தொழிலாளர்களைக் கொன்று விட்டு, அந்தப் பிணங்களுக்கு மத்தியில் பேட்டி கொடுக்கிறான்? யார் கொடுத்த தைரியம் இது?

•••

**த**ன்னுடைய இலாப வெறிக்காக, டால்மியா சிமெண்ட் ஆலை நிறுவனம் தொடர்ந்து அரங்கேற்றி வரும் சட்டமீறல்கள், கிரிமினல் குற்றங்களைவிடக் குரூரமானவை.

★ டால்மியா சிமெண்ட் ஆலைக்குத் தேவையான நீரை, காவிரி - கொள்ளிடத்திலிருந்து கடந்த 10 ஆண்டுகளாக எடுத்த வகையில் அரசுக்குச் செலுத்த வேண்டிய கட்டணம் - 1000 கன அடிநீருக்கு 300 ரூபாய் என்ற விகிதத்தில் பாக்கி 57,43,812 ரூபாய். தற்போது புதிய 'பிளாண்ட்'டுக்கு நாளொன்றுக்கு 3,200 கன மீட்டர் நீர் தேவை. இதற்கான அரசு அனுமதி வாங்கவில்லை.

★ புதிய 'யூனிட்டு'க்குத் தேவைப் படும் கச்சாப் பொருளான சுண்ணாம்புக் கல் வெட்டியெடுப்பதற்கான ஒப்பந்தத்தை அரசிடமிருந்து முறையாகப் பெறவில்லை.

★ மின் உற்பத்தி திறனுடன் கூடிய புதிய யூனிட்டின் கட்டுமானப் பணிக்கு, மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் ஒப்புதலை வேலை முடிந்த பிறகுதான் முறைகேடாக வாங்கியது. இந்த கட்டுமானப் பணிக்குத் தேவையான மின் விநியோகம், தண்ணீர் விநியோகம் உரிமைகளைச் சட்ட விரோதமாக உரிமம் இல்லாமல் அனுபவித்தது.

★ அனைத்திற்கும் மேலாக, ஒப்பந்த முறையில் தினக்கூலிக்கு தொழிலாளர்களை அமர்த்தி, உயிருக்கு ஆபத்தான வேலைகளை அவர்களுக்கு ஒதுக்கியது, நிரந்தர தொழிலாளர்களுக்குத் தரவேண்டிய சட்டப்பூர்வ சலுகைகள், பணி பாதுகாப்பு சாதனங்கள், விபத்துக் காலங்களில் அவசர மருத்துவ உதவி, நட்ட ஈடு மற்றும் ஊதியத்துடன் கூடிய விடுமுறை போன்ற உரிமைகள் ஏதுமின்றி, ஒப்பந்த கூலித் தொழிலாளர்களின் கடைசி சொட்டு இரத்தத்தையும் உறிஞ்சியது, டால்மியா நிர்வாகம். பணியின் போது இறந்த, படுகாயமடைந்த ஒப்பந்த தொழிலாளர்களை ஆலையின் கழிவுகளோடு கழிவுகளாக வெளியேற்றியது, சிமெண்ட் ஆலை நிர்வாகம்.

★ 'எல் அண்ட் டி', 'பி அண்ட் சி', மற்றும் சத்தியபாமா போன்ற தனியார் ஒப்பந்த நிறுவனங்கள் தொழிலாளர்களை 'காண்ட்ராக்ட்' முறையில் கசக்கி பிழியும் வேலையைச் செய்கின்றன. பல தொழிலாளர்கள் பணியின் போதே பிணமாக்கப்பட்டு 'விபத்தில் இறந்தவர்கள்' என்று புதைக்கப்பட்டு விட்டனர். பீகார் மாநிலம் அவுரங்காபாத்தை சேர்ந்த தொழிலாளி தஷ்ரத், திருச்சி - துறையூரைச் சேர்ந்த நல்லுசாமி, திருச்சி கே.எம்.சி. மருத்துவமனையில் இன்று வரை சுயநினைவு அற்ற நிலையில் இருக்கும் பாலசுப்பிரமணி (அடையாள அட்டை எண்: 12472), மற்றும் இதே மருத்துவமனையில் கருகிய நிலையில் கரிக்கட்டைகளாகச் சேர்க்கப்பட்ட 'பவர் பிளாண்ட்' தொழிலாளர்கள் இருவர் என்று டால்மியா ஆலையின் கொடுங்கரம் முடிவேயில்லாமல் நீளுகிறது. ஆலையைச் சுற்றியுள்ள தேநீர் கடைகளில் தொழிலாளர்கள் வைத்து விட்டு போன அழுக்கடைந்த மாற்று சட்டைகளும், சாப்பாட்டு தூக்குகளும் இன்றுவரை அப்படியே அங்கு உள்ளன. ஆலைக்கு வந்த அத்தொழிலாளர்கள் என்ன ஆனார்கள் என்று யாருக்கும் தெரியாது!

ஓட்டுச்சீட்டு அரசியல் கட்சிகளின் தொழிற்சங்கங்கள், ஆலை நிர்வாகத்தின் பகற் கொள்ளை மற்றும் கிரிமினல் குற்றங்களுக்கு எதிராக அலட்டிக் கொள்வதே இல்லை. மாறாக, ஆலை நிர்வாகத்தின் அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சங்கமாக இயங்கி, அனைத்து வசதிகளையும் அனுபவிக்கின்றனர்.

தினக்கூலியாக ரூ. 90 கொடுத்தால் போதும்; சாவதற்கும் தொழிலாளர்கள் வரிசையில் நிற்கிறார்கள். என்ன கொடுமை இது! புதிய பொருளாதாரக் கொள்கை, ஏழை விவசாயிகளுக்கு, கூலித் தொழிலாளர்களுக்கு வழங்கியிருக்கும் உயர்ந்த பட்ச வாழ்க்கைத்தரம் இதுதான்! தனியார்மயம் - தாராளமயம் - உலகமயம் என்ற புதிய பொருளாதாரக் கொள்கையின் குரூரம் இதுதான்!

**• பு.ஜ. செய்தியாளர்கள், திருச்சி**



**திருச்சி அரசு மருத்துவமனையில் சுயநினைவின்றி உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் டால்மியா ஆலை தொழிலாளி பாலசுப்பிரமணி.**

**பீகார் மாநிலம் அவுரங்காபாத்தில் இருந்து பிடித்து வரப்பட்டு, டால்மியா ஆலையில் கொத்தடிமைகளைப் போல வேலை வாங்கப்படும் தொழிலாளர்கள்.**



www.padippakam.com

# மக்கள் கண்காணிப்பகம்: அமெரிக்க சாத்தானின் கள்ளக் குழந்தை

மதுரையில் இயங்கிவரும் ''மக்கள் கண்காணிப்பகம்'' என்ற தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் தலைமையில், விடுதலைச் சிறுத்தைகள், தமிழக முசுலீம் முன்னேற்றக் கழகம், பெரியார் திராவிடர் கழகம், தமிழ் தமிழர் இயக்கம், சி.பி.ஐ., சி.பி.எம். மற்றும் தலித் மக்களுக்காகப் பாடுபடுவதாகக் கூறப்படுகின்ற தன்னார்வக் குழுக்கள் ஆகியவை இணைந்து, ''சித்திரவதைக்கு எதிரான பிரச்சாரம், தமிழ்நாடு'' என்ற ஒரு கூட்டமைப்பை கடந்த நான்கு ஆண்டுகளாக தமிழகத்தில் நடத்தி வருகின்றன.

தமிழகத்தில் நடந்து வரும் கொட்டடிப் படுகொலைகள்; போலி மோதல் சாவுகள்; பெண்கள், குழந்தைகள் மீதான வன்முறை; சாதிவெறித் தாக்குதல் உள்ளிட்ட சித்திரவதையின் கோர முகத்தை இந்தக் கூட்டமைப்பு எதிர்க்கின்றது.

ஜூன் 26 என்பது சித்திரவதையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஐ.நா.வின் ஆதரவு நாள். இதை ஒவ்வொரு ஆண்டும் இந்தக் கூட்டமைப்பு பல வடிவங்களில் மக்களிடம் எடுத்துச் செல்கிறது. ஜூன் 26-ஐ ஒட்டி தமிழகம் முழுவதும் பல்வேறு கலைக்குழுக்களை வைத்து கலைப்பயணங்களை நடத்துகின்றது.

இந்தப் பயணத்தில் காவல் துறையை எதிர்த்து கலைக்குழுவினர் வீதி நாடகம் நிகழ்த்தும் போது, பொது மக்களுக்கே ஒரு ஆச்சரியம் வருகின்றது. பல இடங்களில் பிரச்சாரத்தின் போது, போலீசு நடத்தக் கூடாது என்பதும் அதை எதிர்த்து அதே இடத்தில் பொதுமக்கள் மத்தியில் விவாதத்தில் ஈடுபடுவதும் பார்ப்பவர்களைப் பரவசப்படுத்துகின்றது. இவையெல்லாம் வெறும் கண்கட்டி வித்தை. இது பற்றி பிறகு பார்ப்போம்.

### நிதி மற்றும் செயல்பாடு

இவர்கள் இப்படி எல்லாம் செய்ய, திட்டங்களைத் தயாரித்துக் கொடுப்பதோடு, அதற்குத் தேவையான நிதியையும் தருவது அமெரிக்க நிறுவனமான ஃபோர்டு பவுண்டேசன் உள்ளிட்ட பல்வேறு ஏகாதிபத்திய நாடுகளையும் சேர்ந்த பன்னாட்டு நிறுவனங்கள்தான். ஆனால், சித்திரவதைக்கு எதிரான பிரச்சார கூட்டமைப்பின் கூட்டங்களில், இதை வழி நடத்துகின்ற மக்கள் கண்காணிப்பகம், ''நாம் இணைந்து பணியாற்ற வேண்டும். இந்தப் பிரச்சாரத்திற்கு ஆகும் செலவுகளை அரசியல் கட்சிகளே பொறுப்பேற்க வேண்டும்'' எனக் கூறி, நிதியின் தேவையை அரசியல் அமைப்புகளிடம் கேட்பார்கள். ஆனால், எந்த அரசியல் கட்சியும் குறித்த நேரத்தில் நிதி கொடுக்க மாட்டார்கள். எனினும், நிகழ்ச்சி ஏற்பாடுகள் படுவேகமாக நடந்து முடியும். இதற்கான வரவு - செலவு என்ன என்பதை யாரும் கேட்டு விட முடியாது.

தமிழகத்தில் இருக்கின்ற பல்வேறு செயல்படாத தொண்டு நிறுவனங்களை விலைக்கு வாங்கியும் இந்த நிறுவனம் செயல்பட்டு வருகின்றது. கடந்த ஆண்டு செங்கல்பட்டில் இயங்கி வருகின்ற எல்.ஆர்.எஸ்.ஏ. (LRSA) என்ற நிறுவனம் ''மக்கள் கண்காணிப்பகத்தின்'' கட்டுப்பாட்டின் கீழ் வந்தது. இதுமட்டுமல்லாமல், மனித உரிமைகள் குறித்து செயல்பட்டு வரும் சிறு நிறுவனங்களுக்கும் இந்த அமைப்பு தான் தாய் அமைப்பு. மாநிலத்தில் எந்த இடத்தில் போலி மோதல் சாவு, கொட்டடிக் கொலை, சாதிமோதல் சாவு, பாலியல் வன்முறை நடந்தாலும், இவர்களின் களப் பணியாளர்கள் அங்கு போய் நிற்பார்கள். பாதிக்கப்பட்டவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்வார்கள்.

மனித உரிமை அமைப்பு என்பதால் மக்களும் நம்பிக்கையுடன் இவர்களை நாடிச் செல்கிறார்கள். இப்படிப்பட்ட வழக்குகளுக்கான முழு செலவையும் இவர்களே செய்கிறார்கள். பாதிக்கப்பட்டவர்களுக்கு இவர்கள் யார் என்பதை தெளிவுபடுத்த மாட்டார்கள். அதேபோல இவர்கள் எங்கெல்லாம் கூப்பிடுகிறார்களோ அங்கெல்லாம் பாதிக்கப்பட்ட மக்கள் சென்று, தங்களுக்கு நேர்ந்த கொடுமைகளைச் சொல்லவேண்டும். குறிப்பாக, பாதிக்கப்பட்டோரின் சோகத்தை காட்டி, கதறக் கதற அழ வைத்து நிதியைப் பெறுவார்கள்.

இந்த நிறுவனத்தை நம்பி நூற்றுக்கணக்கான பாதிக்கப்பட்ட மக்கள் இருக்கிறார்கள். குறிப்பாக, வீரப்பனைப் பிடிப்பதற்காகச் சென்ற அதிரடிப்படை மலைவாழ் மக்கள் மீது ஏவிவிட்ட மனித உரிமை மீறல்களைச் சொல்லி மாள முடியாது. இவர்களுக்கு தேவையான சட்ட உதவிகளை ''மக்கள் கண்காணிப்பகம்'' தான் செய்தது. மேட்டூர் பகுதியில் ஒரு அரசியல் கட்சிக்கு நிகராக ''மக்கள் கண்காணிப்பகம்'' செயல்படுகின்றது. அந்த மக்களைத் திரட்டி போராட்டம், தர்ணா என நடத்தி வருகிறது.

அதேசமயம், ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனம் என்ற வகையில், காவல்துறை அதிகாரிகளோடு சுமுகமான உறவையும், தனிப்பட்ட நெருக்கத்தையும் வளர்த்துக் கொள்வார்கள். அதாவது, பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன் என்பதுதான் ''மக்கள் கண்காணிப்பகத்தின்' அரசியல் தந்திரம்.

இந்த நிறுவனம் இப்படியொரு பக்கம் அரசை எதிர்ப்பதாக மாயை காட்டிவிட்டு, மறுபுறம் மைய அரசின் துணையோடு அரசு ஆதிதிராவிடர் பள்ளிகளில் மனித உரிமைக் கல்வியைக் கொடுத்து வருகிறது. இதற்குப் பெயர் ''மனித உரிமைக் கல்வி நிறுவனம்.''

பெண்களின் குடும்ப பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ''சுதந்திரா'' என்ற பெண்கள் அமைப்பு இந்த நிறுவனத்தின் அங்கமாக உள்ளது. குடும்ப பிரச்சினை, பாலியல் வன்முறை போன்ற பிரச்சினைகளில் சிக்கித் தவிக்கும் பெண்களுக்கு ஆலோசனை வழங்குகிறார்கள். மக்கள் கண்காணிப்பகத்தின் இயக்குநர் ஹென்றி டிபேனின் மனைவி சிந்தியா டிபேன் தான் ''சுதந்திரா''வின் இயக்குநர். இவரது மாதச் சம்பளம் ரூ. 15,000. ஹென்றி டிபேனின் சம்பளம் ரூ. 30,000. சமூகப் பணிக்கு படித்த முதுகலைப் பட்டதாரிகள் இந்நிறுவனத்தில் அதிகம் உண்டு. சமூகப் பணிகள் செய்வதாகக் கூறிக் கொண்டு குறித்த நேரத்தில் மட்டும்



படிப்பகம்

www.padippakam.com

வேலை பார்ப்பவர்கள் இங்கு அதிகம். சட்டக்கல்லூரி மாண வர்கள், முற்போக்காகப் பேசும் இளைஞர்களை இந்த அமைப்பிற்கு கொண்டு வந்து, அவர்களை வைத்து என்ன செய்ய முடியும் எனப் புதுப்புது திட்டங்களைப் போட்டு ஏகாதிபத்திய நிறுவ னங்களிடம் அதைக் காட்டி, நிதி வாங்குவார்கள். இப்படி புதிதாகத் தோன்றியதுதான் ''மனித உரிமைக்கான குடிமக் கள் இயக்கம்.''



ஏகாதிபத்திய எச்சில் காசில் 'உரிமை' முழக்கம்: சித்திரவதைக்கு எதிரான பிரச்சார கலைப் பயணக் குழுவினர் நடத்திய தெருமுனை நாடகம். (கோப்புப் படம்)

**பெயரை வாடகைக்கு விட்ட த.மு.எ.ச:**

சித்திரவதைக்கு எதிராக தமிழகம் முழுவதிலும் பத்து கலைக் குழுக்கள், ஃபோர்டு பவுண்டேஷன் உதவியோடு பல லட்சம் ரூபாய் செலவில், பல்வேறு தன்னார்வக் குழுக்களின் கலைஞர்களோடு பயணம் நடத்தி வரு கிறது. ஜூன் 26 அன்று தொடங்கிய இப்பயணம் ஜூலை 9-ஆம் தேதி மது ரையில் நிறைவடைய இருக்கின்றது. (இதில் நாமக்கல் சி.பி.ஐ-யின் குழு, சமர்ப்பா கலைக்குழு, சி.பி.எம்; இளை ஞர் பெரு மன்றம் போன்ற அமைப்புக ளின் முழு நேரப் பணியாளர்கள் இடம் பெற்றுள்ளனர்.) நிறைவு விழா மிகப் பிரம்மாண்ட முறையில் ஏற்பாடு செய் யப்பட்டு வருகின்றது. அந்த நிறைவு விழாவிற்கு, சித்திரவதைக்கு எதிரான ''கலை இரவு'' எனப் பெயரிடப்பட் டுள்ளது. இந்தக் கலைவிழாவை தமிழக முற்போக்கு எழுத்தாளர் சங்கத் தின் மாநில தலைவர்களுள் ஒருவரான பாரதி கிருஷ்ணகுமார் வடிவமைத் துள்ளார். இதற்காகத் திட்டமிடும் கூட் டம் மட்டும் பத்துமுறை நடந்து முடிந் துள்ளது. ஒவ்வொரு முறையும் இதற் காகவே அவர் சென்னையிலிருந்து வந்து சென்றுள்ளார். இதற்காக அவ ருக்கு கொடுக்கப்பட்ட கூலி, அவரு டைய ''இராமய்யாவின் குடிசை'' என்ற குறும்படத்திற்காக 10,000 விளம்பரத் துண்டு பிரசுரங்கள் அடித் துக் கொடுக்கப்பட்டுள்ளது.

தங்களது கலை இரவின் மூலம் தமிழ்நாடு முழுவதும் மக்களை விழிப் படையச் செய்திருப்பதாக, தமிழகத் தையே விடிய வைப்பதாக பீற்றிக் கொள்ளும் த.மு.எ.ச. பயன்படுத்து கின்ற முக்கிய நிகழ்வே இக் ''கலை இரவு'' என்ற வார்த்தை தான். அதே ''கலை இரவு'' என்ற வார்த்தையை கிருஷ்ணகுமார் இந்த தன்னார்வ அமெ ரிக்க கைக்கூலி நிறுவனத்திற்குத் தாரை வார்த்துக் கொடுத்துள்ளார்.

சி.பி.எம். அணியினர் தன்னார்வ குழுக்களோடு கொஞ்சிக் குலாவுவது தெரிந்த விசயமாக இருந்தாலும், குறிப் பாக ஒரு விசயத்தை தெரிந்து கொள்ள வேண்டியுள்ளது. கலை இரவிற் கென்றே ஒரு பார்வையாளர் கூட்டம் தனியாக உள்ளது என்று நம்பப்படு கின்றது. நடுத்தர வர்க்கத்தினர் கலை இரவிற்கு வருவது மதுரை போன்ற நகரங்களில் இயல்பாக உள்ளது. இதில் தான் சூழ்ச்சியை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

கம்யூனிச அமைப்புகளைப் போல் தன்னைக் காட்டிக் கொண்டு, அதில் வரக்கூடிய இளைஞர்களையும், முற் போக்கு சிந்தனையாளர்களையும், தன் பக்கம் இழுப்பதற்கும், அவர்களது போராட்ட உணர்வை மழுங்கடிப்பதற் குமான முயற்சிதான் இது. மதுரையில் நடக்கும் இந்த விழாவிற்காக மதுரை முழுவதும் சி.பி.எம். கட்சி, தான் பிடித்து வைத்திருந்த சுவர்களை இந்த ''கலை இரவு'' விளம்பரத்திற்காக வாட கைக்கு விட்டுள்ளது. இதற்காகவே முழுப்பொறுப்பேற்று கலைவிழா வேலைகளைச் செய்து வருகிறார் சி.பி.எம். கட்சியின் அரசு ஊழியர் சங் கத்தைச் சேர்ந்த சண்முகவேல் என்பவர். அதேபோல கலைஇரவு நடத்தப் படுகின்ற இடம் ஒவ்வொரு ஆண்டும் கிறித்துவ தன்னார்வக் குழுக்களால் நடத்தப்படுகின்ற தலித் கலைவிழா நடக்கும் இடமாகும்.

**ஏமாந்து வரும் முசுலீம் அமைப்புகள்**

தமிழகம் முழுவதும் நடத்தப்படு கின்ற இந்த கலைப் பயணத்திற்கு காவல்துறையிடம் அனுமதி வாங்கிக் கொடுத்தது, தமிழ்நாடு முசுலீம் முன் னேற்றக் கழகம்தான். அதேபோல தமி ழகம் முழுவதும் இந்த கலைக்குழுக்க ளுக்கு உணவளிப்பதும் இவர்கள் தான். தமிழ்நாடு முசுலீம் முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் திரு. செ.ஹைதர் அலி அவர்களை ஜெனிவா வில் நடந்த மனித உரிமை கருத்தரங் கில் கலந்து கொள்ள மக்கள் கண் காணிப்பகம் அனுப்பி வைத்தது. இது போன்ற கண் துடைப்பு வேலைகள் மூலம், முசுலீம் மக்களின் உரிமைகளுக் காகப் பாடுபடுவதைப் போல மக்கள் கண்காணிப்பகம் காட்டிக் கொள்ளும்.

**உலகமயமாக்கலுக்கு ஆதரவு**

இந்த அமைப்பு கடந்த ஆண்டு சித் திரவதைக்கு எதிராக ஒரு புத்தகத்தை வெளியிட்டது. அதில் அட்டைப்பட மாக ஈராக்கில் அபு கிரைப் சிறையில் நடந்த கொடூரங்களைப் படங்களாக போட்டிருந்தது. இதுமட்டுமின்றி அடிக்கடி வெளிநாட்டில் மனிதஉரிமை குறித்துப் பேசிவரும் இந்நிறுவனத் தின் இயக்குநர் ஹென்றி டிபேன் உலக மயமாக்கலை எதிர்த்துப் பேசியது மற் றும் இவர்களின் இரு மாத இதழான மனித உரிமை ''கண்காணி''யில் உலக மயமாக்கலை எதிர்த்து எழுதியதற்காக தனது நிதியை நிறுத்திக் கொண்டது, ஃபோர்டு பவுண்டேஷன். அதேபோல் வல்லரசு நாடுகளை விமர்சிக்கக் கூடாது எனவும் கட்டளையிட்டுள்ளது.



**''நாம் பன்னாட்டு நிறுவனங்களிடம் நிதி வாங்கிப் பணிபுரிகிறோம். அவர்கள் நிதியைப் பயன் படுத்தும் வரை அவர்கள் சொல்வதைத்தான் கேட்க வேண்டும்'' என மக்கள் கண்காணிப்பகத்தின் இயக்குநர் ஹென்றி டிபேன் ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளார்.**

தன்னை முற்போக்கு அமைப்பாகக் காட்டிக் கொண்ட நிறுவனம், மக்களின் பல்வேறு சிக்கலைத் தீர்த்து வைப்பதாக காட்டி கொண்ட இந்நிறுவனம் உலகமயமாக்கலை எதிர்ப்பதாகவும் காட்டிக் கொண்டது. இதை அறிந்த ஜெர்மனியைச் சேர்ந்த நிதி நிறுவனம் ஒன்று கடந்த மே மாதம் (22.5.05 முதல் 24.5.05) உதகையில் குன்னூருக்கு அருகில் உள்ள தியோடர் சர்ச்சில் மக்கள் கண்காணிப்பகத்தின் முழு நேரப் பணியாளர்களுக்கு உலகமயமாக்கலின் அவசியத்தை மூன்று நாள் முகாமாக நடத்தியுள்ளது. உலகமயமாக்கலை அவசியமாக ஆதரிக்க வேண்டும் என்பதே இந்த முகாமின் நோக்கம். இதற்கு சில ஊழியர்கள் மறுக்கவே தேவையை ஒட்டி பயன் படுத்திக் கொள்ளுங்கள் என்று பின் வாங்கி விட்டனர், அந்த நிறுவனத்தினர்.

இதுபற்றி ஹென்றி டிபேனிடம் கேட்டபொழுது, ''நாம் அவர்களிடம் நிதி வாங்கிப் பணிபுரிகிறோம். அவர்கள் நிதியைப் பயன்படுத்தும் வரை அவர்கள் சொல்வதைத்தான் கேட்க வேண்டும்'' என்று கூறியுள்ளார். மேலும் பெப்சி, கொக்கோ - கோலா போன்ற பன்னாட்டு நிறுவனங்களைப் புறக்கணிக்கக் கூடாது; அதை ஆதரிக்க வேண்டுமென ஜெர்மனியில் இருந்து வந்த கருத்தாளர்கள் கூறியுள்ளனர். இதை கேட்ட ஊழியர்களுள் சிலர் ''உலகமயமாக்கலினால் எந்த ஆபத்தும் இல்லை; பொருளாதார முன்னேற்றம், தீண்டாமை ஒழிப்பு என நன்மை தான் உள்ளது'' எனப் பேசத் தொடங்கியுள்ளனர்.

உலகெங்கிலும் நடந்து வருகிற மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்படுகின்ற மக்களையும்; மனித உரிமைகள் மீது ஆர்வம் கொண்டுள்ள ஜனநாயக சக்திகளையும், தங்களின் வலைப் பின்னலுக்குள் கொண்டு வருவதற்காகவே, அமெரிக்க அரசும், பன்னாட்டு நிறுவனங்களும் ''அமெரிக்க கண்காணிப்பகம்'', ''ஆசியா கண்காணிப்பகம்'' என ஒவ்வொரு நாட்டிலும் இவை போன்ற மனித உரிமை அமைப்புகளைக் கட்டி இயக்கி வருகின்றன. அத்தகைய ஏகாதிபத்திய திட்டத்தின் ஓர் அங்கம்தான் ஹென்றி டிபேன் நடத்தி வரும் ''மக்கள் கண்காணிப்பகம்'' மற்றும் ''சித்திரவதைக்கு எதிரான பிரச்சாரம்.''

அமெரிக்காவும் அந்நாடு திணிக்கும் தனியார்மய பொருளாதாரக் கொள்கைகளும்தான் உலகெங்கிலுமே மனித உரிமைகளைக் காலில் போட்டு மிதிப்பதில் முன்னணியில் இருக்கின்றன. யாரைச் சமரசமின்றி எதிர்க்க வேண்டுமோ, அவர்களிடமே காசு வாங்கிக் கொண்டு மனித உரிமைகள் பற்றிப் பேசும் ஹென்றி டிபேனின் மக்கள் கண்காணிப்பகம் என்பது நண்பன் வேடத்தில் இருக்கும் எதிரி. மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்படும் மக்கள் புரட்சிகர அமைப்புகளில் இணைந்து விடக் கூடாது; பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒரு வடிகால் ஏற்படுத்திக் கொடுத்து, அவர்களின் போராட்ட உணர்வை மழுங்கடிக்க வேண்டும்; அவர்களின் அரசியல் உணர்வைக் காயடிக்க வேண்டும் என்ற ஏகாதிபத்திய அரசுகளின் திட்டங்களை, அவர்கள் சொல்லுகிறபடியே செயல்படுத்தும் ஒரு பொம்மைதான் மக்கள் கண்காணிப்பகம்.

மக்களின் போராட்ட உணர்வை மழுங்கடிப்பது என்பது, அவர்களைப் ''பொது நல வழக்குகள்'' போன்ற சட்டவாத சகதிக்குள் மூழ்கடிப்பதாகும். தவறு செய்யும் அதிகாரிகளை, மனித உரிமை மீறல்களில் ஈடுபடும் போலீசு அதிகாரிகளை மக்களே தண்டிக்கும் உரிமையை மறுத்து, அவர்களை நீதிமன்றத்தின் மூலம் தண்டிக்க வேண்டும் எனக் கோரி, அந்த அதிகாரிகளை மக்களிடமிருந்து காப்பாற்றும் நரித்தந்திர வேலையைத்தான் ''மக்கள் கண்காணிப்பகம்'' போன்ற மனித உரிமை அமைப்புகள் செய்கின்றன.

இதன் மூலம் நீதிமன்றத்தின் மீதும், சட்டத்தின் மீதும் மக்கள் நம்பிக்கை இழந்துவிடாதபடி செய்து, அவற்றின் 'புனிதத்தை'க் காப்பாற்றுகின்றன. இச்சமூக அமைப்பையே மாற்ற வேண்டும் என்ற புரட்சிகர உணர்வு மக்கள் மனதில் தோன்றிவிடாதபடி, அவர்களைச் சட்டவாத சமரசவாதிகளாக மாற்றுகின்றன. இப்படி முதலாளித்துவ சட்டம், நீதிமன்றத்தைப் பாதுகாக்கும் கேடயமாக இருப்பதால்தான், ''மக்கள் கண்காணிப்பகம்'' போன்ற அமைப்புகளை முதலாளித்துவ பத்திரிகைகள் புகழ்ந்து எழுதி, அவைகளுக்கு மக்களிடம் விளம்பரத்தைத் தேடிக் கொடுக்கின்றன. இந்தப் பசுத்தோல் போர்த்திய புலிகளுக்குச் சிவப்புச் சாயம் பூசி, அரசியல் அரங்கில், மக்கள் மத்தியில் ஒரு அங்கீகாரத்தைப் பெற்றுத் தரும் அயோக்கியத்தனமான வேலையை சி.பி.ஐ., சி.பி.எம். கட்சிகள் செய்கின்றன.

நம்மிடம் இருந்து கொண்டே நம்மை காட்டிக் கொடுக்கும் இந்த எட்டப்பர்களிடமிருந்து நமது மக்களைப் பாதுகாக்க வேண்டும். சிசுக் கொலை, பொது சுகாதாரம், சிறு சேமிப்பு, சுய உதவி குழுக்கள், மனித உரிமை எனப் பல வடிவத்தில் மக்களைச் சிறு குழுக்களாக, நிறுவனங்களாகப் பிரிக்கும் இந்நிறுவனங்கள், இதன் மூலம் வர்க்க ஒற்றுமையைச் சீர்குலைக்கும் வேலையைச் செய்து வருகின்றன. வேலையில்லா இளைஞர்களுக்கு வேலை கொடுப்பதாகக் கூறிக் கொண்டுள்ள இந்நிறுவனங்கள், படித்தவர்களை முழு அடிமையாக வைத்துள்ளன. இதற்காகவே, சமூக சேவையில் இளநிலை, முதுநிலை பட்டப்படிப்புகளும் (B.S.W./M.S.W.) நமது நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அரசு கொடுக்க வேண்டிய வேலையை, படித்த வேலையில்லா இளைஞர்கள் கேட்கக் கூடாது என்பதே இவர்கள் நோக்கம்.

அன்றோ ஒரு எட்டப்பன், ஒரு சாக்சன் துரை. இன்றோ சில பன்னாட்டுக் கம்பெனிகள்; பல எட்டப்பர்கள். இவர்களை இனம் கண்டு விரட்டியடிப்போம்.

**• ஏகலைவன்**

www.padippakam.com

## வாசகர் கடிதம்

❍ போலீசு துறையைக் கலைக்கக் கோரும் மும்பை மக்களின் போராட்டம் மிகச் சரியானது. சென்னையில் வழிப்பறி கும்பலாக, கொள்ளைக் கூட்டமாக, பிளாச்சிமடா கோக் ஆலையின் காவல் நாயாக உள்ள போலீசு துறையைக் கலைத்து, மக்கள் தமது அதிகாரத்தை ஏந்திச் சுழற்றும் மக்கள் சர்வாதிகார மன்றங்களைக் கட்டியமைக்கும் நாளை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

**– தளபதி சண்முகம், சென்னை.**

❍ விதிவிலக்கின்றி அனைத்து மத அமைப்புகளும், சட்டம், போலீசு, இராணுவம் போன்ற அதிகார அமைப்புகளும், குடும்ப அமைப்பும், ஆணாதிக்கமும் வெவ்வேறு வகையில் பெண்ணுக்கு விலங்கிடுகின்றன. பொருளாதார சுதந்திரமும் பெண்களுக்கு அதிகாரமும் அளிக்கும் புரட்சிகர சமுதாயத்தில் மட்டுமே பெண்ணடிமைத்தனம் ஒழிக்கப்படும் என்பதை உணர்த்தும் விதமாக முசுலீம் தனிநபர் சட்ட சீர்திருத்தம் பற்றிய கட்டுரை அமைந்துள்ளது. போலீசு பற்றிய கட்டுரையானது போராட்ட உணர்வூட்டுவதோடு எளிய நடையில் அமைந்துள்ளது.

**– ஜீவா, சென்னை.**

❍ பாக்தாத் பொறியாளர் புஷ்ஷிற்கு எழுதிய பகிரங்கக் கடிதம், அமெரிக்க பயங்கரவாதத்தின் கோரமுகத்தை வெளிச்சம் போட்டுக் காட்டியது. இக்கடிதத்தின் ஊடாக நீங்கள் இன்னமும் அமெரிக்க பயங்கரவாதிகளுக்கு எதிராகப் போராடவில்லையா என்று அவர் கேட்கிறார். நமது போராட்டங்கள் மூலம் இதற்கு நாம் பதில் சொல்லியே தீரவேண்டும்.

**– எங்கெல்ஸ், கும்மிடிப்பூண்டி.**

❍ புத்ததேவ் பட்டாச்சார்யாவின் ஒப்புதல் வாக்குமூலம், சி.பி.எம். கட்சியின் யோக்கியதையைப் பறைசாற்றுகிறது. இனி இவர்கள் முதலாளிகளுக்குப் பாதிப்பு இல்லாத வகையில் சிரிப்பாய் சிரிக்கும் போராட்டம், ஒப்பாரி வைக்கும் போராட்டம், படுத்துக் கொண்டு குறட்டை விடும் போராட்டம், மொட்டையடித்து நாமம் போட்டுக் கொள்ளும் போராட்டம், பின்னால் நடக்கும் போராட்டம் எனத் தீவிரமாகப் போராடுவார்கள். இந்த மோசடிப் பேர்வழிகளுக்கு இன்னும் எதற்கு செங்கொடி?

**– தர்மராசு, திருச்சி.**

❍ பாப்பாபட்டி – கீரிப்பட்டி வன்கொடுமைக்கு எதிரான புரட்சிகர அமைப்புகளின் போராட்ட அறைகூவல் சாதிவெறியர்களுக்குச் சவுக்கடி கொடுப்பதாக அமைந்துள்ளது. மே.வங்க போலி கம்யூனிஸ்டு முதல்வரின் ஒப்புதல் வாக்குமூலம், உறக்கத்திலிருக்கும் சி.பி.எம். கட்சி அணிகளை உசுப்பிவிடும். தலித் அடையாளத்தைக் கேடாகப் பயன்படுத்தும் திடீர் பணக்கார கிரிமினல் பேர்வழி ஆதிகேசவனை, உழைக்கும் தலித் மக்கள் தண்டிக்க வேண்டும் என்ற அறைகூவல் மிகச் சரியானது.

**– இரா. கணேசன், சாத்தூர்.**

❍ நாம் தகர்த்தெறிய வேண்டியது கோக் முதலான பன்னாட்டுக் கம்பெனிகள் மட்டுமல்ல; இந்தியாவின் அடிமை அநீதி மன்றங்களையும்தான் என்பதை உணர்த்தும் வகையில் அட்டைப்படக் கட்டுரை அமைந்துள்ளது. தேர்தல் கமிசனின் நடுநிலை நாடகத்தையும், ஜெயாவின் பணநாயகத்தையும் எதிர்க்கட்சிகளின் ஒட்டாண்டித்தனத்தையும் அம்பலப்படுத்திக் காட்டிய காஞ்சி – கும்மிடிப்பூண்டி இடைத்தேர்தல் பற்றிய கட்டுரை சிறப்பு.

**– புதியவன், கிருஷ்ணகிரி.**

❍ நாடு மீண்டும் காலனியாக்கப்பட்டு வருவதையும், கங்காணிக்கும் நாய்களான போலி கம்யூனிஸ்டுகள் குரைப்பதற்கு மேல் வேறெதுவும் செய்யாமல் காங்கிரசு கயவாளிகளுக்கு கைக்கூலி வேலை செய்வதையும் தலையங்கம் எடுப்பாக அம்பலப்படுத்திக் காட்டியது.

**– அப்பு, மதுரை.**

❍ நாடு மீண்டும் காலனியாக்கப்பட்டு வருவதையும் இந்துத்துவ எதிர்ப்பு என்ற பெயரில் காங்கிரசு துரோகிகளுக்கு போலி கம்யூனிஸ்டுகள் முட்டுக் கொடுத்து வருவதையும் ஓராண்டு காங்கிரசு ஆட்சியின் 'சாதனை' யிலிருந்து தலையங்கம் எடுப்பாக உரைத்தது. கோக் ஆலைக்கு எதிரான புரட்சிகர அமைப்புகளின் போராட்ட அறைகூவல் மிகச் சரியானது; இன்றியமையாதது.

**– சுடர், சென்னை.**

❍ ரத்தன் டாடாவும் அசிம் பிரேம்ஜியும் உண்மையான நாட்டுப்பற்றாளர்கள் என்று வாக்குமூலம் அளித்துள்ள மே.வங்க முதல்வரின் விசுவாசத்தைக் கண்டு தரகு முதலாளிகள் மெய்சிலிர்த்துப் போவார்கள். தன்மானமுள்ள சி.பி.எம். அணிகள் அக்கட்சியிலிருந்து வெளியேறிவிட்டால் மரியாதையாவது மிஞ்சும். இல்லையேல் துரோகிப் பட்டம்தான் கிடைக்கும்.

**– கதிரவன், சென்னை.**

## "பொதுத்துறையை அழிக்காதே! "பெல்" நிறுவனத்தின் பங்குகளைத் தனியாருக்கு விற்காதே!" — கண்டன ஆர்ப்பாட்டம்

**நவரத்தினரங்கள் என்றழைக்கப்படும் இந்தியாவின் மிகப் பெரிய அரசுத்துறை நிறுவனங்களுள் ஒன்றான பாரத மிகுமின் நிறுவனத்தின் ("பெல்") அரசுப் பங்குகளில் 10 சதவீதத்தைத் தனியாருக்கு விற்றுவிட அண்மையில் காங்கிரசு கூட்டணி அரசு அறிவித்துள்ளதை எதிர்த்து கடந்த ஜூன் 6-ஆம் தேதியன்று திருச்சி "பெல்" ஆலை வாயிலருகே பாய்லர் பிளாண்ட் ஒர்க்கர்ஸ் யூனியன் தலைமையில் ம.க.இ.க., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகள் இணைந்து கண்டன ஆர்ப்பாட்டத்தையும் தொழிலாளர் குடியிருப்புப் பகுதியில் தெருமுனைக் கூட்டங்களையும் நடத்தின. பாய்லர் பிளாண்ட் ஒர்க்கர்ஸ் யூனியனின் பொதுச் செயலாளர் தோழர் நாராயணசாமி தலைமையில் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தில் தோழர் காளியப்பன் (ம.க.இ.க.) சிறப்புரையாற்றினார்.**

**இலாபமீட்டும் பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளைத் தனியாருக்கு விற்க மாட்டோம் என்று வாக்குறுதி அளித்து ஆட்சிக்கு வந்த காங்கிரசு கட்சி, இப்போது தொழிலாளர்களின் முதுகில் குத்துவதையும், ஏற்கெனவே பால்கோ, மாடர்ன் பிரட், துறைமுகங்கள் முதலானவற்றைத் தனியாருக்கு விற்றதால் ஏற்பட்ட கோரமான விளைவுகளை விளக்கியும், இக்கேடுகெட்ட ஆட்சிக்கு முட்டுக் கொடுத்துவரும் போலி கம்யூனிஸ்டுகளை அம்பலப்படுத்தியும், தனியார்மய – தாராளமயத் தாக்குதலுக்கு எதிராக தொழிலாளர்கள் புரட்சிகர அமைப்புகளில் அணிதிரண்டு போராட வேண்டிய அவசியத்தை விளக்கியும் முன்னணியாளர்கள் உரையாற்றினர்.**



**திரளான தொழிலாளர்கள் பங்கேற்ற இந்த ஆர்ப்பாட்டமும் தெருமுனைக் கூட்டங்களும் தொழிலாளர்களிடம் போராட்ட உணர்வூட்டி புதிய நம்பிக்கையை விதைத்தன.**

*– பு.ஜ. செய்தியாளர், திருச்சி*

Owned and Published by R. SHANMUGA RAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024. Editor: R. SHANMUGA RAJ.

www.padippakam.com

PUTHIYA JANANAYAGAM
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER NO.42648/85
Regn.No.TN/PMG(CCR)/621/03-05

**மறியல் போராட்டப் பிரச்சார இயக்கத்தையொட்டி புரட்சிகர அமைப்புகள் வெளியிட்டுள்ள கேலிச் சித்திரங்கள்.**
**ஓவியங்கள்: தோழர் முகிலன், ம.க.இ.க.**

